Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 235 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆடி 03, வெள்ளி 19.07.2013

**MULTI TIMBER DEALERS**
மல்ரி மர விற்பனை நிலையம்
கொழும்பு விலையில் கிளிநொச்சியில்...
மொத்தமாகவும் சில்லறையாகவும்
புதிய மக்கள்வங்கி முன்பாக, 79/2, A9 வீதி, கிளிநொச்சி.

தொடர்புகளுக்கு:
077 2612452, 077 3357333
077 3322993, 021 2283829
Fax : 0212283829
அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும், ஒப்பந்தகாரர்களுக்கும், வியாபாரிகளுக்கும் விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

**இந்தியா**

பக். 06
கவிஞர் வாலி காலமானார்

**உலகம்**

பக். 07
புதியவகை டைனோசர் கண்டுபிடிக்கப்பட்டது

**விளையாட்டு**

பக். 23
சிக்கினார் சங்வான்

# பரப்புரைப் போரில் குதிக்க தயாராகின்றன கட்சிகள்

## ஓகஸ்ட் முதல் வாரத்தில் ஆரம்பம்; ஏற்பாடுகள் தீவிரம்

கொழும்பு, ஜூலை 19
வடக்கு, வடமேல், மத்திய ஆகிய மாகாணசபைத் தேர்தல்களுக்கான வேட்புமனுத் தாக்கல் செய்யும் திகதி முடிவடைந்த கையோடு தேர்தல் பிரசாரப் போரை முன்னெடுப்பதற்கு பிரதான அரசியல் கட்சிகள் தயாராகி வருகின்றன.

இதற்கென கட்சிகள் ஒவ்வொன்றும் பிரசாரக் குழுக்களை அமைத்துள்ளதுடன், தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரிக்கும் பணிகளிலும் முழுவீச்சுடன் ஈடுபட்டு வருகின்றன.

மூன்று மாகாண சபைகளுக்குத் தேர்தல் நடைபெற்றாலும், வடக்குத் தேர்தலே அனைத்துத் தரப்பினரினதும் கவனத்தை ஈர்த்துள்ளது.

எனவே, ஓகஸ்ட் முதலாம் வாரம் முதல் ஆளுந்தரப்பு, ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி., ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றின் உயர்மட்ட பிரமுகர்கள், பிரசாரப் படையணியுடன் வடக்குக்கு விரையவுள்ளனர்.

இவ்வாறு வடக்குத் தேர்தல் களம் நோக்கி வெவ்வேறு திகதிகளில் படையெடுக்கும் அரசியல் கட்சிகள், சுமார் இரு வாரகாலம் அங்கு நிலை கொண்டு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய ஐந்து முனைகளிலும் கட்டம் கட்டமாகத் தேர்தல் பிரசாரச் சமரை முன்னெடுக்கவுள்ளன.

> " தேர்தல் திகதி நெருங்கும் தறுவாயில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் தலைவர்கள் வடக்குக்குச் சென்று சூறாவளிப் பிரசாரங்களில் ஈடுபடவுள்ளனர்.

எதிர்வரும் 25 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள வேட்புமனுத்தாக்கல் செய்யும் திகதி ஓகஸ்ட் முதலாம் திகதியுடன் முடிவடைகின்றது.

தேர்தல் திகதி நெருங்கும் தறுவாயில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் தலைவர்கள் வடக்குக்குச் சென்று சூறாவளிப் பிரசாரங்களில் ஈடுபடவுள்ளனர்.

அதேவேளை, தமது கோட்டையான வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஓகஸ்ட் இரண்டாம் திகதி முதல் பிரசாரங்களை ஆரம்பிக்கவுள்ளது. அரசுக்கும் கூட்டமைப்புக்குமிடையில் கடும் போட்டி நிலவும் என எதிர்பார்க்கப்படுவதால் வடக்குத் தேர்தல் களம் படு சூடாக இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில், வேட்புமனுத் தாக்கல் விவகாரங்களை கண்காணிப்பதற்கென தேர்தல் திணைக்களத்தின் உயர்மட்டக் குழுவொன்று எதிர்வரும் 25 ஆம் திகதி வடக்குக்கு வரவுள்ளது. (த-சி)

## தேர்தல் முறைப்பாடுகளை ஆராயக் குழு

யாழ்ப்பாணம், ஜூலை 19
தேர்தல்கள் தொடர்பான முறைப்பாடுகளை ஆராய்வதற்காகச் சர்வ கட்சிக் குழு நியமிக்கப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளை பதிவு செய்வதற்குத் தனியானதொரு பிரிவை அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டுப் பிரிவு அரசியல் கட்சிகள் மற்றும் பொது மக்களால் செய்யப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கும். மேலும் அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் ஒவ்வொருவர் உள்ளடங்கிய சர்வ கட்சிக் குழுவும் நியமிக்கப்படவுள்ளது. (த-5)

## போதைப் பாக்குடன் மாணவர்கள் மாட்டினர் பாடசாலை அதிபரிடம்

### யாழ். புறநகர்ப் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 19
யாழ். நகரப் பாடசாலை மாணவர்களுக்கு போதையூட்டிய பாக்குகள் இனந்தெரியாத குழு ஒன்றினால் தொடர்ச்சியாக விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

இந்தப் போதையூட்டிய பாக்குகளைப் பயன்படுத்திய 14 வயது மாணவர்கள் 10 பேர் பாடசாலையில் கையும்மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு எச்சரிக்கப்பட்டு அனுப்பப்பட்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் யாழ். புறநகர்ப் பகுதி பாடசாலை ஒன்றின் மாணவர்களே இவ்வாறு

தொடர்ச்சி: பக்கம் 21

## இந்தியத் துணைத் தூதருடன் மாவை எம்.பி. அவசர சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 19
கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா, இந்தியத் துணைத் தூதுவர் வி.மாகாலிங்கத்தை நேற்று யாழ்ப்பாணத்தில் சந்தித்துப் பேசினார்.

வடமாகாணசபைக்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராக முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவுசெய்யப்பட்டுள்ள நிலையில், யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

அவர் நேற்று மதியம் திடீரென இந்தியத் துணைத் தூதுவரைச் சந்தித்து நீண்ட நேரம் கலந்துரையாடியுள்ளார். இந்தச் சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பாகச் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் தகவல் வெளியிடவில்லை.

இந்தச் சந்திப்புக் குறித்து துணைத் தூதுவர் வி.மகாலிங்கத்திடம் கேட்டபோது, இது வழமையான சந்திப்பு என்று மட்டும் பதிலளித்தார்.

வடமாகாண சபைத் தேர்தலில் முதன்மை வேட்பாளராக மாவை.சேனாதிராசா நிறுத்தப்படுவதை இந்தியா விரும்பவில்லை என்று முன்னர் செய்திகள் வெளியான பின்னணியில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. (த-5)

## இலங்கை விவகாரத்தில் பிரிட்டன் இரட்டை வேடம்

### மனித உரிமைகள் அமைப்புகள் சாடல்

கொழும்பு, ஜூலை 19
பிரிட்டன் 8 மில்லியன் பவுண்ஸ் பெறுமதியான ஆயுதங்களை இலங்கைக்கு வழங்கியதன் மூலம் மனித உரிமைகள் தொடர்பான விடயங்களில் இரட்டை வேடம் போடுவதாக மனித உரிமைகள் அமைப்புக்கள் குற்றம் சாட்டியுள்ளன.

மனித உரிமைகளை மீறும் நாடுகளின் பட்டியலில் உள்ள நாடுகளுக்கு 13.2 மில்லியன் பவுண்ஸ் பெறுமதியான இராணுவ மற்றும் புலனாய்வுக் கருவிகளுக்

தொடர்ச்சி: பக்கம் 21

## சனல் - 4 கெலும் மக்ரே இலங்கை வர அனுமதி

கொழும்பு, ஜூலை 19
'மோதல் தவிர்ப்பு வலயம்' மற்றும் 'இலங்கையின் கொலைக் களங்கள்' போன்ற ஆவணப் படங்களை இயக்கிய சனல்- 4 ஊடகவியலாளர் கெலும் மக்ரே, இலங்கையில் இடம்பெறவுள்ள பொதுநலவாய மாநாடுகள் தொடர்பான செய்திகளைச் சேகரிப்பதற்கு தடையில்லை என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கையில் இடம்பெறவுள்ள பொது நலவாய உச்சி மாநாட்டின் போது செய்தி சேகரிக்க வரும் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் தொடர்பான பின்னணிகள் ஆராயப்பட்ட பின்னரே அவர்கள் இலங்கைக்குள் அனுமதிக்கப்படுவது தொடர்பில் முடிவெடுக்கப்படும் என்று ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து பிரிட்டன் வெளிவிவகார பிரதியமைச்சர் அலிஸ்ரயர் பேர்ட், பொதுநலவாய அமைப்பின் அனுமதியைப் பெற்ற

தொடர்ச்சி: பக்கம் 21

## திருமலை மாணவர் கொலை: படையினரின் மறியல் நீடிப்பு

திருகோணமலை,ஜூலை 19
திருகோணமலையில் 2006 ஆம் ஆண்டில் ஐந்து மாணவர்கள் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பொலிஸ் விசேட அதிரடிப்படையின் 12 அதிகாரிகளின் விளக்கமறியலும் நீடிக்கப்பட்டுள்ளது.

அவர்களை, எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் ஏ.எல்.அஸ்ஹர் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபர்கள் திருகோணமலை நீதிவான் நீதிமன்

தொடர்ச்சி: பக்கம் 21

## வேட்பாளர் தெரிவில் நேற்றும் முடிவில்லை

### கூட்டமைப்பினர் இன்றும் கூடுவர்

யாழ்ப்பாணம், ஜூலை 19
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதில் இழுபறி நிலை நீடிக்கிறது. அங்கத்துவ கட்சிகளின் ஆசனப் பங்கீடு தொடர்பான கூட்டம் நேற்று முடிவின்றி ஒத்தி வைக்கப்பட்டது.

வடமாகாண சபைத் தேர்தலில் ஒவ்வொரு மாவட்டத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நிறுத்தப்படும் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கும் கூட்டமைப்பிலுள்ள பங்காளிக் கட்சிகளிடையே ஆசனங்களைப் பகிர்வது தொடர்பிலும் யாழ்ப்பாணத்திலுள்ள தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் கடந்த இரண்டு தினங்களாகக் கலந்துரையா

தொடர்ச்சி: பக்கம் 21

# ‘13’ க்கு எதிரான வழக்கு ஒக்.1 வரை ஒத்திவைப்பு

கொழும்பு,ஜூலை 19

அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை ஒக்ரோபர் முதலாம் திகதிக்கு உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் புதன்கிழமை ஒத்திவைத்தது.

இந்த மனுவை விசாரணைக்கு ஏற்க வேண்டுமென்பதற்கான ஆதாரங்களை அன்றையதினம் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் உயர்நீதிமன்றம் தெரிவித்தது.

இந்தமனு,பிரதமநீதியரசர்மொஹான் பீரிஸ் தலைமையிலான நீதியரசர்களான கே.ஸ்ரீபவன் மற்றும் ஈவா வனசுந்தர ஆகியோர் முன்னிலையில் ஆராயப்பட்டது.

மனுவில், சட்டமா அதிபர், சபாநாயகர் சமல் ராஜபக்ஷ மற்றும் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மனுதாரரான நீர்கொழும்பைச் சேர்ந்த எம்.எஸ். பத்மபிரிய சிறிவர்த்தன, அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தம் தனது உரிமைகளை மீறுவத னால் அது வெறுமையானதாகும் அதுமட்டுமன்றி வறிதானதாகும் என்று நீதிமன்றம் வெளிப்படுத்த வேண்டுமெனவும் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

> இந்தத் திருத்தத்தில் மக்களின் உரிமை மீறப்படும் ஒரு அம்சம் உள்ளது என்றும் மனுதாரர் சுட்டிக் காட்டியுள்ளார்.

உயர் நீதிமன்றம் தீர்மானித்ததன் பிரகாரம் இந்தத் திருத்தம் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்களால் அங்கீகரிக்கப்படவில்லை. எனவே, இந்தத் திருத்தத்தில் மக்களின் உரிமை மீறப்படும் ஒரு அம்சம் உள்ளது என்றும் மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உள்நாட்டிலிருந்தும் வெளியிலிருந்தும் கொடுக்கப்பட்ட அழுத்தம் காரணமாகவே இந்தத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது என அவர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

உள்நாட்டில் பயங்கரவாதிகளின் பயமுறுத்தலாலும் அயல் நாடும் வல்லரசுமாகிய இந்தியாவிடமிருந்து வந்த போர்ப் பயமுறுத்தலாலும் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது என்றும் மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார். (த)

# மன்னார் மக்களின் தேவைகள்; மஹிந்தவுடன் நேற்றுப் பேச்சு



கொழும்பு,ஜூலை 19

மன்னார் மாவட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்தவுக்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

ஜனாதிபதிக்கும் மன்னார் மாவட்ட முக்கியஸ்தர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பில் மன்னார் மறை மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு தொகுதி குருமார் மற்றும் பிரதேச அரசியல்வாதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் மன்னார் மாவட்ட மக்களின் பிரச்சினைகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

''அரசு தொடர்ந்து வடபிராந்தியத்தில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும். ஏனெனில் மதம், இனக் குழுமம் அல்லது பூகோள அமைவிடம் என்பவற்றைப் பொருட்படுத்தாமல் ஒவ்வொரு இலங்கையரும் ஒரேவிதமான வசதிகளை அனுபவிக்க வேண்டும்'' என ஜனாதிபதி இந்தச் சந்திப்பின்போது ஜனாதிபதி தெரிவித்தார்.

எனினும் இந்தச் சந்திப்பில் மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

> இந்தச் சந்திப்பில் மன்னார் மாவட்ட மக்களின் பிரச்சினைகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அமைச்சர்களான ஜீ.எல்.பீரிஸ், பஸில் ராஜபக்ஷ, நிமல் சிறிபாலடி சில்வா, மைத்திரிபால சிறிசேன, சுசில் பிரேமஜயந்த, பிரதி அமைச்சர் சரத்குமார குணரத்ன மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். (த)

# சட்டவிரோத மீன்பிடியைத் தடுக்க முல்லைத்தீவில் கடும் நடவடிக்கை



யாழ்ப்பாணம், ஜூலை 19

முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் தொடர்ந்தும் எடுக்கப்படும் எனத் தெரிவித்த கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஜெ.சுதாகரன் நேற்றுமுன்தினம் சுருக்கு வலைத் தொழிலில் ஈடுபட்டவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் வலைகளும் எரித்தழிக்கப்பட்டன எனக் குறிப்பிட்டார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாகச் சட்டவிரோத உபகரணங்களைப் பாவித்து தொழில் நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்காகக் கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தினால் திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு கொக்கிளாய் கடற்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட திடீர் தேடுதல் நடவடிக்கையில் சுருக்கு வலை பாவித்து மீன்பிடியில் ஈடுபட்ட இரண்டு முஸ்லிம்களின் படகுகள் கைப்பற்றப்பட்டன அதிலிருந்து தொழில் நடவடிக்கையில் ஈடுபட்ட 7 பேரும் கைது செய்யப்பட்டனர். இவர்களிடமிருந்த படகுகள், இயந்திரங்கள் என்பனவும் கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தினால் கைப்பற்றப்பட்டன.

இவர்களை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் நேற்று முற்படுத்திய போது ஏழுபேருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அத்துடன் சுருக்கு வலைகள் அழிக்கப்பட்டதுடன் படகுகள், இயந்திரங்கள் என்பன அரசுடமையாக்கப்பட்டுள்ளன. (த-5)

# ரணிலுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியோருக்கு பொது மன்னிப்பு

கொழும்பு, ஜூலை 19

ஐக்கிய தேசியக் கட்சியின் யாப்பை மீறிச் செயற்பட்டு ஒழுக்காற்று விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட உள்ளூராட்சி உறுப்பினர்கள் சிலர் நேற்றுப் பொது மன்னிப்புப் பெற்றுக்கொண்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் வைத்து கட்சியின் தலைவர், பொதுச் செயலாளர் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் இவர்கள் பொது மன்னிப்புப் பெற்றுக் கொண்டனர்.

கட்சித் தலைமையகமான சிறிகொத்தா தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்களும் ஹைட் பார்க் கூட்டத்துக்குச் சென்ற உள்ளூராட்சித் தலைவர்களுமே இவ்வாறு மன்னிப்புப் பெற்றுக் கொண்டனர்.

அத்துடன், எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலிலும் எதிர்காலத்திலும் கட்சியை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்வதாகப் பொது மன்னிப்புப் பெற்ற உள்ளூராட்சி உறுப்பினர்கள் வாக்குறுதி அளித்துள்ளனர். (த)

# அரசுக்கு ஆதரவாகச் செயற்படுகிறது! கூட்டமைப்பு எம்.பியின் பத்திரிகை

## சக எம்.பியான சுமந்திரன் குற்றச்சாட்டு

கொழும்பு,ஜூலை 19

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் ஒருவருக்குச் சொந்தமான பத்திரிகை ஒன்று தற்போது கூட்டமைப்புக்கு எதிராகச் செய்திகளை வெளியிட்டு வருவதாக கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சியாக இயங்க வேண்டுமாயின் அரசுக்கு ஆதரவளிப்பதைத் தவிர வேறு வழியில்லை எனவும், இதனால் குறித்த ஊடகம் கூட்டமைப்புக்கு எதிரான செய்திகளை வெளியிட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை ஊடகவியலாளர் தொழில் ஒன்றியத்தினால் நேற்று முன்தினம் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இந்த நிகழ்வில் ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவும் பங்கேற்றிருந்தார்.



சில தனியார் ஊடகங்கள் அரசுக்கு அஞ்சிச் செயற்பட்டு வருவதாகவும் தங்களது இருப்பை உறுதி செய்யும் நோக்கில் சில தனியார் ஊடகங்கள் அரசின் கருத்துக்களைப் போற்றி வருவதாகவும் சுமந்திரன் அங்கு மேலும் கூறியுள்ளார்.

தற்போதைய அரசுக்கு எதிரான கருத்துக்களை வெளியிட அநேக ஊடக நிறுவனங்கள் அஞ்சுவதாகவும் பாதுகாப்புச் செயலாளர் தொடர்பில் கேலிச் சித்திரங்கள் வெளியாவதில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (த)

# தெரணியகலையில் இருந்து 20 பொலிஸார் இடமாற்றம்

கொழும்பு,ஜூலை 19

தெரணியகல பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 20 பொலிஸ் உத்தியோகத்தர்கள் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றப்பட்டுள்ளனர்.

சேவை அடிப்படையிலும் குறித்த பொலிஸ் நிலையத்தில் நீண்ட காலம் கடமையாற்றியோர் என்ற காரணத்தினாலேயே இவர்கள் இடமாற்றப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தோட்ட மேற்பார்வையாளரின் இடமாற்றத்தை அடுத்து தெரணியகல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அண்மையில் இடமாற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த)

# புலிகளைத் தீவிரவாதிகளாக்கும் படத்துக்குத் தடை கோரி மனு

'மெட்ராஸ் கபே' என்ற படத்துக்குத் தடை விதிக்கக் கோரி நாம் தமிழர் கட்சி சார்பில் சென்னை பொலிஸ் ஆணையரிடம் மனு அளிக்கப்பட்டுள்ளது. ஹிந்திப் பட இயக்குநர் ஷோதித் ஸ்ரீகர் இயக்கத்தில் உருவாகியுள்ள 'மெட்ராஸ் கபே' படத்தில்கதாநாயகனாகஜான்ஆபிரகாம்நடித்துள்ளார். இந்தப் படத்தில் விடுதலைப்புலிகளைத் தீவிரவாதிகளாகத் தவறாகச் சித்தரித்துள்ளதாகவும், இதனால் படத்துக்குத் தடை விதிக்க வேண்டும் என்றும் கோரி இயக்குநர் சீமானின் நாம் தமிழர் கட்சி சார்பில் சென்னை மாநகரப் பொலிஸ் ஆணையரிடம் மனு அளிக்கப்பட்டுள்ளது. இதேபோல், ‘மெட்ராஸ் கபே’ படத்துக்கு தடை விதிக்கக் கோரி தமிழீழ மாணவர்கள் கூட்டமைப்பும் சென்னை பொலிஸ் ஆணையரிடம் மனு கொடுத்துள்ளது. (த)

### வலிகிழக்கு பிரதேச செயலர் பிரிவில்

## தேசிய அடையாள அட்டை பெற 1, 830 விண்ணப்பங்கள் ஏற்பு

அச்சுவேலி, ஜூலை 19



வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் தேசிய அடையாள அட்டை பெறுவதற்கான நடமாடும் சேவையில் 1830 விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு அடையாள அட்டைகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் கடந்த மாதம் முற்பகுதியில் மூன்று தினங்கள் நடமாடும் சேவை நடத்தப்பட்டன. இரண்டு தினங்கள் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்திலும் ஒரு நாள் ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டபத்திலும் நடைபெற்றன.

மூன்று தினங்களும் நடைபெற்ற நடமாடும் சேவையில் புதிதாக தேசிய அடையாள அட்டை பெறுவதற்கான 234 விண்ணப்பங்களும், பழுதடைந்த எழுத்துக்கள் அழிந்த மற்றும் பெயர் மாற்றம் என்ற வகையில் 1347 விண்ணப்பங்களும், கைதவறியது என்ற வகையில் 249 விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

நடமாடும் சேவையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு கூடிய விரைவில் புதிய தேசிய அடையாள அட்டைகள் பெற்றுக் கொடுக்கப்படும் என்று பிரதேச செயலர் எம்.பிரதீபன் தெரிவித்தார். (ஒ-11)

# மீனவருக்கு உயிர்காப்பு அங்கிகள்

### ஆழ்கடலில் தொழில் செய்வோருக்கு கிளிநொச்சியில் 80 பேருக்குக் கையளிப்பு

பரந்தன், ஜூலை 19



கிளிநொச்சி மாவட்டத்தில் ஆழ்கடலில் மீன்பிடித்தொழிலில் ஈடுபடும் மீனவர் களுக்கு உயிர்காப்பு அங்கிகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான சகல ஒழுங்குகளையும் மேற் கொண்டுள்ள கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள அதிகாரிகள் பயனாளிகளைத் தெரிவு செய்வதில் தற்போது ஈடுபட்டுள்ளனர்.

கடந்த மாதம் தென்னிலங்கைக் கடற் பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பல மீனவர்கள் திடீரென வீசிய சுழற்காற்றில் சிக்குண்டு உயிரிழந்ததைத் தொடர்ந்து மீனவர்களின் உயிரைக் காப்பாற்றுவதற்கான நடவடிக்கையை எடுத்துள்ள கடற்றொழில் அமைச்சர் ஆழ்கடலில் தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கு உயிர்காப்பு அங்கிகளை வழங்க முன்வந்துள்ளார்.

இதனடிப்படையில் கிளிநொச்சி மாவட் டத்தில் ஆழ்கடல் தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கு வழங்குவதற்கென 80 அங்கிகள் அமைச்சரினால் வழங்கப்பட்டுள்ளன. இதற்குரிய பயனாளிகளைத் தெரிவு செய்வதில் காரிகள் ஈடுபட்டுள்ளனர். இதைத் தொடர்ந்து படிப்படியாக ஏனைய மீனவர்களுக்கும் அங்கிகள் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை ஏனைய மாவட்டங்களிலும் ஆழ்கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கு உயிர்காப்பு அங்கிகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று கடற்றொழில் அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க-115)

## மாணவர்கள் 15 பேர் இந்தியாவுக்கு பயணம்

யாழ்ப்பாணம், ஜூலை 19

தமிழ்த்தினப் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாம் இடம் பெற்று பதக்கங்கள் பெற்ற வடமாகாண மாணவர்கள் 36 பேரில் 15 பேர் பயிற்சி நெறிகளுக்கான புலமைப் பரிசில் பெற்று இந்தியா செல்லவுள்ளனர்.

> சங்கீதம், நடனம் உள்ளிட்ட அழகியல் பாட ஆசிரியர்கள் வடக்கில் 500 பேர் உள்ளனர். அவர் களில் சிலரும் வழமை போன்று இந்த முறையும் புலமைப் பரிசில் அடிப்படையில் இந்தியா செல்லவுள்ளனர்.


எதிர்வரும் ஓகஸ்ட் மாத விடுமுறையில் இந்தியா செல்லும் இவர்கள் 3 வாரங்கள் அங்கு பயிற்சிகள், கருத்தமர்வுகளில் கலந்து கொள்வர் என்று வடமாகாண ஆளுநர் தெரிவித்தார்.

தேசிய மட்ட தமிழ்த் தினப் போட்டியில் 50 வகையான போட்டிகளில் வடமாகாணத்தைச் சேர்ந்த மாணவர்கள் 25 போட்டிகளில் முதலிடம் பெற்று தங்கம் வென்றனர். மற்றும் வெள்ளி, வெண்கலம் என்று மொத்தமாக 36 பேர் பதக்கம் பெற்றனர். அவர்களில் 15 பேர் இந் தியா செல்ல தெரிவு செய்யப்படவுள்ளனர்.

தவிர சங்கீதம், நடனம் உள்ளிட்ட அழகியல் பாட ஆசிரியர்கள் வடக்கில் 500 பேர் உள்ளனர். அவர்களில் சிலரும் வழமைபோன்று இந்த முறையும் புலமைப் பரிசில் அடிப்படையில் இந்தியா செல்லவுள்ளனர். அவர்களும் அங்கு 3 வாரங்கள் தங்கியிருந்து பயிற்சி பெறவுள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (வ-4)

## சின்ன வெங்காய விதைகளுக்கு குடாநாட்டில் அதிக கிராக்கி

யாழ்ப்பாணம், ஜூலை 19



யாழ்.குடாநாட்டில் சின்ன வெங்காய விதைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதன் காரணமாக அவற்றுக்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

இந்த விதை வெங்காயத்துக்கு ஏற்பட்ட கிராக்கியால் வெங்காயச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் சிரமப்படுகின்றனர்.

சின்ன வெங்காயச் செய்கையை குடாநாட்டில் முழுமையாக மேற்கொள்வதற்கு விதை வெங்காயம் இல்லாததால் இந்தச் செய்கை அதிகமாக பாதிக்கப்பட்டுக் காணப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, வடமராட்சிப் பகுதியில் விவசாயிகள் தம்மிடம் இருந்த விதை வெங்காயத்தை விற்பனை செய்தும் வருகின்றனர்.

அந்தர் (50 கிலோ) 9 ஆயிரத்து 500 ரூபாவுக்கு மேல் விற்கப்படுகின்றது.

விதை வெங்காயத்தை அதிக விலைக்குப் பெற்று வெங்காயச் செய்கையில் ஈடுபடவும் விவசாயிகள் தயக்கம் காட்டி வருகின்றனர். அதே வேளை வேறு சில விவசாயிகள் வேதாள வெங்காயச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். வேதாள வெங்காயப் பயிர்கள் தற்போது நல்ல நிலையில் காணப்படுவ தாக விவசாயத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரி வித்தார். இதேவேளை, குடா நாட்டில் வெங்காயத்துக்கு ஏற்பட்டுள்ள கிராக்கியால் சந்தைகளில் அவற்றின் விலை திடீரென எகிறிக் காணப்படுகின்றது. திருநெல்வேலி சந்தையின் நேற்றைய நில வரப்படி ஒரு கிலோ வெங்காயத்தின் விலை 220 ரூபா வைத் தாண்டியுள்ளது. (வ-17)

### குசினிக் கம்பிகளை வளைத்து வீட்டில் புகுந்து நகைகள் 'அபேஸ்

தென்மராட்சி, ஜூலை 19

வீட்டிலுள்ளோர் ஆழ்ந்த உறக்கத்திலிருந்த வேளை சமையல் அறையின் ஜன்னல் கம்பிகளை வளைத்து உடைத்து உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த 3 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் மற்றும் பணம் ஆகியவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று நள்ளிரவு ஒரு மணியளவில் சாவகச்சேரி பெருங்குளத்தில் இடம்பெற்றது. நள்ளிரவு வேளையில் வீட்டுக்குள் ஆள் நடமாட்டத்தைக் கண்ட பெண் கூக்குரலிடவே பின் பக்கக் கதவு ஊடாக திருடர்கள் ஓடியதாகவும் சிறிது நேரத்தில் ஓட்டோ புறப்பட்டுச் சென்ற சத்தம் கேட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-9)

## அபராதம்

பளை, ஜூலை 19

சட்டவிரோதமாக கசிப்பு வைத்திருந்த பளை கோயில் வயல் வாசிக்கு கிளிநொச்சி நீதிமன்றில் 45 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பொது மக்கள் கொடுத்த இரகசியத் தகவலையடுத்து பரிசோதனை நடத்திய பளைப் பொலிஸார் கசிப்பு வைத்திருந்த நபரைக் கைது செய்த னர்.

அவரை நேற்றுமுன்தினம் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்திய போது வழக்கை விசாரித்த நீதிவான் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து 45 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.(வ-9)

## துன்புறுத்தலை எதிர்கொள்ளும் பேசாலை மீனவர் இந்தியா செல்லும் நிலை

### மன்னார் பிரதேசசபை உறுப்பினர் தெரிவிப்பு

மன்னார், ஜூலை 19

பேசாலை மீனவர்கள் கடலில் துன்புறுத்தல்களை எதிர்கொள்வதால் இந்தியாவுக்கு இடம்பெயரும் நிலை ஏற்பட்டுள்ளதாக மன்னார் பிரதேச சபை உறுப்பினரான கொன்சால்குலாஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில்;

மன்னார் பேசாலையில் 500 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் றோலர் படகு மூலமாக மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர். றோலர் படகு மூலமாக தொழில் செய்வதற்கு வழங்கப்பட்ட தினங்களிலேயே அவர்கள் அந்தத் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆனால் மன்னார் மாவட்ட கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் எமது மீனவர்களுடன் தேவையற்ற பிரச்சினைகளில் ஈடுபட்டு வருகின்றனர். புதுக்குடியிருப்புக் கிராமத்தைச் சேர்ந்த சகோதர இன மீனவர்களின் உதவியுடன் பேசாலை மீனவர்களைப் பிடித்து சட்ட நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இதனைப் பேசாலை மீனவ சமூகம் வன்மையாகக் கண்டிக்கின்றது. எமது கடற்பரப்பில் தினமும் பல ஆயிரக்கணக்கான இந்திய மீனவர்கள் றோலர் படகுகளில் வந்து மீன் பிடிக்கின்றனர். அது மட்டுமின்றி கற்பிட்டி, நீர் கொழும்பு, ஹெந்தல போன்ற இடங்களைச் சேர்ந்த மீனவர்களும் இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

ஆனால் பேசாலை மீனவர்கள் றோலர் படகு மூலமாக மீன் பிடித்தால் அவர்களைப் பிடிக்கும் மன்னார் மாவட்ட கடற்றொழில் உதவிப்பணிப்பாளர் தேவையற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார். குறித்த செயலை அவர் பக்கச் சார்புடன் மெற்கொண்டு வருகின்றார்.

இவருடைய குறித்த செயற்பாட்டினால் பேசாலையில் றோலர் படகு மூலமாகத் தொழிலில் ஈடுபட்டு வரும் 500 இற்கும் மேற்பட்ட மீனவக் குடும்பங்கள் தமது படகுகளில் வெள்ளைக்கொடிகளை ஏந்தியவாறு இந்தியாவுக்கு அகதிகளாகச் செல்ல வேண்டிய நிலை உருவாகியுள்ளது. (க-12)

## 'அவர் பறந்து போனாரே...?'

சாவகச்சேரி, ஜூலை 19

> கடன் சுமையினால் தலைமறைவான மூன்றாவது வர்த்தகர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

வியாபாரத்தில் ஏற்பட்ட கடன் சுமையிலிருந்து மீள முடியாத மேலும் ஒரு வர்த்தகர் திடீரெனத் தலைமறைவாகியுள்ளார். கடன் கொடுத்தவர்கள் தேடி அலைகின்றனர். வர்த்தகர் குடும்பத்துடன் இரவோடிரவாக வெளியேறியதால் கடன் கொடுத்தவர்களும் வங்கிக் கடனுக்கு பிணை ஒப்பமிட்டவர்களும் அவரைத் தேடி அலைகின் றனர்.

வர்த்தகரின் குடும்பத்தினர் தங்கியுள்ள இடத்தை அறிந்து கொண்ட சிலர் அங்கு ஓடோடிச் சென்றனர். அவர்களுக்கு கிடைத்த செய்தி ''அவர் வெளிநாடு சென்று விட்டார்'' என்பதே.

அவரது வர்த்தக நிலையம் கடந்த சனிக்கிழமை திறக்கப்பட்டிருந்தது. ஆனால் திங்கட்கிழமை திறக்கப்படவில்லை. கடன் கொடுத்தவர்கள் உறைந்து போய் விட்டனர். பின்னர் விசாரித்ததில் அவர் வெளிநாட்டுக்குப் பறந்து போய் விட்டார் என்பது தெரிய வந்தது.

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் கடந்த ஒரு மாத காலத்தினுள் வியாபாரத்தில் ஏற்பட்ட கடன் சுமையினால் தலைமறைவான மூன்றாவது வர்த்தகர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-9)

# கொழும்புத்துறை பகுதிகளில் திருடர் தொல்லை அதிகரிப்பு



யாழ்ப்பாணம் , ஜூலை 19

கொழும்புத்துறை, ஈச்ச மோட்டை பகுதிகளில் திருடர்களின் கைவரிசை தற்போது அதிகரித்துள்ளது.

குறித்த பகுதிகளில் இரவு வேளைகளில் திருடர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளதால் பிரதேச மக்கள் அச்சத்துடன் இரவைக் கழித்து வருகின்றனர். அண்மையில் கொழும்புத்துறை சுவாமியார் வீதியிலும் மற்றும் ஈச்ச மோட்டை பிரதான வீதியிலும் உள்ள இரண்டு நிலையங்கள் மீது திருடர்கள் தமதுத கைவரிசையைக் காட்டி அங்கிருந்த பெறுமதி மிக்க பொருள்களைக் களவாடிச் சென்றுள்ளனர்.

அதனை விட மற்றும் 2 வீடுகளில் இரவில் திருடர்கள் திருட முயன்றவேளை வீட்டிலுள்ளோர் கூக்குரல் போட்டதும் திருடர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

அத்துடன் நண்பகல் வேளையில் மக்கள் நடமாட்டம் குறைந்த சமயம் பார்த்து மோட்டார் சைக்கிளில் வரும் திருடர்கள் வீதியால் செல்லும் பெண்களின் தங்க நகைகளை அபகரித்து செல்லும் நடவடிக்கையிலும் ஈடுபடுகின்றனர். (வ-17)

# மூடப்பட்ட விற்பனைக் கிளைகளை உடன் திறந்து சேவை வழங்குக

## மாவட்ட கூ.ஆணையாளர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூலை 19

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் மூடப்பட்ட இரண்டு கிளை விற்பனை நிலையங்களை உடனடி யாக மக்களின் வசதிகருதி திறக்க வேண்டும் என்று மாவட்டக் கூட்டுறவு ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் கேட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நட்டத்தில் செயற்பட்ட கிளை நிலையங்களை மூடியது. கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுமதி இன்றி சங்கம் எந்தக் கிளை விற்பனை நிலையங்களையும் மூடுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

தற்போது குருநகர் பகுதியில் உள்ள 31, 32 ஏ இலக்க கிளை நிலையங்கள் இரண்டையும் உடனடியாக திறக்க வேண்டும். அத்துடன் சங்கப் பணியாளர்களுக் கான 5850 ரூபா மாதாந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவும் கிளை நிலையங்களின் வியாபார இலாபத்துக்கு அமைய வழங்கப்பட வேண்டும்.

இந்தக் கொடுப்பனவை அதற்கான சுற்றறிக்கைக்கு அமைய உடனடியாக பணியாளர்களுக்கு வழங்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

அதனைவிட பணியாளர்களின் மேலதிக நேர வேலைக் கொடுப்பனவு, விடுமுறை காலக் கொடுப்பனவுகளும் உடனடியாக வழங்கப்பட வேண்டும் என்றும் ஆணையாளர் தெரிவித்துள்ளார். கடந்த செவ்வாய்க் கிழமை சங்கப் பணியாளர்களுடன் இடம்பெற்ற சங்க அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலில் ஆணையாளர் கலந்து கொண்டதோடு இறுதியில் சங்கத்தின் சபா மண்டபத்தில் இடம்பெற்ற விசேட இயக்குநர் சபைக் கூட்டத்திலும் கலந்துகொண்டார். (வ-17)


## தவறிவிட்டது

தர்மலிங்கம் மோகனதாஸ் என்பவருடைய I PHONE வெள்ளை நிற தொலைபேசி ஒன்று பருத் தித்துறை பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெ டுத்தவர்கள் தயவுசெய்து தொடர்பு கொள் ளவும்.

தொடர்பு:- 0755105494

## தேவை

யாழ்ப்பாணத்தில் கடைக்கணக்குகள் எழுதத் தெரிந்த ரவல் ஏஜென்சியில் வேலை செய்ய விருப்பம் உள்ள ஓரளவு ஆங்கில அறிவு Ms Word, Ms Excel தெரிந்தவர்கள் தேவை.

Mbo. 0041 78 905 9080 (ச/30999) (6.2.3)

Email: zhtravel55@gmail.com


# வீதித் தடைக்குட்பட்டோர் பதிவு மேற்கொள்ள அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 19

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு ஆலயச் சூழலில் வீதித்தடைக்குட்பட்ட பகுதிக்குள் வசிப்பவர்களுக்கான வாகன அனுமதிப் பத்திரம் வழங்குவது தொடர்பாக வீதித்தடைக்குட்பட்டோர் தமது குடும்ப அட்டைகளை உடன் யாழ் மாநகர சபையில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

குறித்த பகுதிகளில் உள்ளவர்கள் தமது குடும்பப் பதிவுகளை மேற்கொண்டால் மட்டுமே தடை செய்யப்பட்ட பகுதிக்குள் உள்ளவர்களுக்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்படும்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் தாமதமின்றி தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-7)

# வீடுகள் தீக்கிரை; விஷமிகளின் அட்டகாசம்

கொடிகாமம், ஜூலை 19

வரணி வடக்கு கிராம அலுவலர் பிரிவில் சைவக்குடியிருப்பு பிரதேசத்தில் விஷமிகளால் வைக்கப்பட்ட தீயால் இரண்டு குடியிருப்பு வீடுகளின் வேலிகள் முற்றாக எரிந்து சாம்பலாகி உள்ளன. அத்துடன் பனை வடலிகள், எல்லைக் கதியால்கள் என்பனவும் தீக்கிரையாகின.

பிரதேசவாசி ஒருவர் அந்தவேளை அங்கு சென்றதால் ஏனைய வீட்டு வேலிகளுக்கும் தீ பரவாமல் தடுக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

இந்தப் பிரதேசத்தில் வசித்த குடும்பஸ்தர்கள் பலர் கடந்த காலபோர் நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வசிக்கின்றனர். இந்த நிலையில் குறித்த பிரதேசம் சட்டவிரோத மண்கடத்தல், விறகுக்காக பூவரசு மரங்களைத் தறித்து எடுத்துச் செல்லல், இறைச்சிக்காக கால்நடைகளைக் கடத்தல், சட்டவிரோத மதுபாவனை என்பன இடம்பெறும் இடமாக மாறியுள்ளதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

கொடிகாமம் பொலிஸார் பிரதேச சிவில் பாதுகாப்புக் குழுவினருடன் இணைந்து இவற்றை தடுக்க முன்வர வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(வ-122)


## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA VACANCY

Further to the advertisement published for the Post of Stenographer Gr.II (English), amendment is given below;

**POST- STENOGRAPHER GR.II (ENGLISH)**

(Vacancies exist at the University of Jaffna and Vavuniya Campus of the University of Jaffna)

**Registrar**

(c/10543)(3.6.11)

## ST. JOHN'S COLLEGE, JAFFNA



**The Late Mr. T. Gunaseelan**

| | |
|---|---|
| Teacher | 1958 - 1971 |
| Sectional Head | 1972 - 1980 |
| Vice Principal | 1980 - 1985 |
| Principal | 1985 - 1987 |

Passed away in Canada on 16th July.

A Service of Thanksgiving & Remembrance for his life and service will be held **on Friday 19th July 2013, at 8:15 a.m.** at St. John the Baptist's Church, Chundikuli

(C/10546) **The Principal**

## Edexcel
## HND in Electrical and Electronics Engineering

*யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக இந்த கற்கை நெறியினை CAPSTONNE Engineering College ஆரம்பிக்கின்றது.*

*இக் கற்கைநெறியினை 2 வருடங்களில் பூர்த்தி செய்து, பின்னர் B.Eng அல்லது B.Sc. In Elecrical and Electronics Engineering என்ற Degree யினை மேலும் ஒரு வருட கல்வியின் பின் யாழ்ப்பாணத்திலேயே பெற்றுக்கொள்ள முடியும்.*

**இது சம்பந்தமான மேலதிக தகவல்களைப் பெறுவதற்கு 021 720 1190 அல்லது 077 787 4645 இனை அழைக்கவும்.**



*இக்கற்கை நெறியினை அறிமுகம் செய்யும் கருத்தரங்கு*

***21.07.2013 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கும்***

***23.07.2013 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கும்***

No. 01, 2nd Lane, Power House Road **இலுள்ள எமது அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.**

**எமது சிரேஷ்ட விரிவுரையாளரும், பணிப்பாளருமாகிய**

**திரு.சி.மயூரன்**

**அவர்கள் இக்கருத்தரங்கை நடத்தவுள்ளார்.**

(சி/1002)(5.6)

**CAPSTONNE**
**ENGINEERING COLLEGE**

No. 01, 2nd Lane, Power House Road, Jaffna.
021 720 1190, 077 787 4645

## விசேட கருத்தரங்கு
## க.பொ.த உயர்தரம்- 2013
## யா/மகாஜனக் கல்லூரி- தெல்லிப்பழை

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரபல்யமான வளவாளர்களினால் 2013 பரீட்சைக்குத் தோற்றும் உயர்தரப்பிரிவு மாணவர்களுக்கு இலகுவழி கற்றல் நுட்பங்களையும், பரீட்சை வழிகாட்டல்களையும் வழங்குவதை நோக்கமாகக் கொண்டு விசேட கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

| திகதி | பாடம் | வளவாளர்கள் |
|---|---|---|
| 22.07. திங்கட்கிழமை காலை9.00மணி | இணைந்த கணிதம் உயிரியல் | திரு. P. விமலநாதன் திரு. இ. குகானந்தன் |
| 23.07. செவ்வாய்க்கிழமை காலை8.30மணி | பௌதீகவியல் | திரு.S. சோதிலிங்கம் |
| 26.07. வெள்ளிக்கிழமை காலை8.30மணி | இரசயானவியல் | திரு. S. சிவத்திரன் திரு. S. DIAS |

அனுசரணை வழங்குபவர்:- கலாநிதி.சி. சிவபவாநந்தா மகாஜனன் பொறியியலாளர், இங்கிலாந்து.

மேற்படி கருத்தரங்கில் கலந்து கொண்டு பயனைப் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மகாஜனக் கல்லூரி கல்வி அபிவிருத்தி நிறுவனம். பழைய மாணவர் சங்கம்

## ஆஸ்பத்திரி வளாகத்தில் நாயால் கடியுண்ட இருவர்

தென்மராட்சி, ஜூலை 19

வைத்தியசாலை வளாகத்தில் நாயால் இருவர் கடியுண்டனர். இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை சாவகச்சேரியில் இடம்பெற்றது.

நேற்று நடைபெற்ற கிளினிக்குக்காக அதிகாலையில் வருகை தந்த மீசாலை கிழக்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் சண்முகம் (வயது -60) என்பவரும், விடுதியில் தங்கியுள்ள சகோதரியைப் பார்வையிட வந்த பூநகரியைச் சேர்ந்த இராசா சுரேசன் (வயது-21) என்பவருமே நாயால் கடியுண்டவர்களாவர்.

இதேவேளை காலையில் பாடசாலைக்குச் சென்ற மாணவரொருவரும் தெரு நாயால் கடியுண்டுள்ளார். வரணி இயற்றாலையைச் சேர்ந்த சிவரூபன் ஜர்சன் (வயது-9) என்ற மாணவரே நாயால் கடியுண்டவராவார். கட்டாக் காலி நாய்களால் கடியுண்ட மூவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (வ-9)

## சிறுப்பிட்டி வீதிகள் இரண்டுக்கு விமோசனம்

அச்சுவேலி, ஜூலை 19

கடந்த 40 வருடங்களுக்கு மேலாகத் திருத்தி அமைக்கப்படாத சிறுப்பிட்டிப் பகுதி வீதிகள் இரண்டு திருத்தி அமைக்கப்படவுள்ளன. சிறுப்பிட்டி தெற்கு கலை ஒளிக் கிராமத்துக்குச் செல்லும் சிறுப்பிட்டி பாடசாலை வீதி, சிறுப்பிட்டி கலை ஒளிவீதி ஆகிய இரண்டு வீதிகளுமே புனரமைக்கப்படவுள்ளன.

மெல்லியன் ரூபா செலவில் இரண்டு வீதிகளையும் திருத்தி அமைப்பதற்கான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு திருத்தி அமைப்பதற்கு உரிய கற்களும் பறிக்கப்பட்டு வருகின்றன.

நீண்ட காலமாக திருத்தி அமைக்கப்படாமல் இருந்து வந்த வீதிகள் இரண்டையும் திடீரென திருத்தி அமைப்பதற்குரிய வேலைகள் நடைபெற்றுவருவது அப்பகுதி மக்கள் மத்தியில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (வ-11)

## இலகு கடனுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 19

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து வெளிநாடு சென்ற, சென்று திரும்பிய மற்றும் செல்லவுள்ள குடும்பங்களுக்கு 'ரட்ட விதுவோ' திட்டத்தின் கீழ் சமுர்த்தி வங்கிகளால் இலகு கடனாக மூன்று லட்சம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இக்கடனுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தத்தமது பிரிவு சமுர்த்தி வங்கிச் சங்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்படுள்ளது. (வ-9)

## உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன்பாக இடைஞ்சலாக தரித்து நிற்கும் ஓட்டோக்கள்

### பாடசாலைச் சமூகம் விசனம்

வலி.வடக்கு, ஜூலை 19


உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன்பாகத் தரித்து நிற்கும் ஓட்டோக்களினால் கல்லூரியில் கல்வி கற்கும் மாணவிகள் சிரமங்களுக்கு உள்ளாகி வருவதாக பெற்றோராலும் மற்றும் கல்லூரி நிர்வாகத்தினாலும் தெரிவிக்கப்படுகின்றது.



உடுவில் பிரதேச சபைக்கு உட்பட்ட இந்தப் பகுதியில் தினமும் கல்லூரி பிரதான வாயிலுக்கு அருகில் அந்த ஓட்டோக்கள் தரித்து நிற்தாகவும் இதனால் கல்லூரிக்கு வரும் மாணவிகளும் ஏனையவர்களும் சிரமங்களுக்கு உள்ளாகி வருவதாகவும் மாணவிகளும் பொதுமக்களும் தெரிவிக்கின்றனர்.

குறித்த ஓட்டோ தரிப்பிடத்தை கல்லூரியில் இருந்து சுமார் 50 மீற்றர் தூரத்தில் உள்ள பச்சு வீதிக்கு அருகில் அமைப்பதன் மூலம் கல்லூரிக்கும் பாதிப்பில்லாது ஓட்டோக்களுக்கும் பாதிப்பில்லாத நிலை ஏற்படும் எனவும் பெற்றோரால் தெரிவிக்கப்படுகின்றது. (வ-86)

## காணொலி மூலமான பயிற்சி யாழ்.செயலகத்தில் ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஜூலை 19

யாழ்.மாவட்டத்தில் முதல் தடவையாக யாழ்.மாவட்ட செயலகத்தில் காணொலி ஊடகம் மூலமான பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருவதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

இந்தப் பயிற்சி நெறியானது கொழும்பிலுள்ள இலங்கை அபிவிருத்தி நிர்வாக பயிற்சி நிறுவகத்தில் (சிலிடா) இருந்து நேரடி காணொலி ஊடகக் காட்சி ஊடாக திறமை வாய்ந்த வளவாளர்களால் வழங்கப்படுகிறது.

யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் கிராம அலுவலர்களின் திறமையைக் கட்டியெழுப்பும் நோக்குடன் யாழ்.மாவட்டச் செயலகத்தில் கடந்த 15 ஆம் திகதி முதல் இந்தப் பயிற்சிநெறி இடம்பெற்று வருகின்றது.

பயிற்சி நெறியின் முதல் பிரிவில் ஒவ்வொரு பிரதேச செயலகத்திலிருந்தும் இரு கிராம அலுவலர்கள் வீதம் கலந்துகொண்டு பயிற்சி பெற்று வருகின்றனர்.

இதுபோன்ற பயிற்சிகள் இனிவரும் காலங்களிலும் அனைத்து மாவட்ட அரச உத்தியோகத்தர்களும் பயன் பெறும் வகையில் அமையும் என்பதுடன் அரச உத்தியோகத்தர்கள் கொழும்பு சென்று நேரடியாகப் பயிற்சி பெறுவதில் ஏற்படும் சிரமங்கள் நீங்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (வ-5)

### பாடசாலை மாணவருக்கான

## உணவு விநியோகத்தில் கவனம் செலுத்தவும்

### கூ.அ.உதவி ஆணையாளர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 19

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவுக்கான உணவுப் பொருள்கள் விநியோகத்தின்போது அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் கேட்டுக்கொண்டுள்ளார்.



யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற சங்கப் பணிப்பாளர்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்படும் உணவுப் பொருள்கள் யாவும் தரமானவை என்பது உறுதி செய்யப்பட்ட பின்னரே அவற்றை வழங்க வேண்டும்.

இந்த உணவுப் பொருள்கள் சம்பந்தப்பட்ட பாடசாலைகளாலும் தரமானவை என உறுதி செய்யப்பட வேண்டும்.

இந்த விநியோகத்தின் போது சங்கங்கள் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் ஆணையாளர் கேட்டுள்ளார். (வ-17)

## நெடுந்தீவில் கலாசார விழா

யாழ்ப்பாணம், ஜூலை 19

நெடுந்தீவு பிரதேச கலாசார பெருவிழா எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது. நெடுந்தீவு பிரதேச செயலர் ஆ.சிறி தலைமையில் காலை 9 மணிக்கு தேவானந்தா கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் மூத்த கலைஞர்களுக்கான கௌரவம் உட்பட சிறப்பு உரைகள், கலாசார நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (வ-7)

## புதைந்திருந்த சொப்பிங் பையினுள் மறைந்து கிடந்த கைபேசிகள்

தென்மராட்சி, ஜூலை 19

கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போல, மண்ணுக்குள் புதைந்து கிடந்த சொப்பிங் பையை இழுத்து எடுத்த போது அதனுள் மூன்று புதிய கையடக்கத் தொலைபேசிகள் காணப்பட்டன.

இந்தச் சம்பவம் செவ்வாய்க்கிழமை மட்டுவில் வடக்கு அ.த.க பாடசாலையில் இடம்பெற்றது.

பாடசாலையில், சூழல் பாதுகாப்பு தினத்தையொட்டி செவ்வாய்க்கிழமை ஆசிரியர், மாணவர்களால் பாடசாலை வளாகம் துப்பரவு செய்யப்பட்ட வேளையில் அங்குள்ள மலசல கூடத்துக்கு அருகில் புதையுண்ட நிலையில் காணப்பட்ட சொப்பிங் பையை எடுப்பதற்காக மாணவர்கள் மண்ணைத் தோண்டி வெளியே எடுத்தனர். அதன்போது அதனுள் பெட்டிகளுடனும் அதனுடன் இணைந்த கருவிகளுடனும் மூன்று கையடக்கத் தொலைபேசிகளும், வேறு உபகரணங்களின் வெறும் பெட்டிகளும் காணப்பட்டன.

இந்த விடயம் தொடர்பாக அதிபர் ச.கிருஷ்ணன் அந்தப் பகுதி கிராம அலுவலர் க.வாமதேவனுக்கு அறிவித்தார். அவர் அங்கு வந்து பார்வையிட்டு அவற்றை பாதுகாப்பாக வைக்குமாறு கூறி உரியவர்கள் தேடி வந்தால் விவரங்களைப் பெற்ற பின்னர் பொலிஸ் நிலையத்தின் ஊடாக வழங்கலாமெனக் கூறிவிட்டுச் சென்றுள்ளார்.

நேற்றுமுன்தினம் காலை வரை எவரும் உரிமை கோரி வராததால் அதிபரும் கிராம அலுவலரும் அவற்றை சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். பாதுகாப்புக்காக அதனைப் புதைத்து வைத்தவர் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு கிராம அலுவலர் க.வாமதேவன் அறிவித்துள்ளார். (வ-9)

## முன்பள்ளியின் கதியோ மோசம்...!



தென்மராட்சி, ஜூலை 19

பழுதடைந்த கொட்டிலில் இயங்கும் கொடிகாமம் ஞானசூரியர் முன்பள்ளி தொடர்பாக பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர். கொடிகாமம் அரசினர் தமிழ் வித்தியாலய வளாகத்தில் அமைந்துள்ள முன்பள்ளி கொட்டிலில் 27 சிறார்கள் கல்வி கற்று வருகின்றனர். முன்பள்ளி கொட்டிலின் கூரையில் பொருத்தப்பட்டிருந்த தகரங்கள் சில இல்லாததால் மாணவர்கள் வெயிலில் கற்றல் செயற்பாட்டில் ஈடுபடவேண்டியுள்ளது. பாடசாலை வளாகத்தினுள் முன்பள்ளிக் கொட்டில் அமைந்துள்ளதால் அரச சார்பற்ற நிறுவனங்கள் எவையும் அதனைப் புனரமைக்க முன்வரவில்லை எனக் கூறப்பட்டது. (ஓ-9)

## உயர்தர மாணவருக்கான கருத்தரங்கு

தென்மராட்சி, ஜூலை 19

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் கல்விச் செயற்றிட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டப்பாடசாலைகளில் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான தமிழ்ப்பாட வழிகாட்டல் கருத்தரங்கு செவ்வாய்க்கிழமை யோகபுரம் மகா வித்தியாலயத்தில் நடத்தப்பட்டது.

சாவகச்சேரி லயன்ஸ் கழக உறுப்பினரும் கிளிநொச்சி கல்வி வலய தொழில் வழிகாட்டல் ஆசிரிய ஆலோசகருமான சு.வீரசுதாவின் வழிகாட்டலில் நடத்தப்பட்ட இக் கருத்தரங்கில் முழங்காவில் ம.வி., வேரவில் ம.வி., யோகபுரம் ம.வி. ஆகியவற்றைச் சேர்ந்த 75 க்கு மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றியதாக லயன்ஸ் கழக தலைவர் லயன் பி.தனிர்ராஜ் தெரிவித்துள்ளார். (வ-9)

# ராஜீவ்காந்தி கொலை விசாரணை; அறிக்கைகளைக் காணவில்லை

## இந்திய மத்திய உள்துறை அமைச்சு கைவிரிப்பு

புதுடில்லி, ஜூலை 19

ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக விசாரித்த வர்மா ஆணைக்குவின் அறிக்கைகளைக் காணவில்லை என்று இந்திய மத்திய உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

1991ஆம் ஆண்டு மே 21 ஆம்திகதிராஜீவ்காந்திகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக, விசாரிக்க நீதிபதி ஜே.எஸ்.வர்மா தலைமையிலான குழு நியமிக்கப்பட்டது. ராஜீவ்காந்தி கொலைக்கு பாதுகாப்புக் குறைபாடுகள் காரணமாக அமைந்ததா என்பதை ஆராய்வதற்காகவே இந்த விசாரணைக் குழு அமைக்கப்பட்டது.

அதன் பின்னர், ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக விசாரண நடத்த நீதிபதி ஜெயின் தலைமையிலான குழு நியமிக்கப்பட்டது.

இந்த இரண்டு குழுக்களும் சமர்ப்பித்த அறிக்கைகளை தம்மிடம் தரக்கோரி, இந்த வழக்கில் தூக்குத் தண்டனைக் கைதியாக உள்ள பேறறிவாளன், மத்திய தகவல் ஆணைக்குழுவிடம் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

அத்துடன், இந்த அறிக்கைகளின் பரிந்துரைகள் மீது மத்திய அரசு எடுத்த நடவடிக்கைகள் தொடர்பான பிரதிகள், விசாரணைக் குழுவின் ஆய்வு எல்லை என்பன குறித்த விவரங்களையும் அவர் கேட்டிருந்தார்.

அந்த மனுவை ஏற்றுக் கொண்ட ஆணைக் குழு, மனுதாரர் கேட்ட தகவல்களை வழங்குமாறு உள்துறை அமைச்சுக்கு உத்தரவிட்டது. ஆனால் இதுவரை மத்திய உள்துறை அமைச்சு அந்தத் தகவல்களை வழங்கவில்லை.

அதையடுத்து மத்திய தகவல் ஆணையத்தில் பேறறிவாளன் தரப்பில் மீண்டும் முறையிடப்பட்டது.

அதுகுறித்து மத்திய தகவல் ஆணைக்குழுவின் தகவல் ஆணையர் சுஷ்மா சிங் விசாரணை நடத்தினார்.

விசாரணைகளின் போது நீதிபதிகள் ஜெயின், வர்மா ஆகியோரின் அறிக்கைகள் எங்கு இருக்கின்றன என்று கண்டுபிடிக்கமுடியவில்லை. அதனால் தகவல் அளிக்க முடியவில்லை. தீவிர முயற்சி எடுத்து, நீதிபதி ஜெயின் குழுவின் அறிக்கையின் சில பகுதிகள் இருக்கும் இடத்தை மட்டும் கண்டு பிடித்துள்ளோம், ஆனால், நீதிபதி வர்மாவின் முழுமையான அறிக்கை எங்குள்ளது என்று கண்டுபிடிக்க முடியவில்லை" என்று உள்துறை அமைச்சின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் பேறறிவாளன் கேட்டுள்ள விசாரணை அறிக்கைகளின் பிரதிகள், அவற்றின் பரிந்துரைகள் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை விவரங்கள் ஆகியவற்றை, ஒரு வாரத்துக்குள் வழங்க வேண்டும் என்று தகவல் ஆணையர் சுஷ்மா சிங் உத்தரவிட்டுள்ளார்.(ற)

# கவிஞர் வாலி காலமானார்



சென்னை, ஜூலை 19

தமிழ் திரைப்பட பாடலாசிரியர் கவிஞர் வாலி நேற்று மாலை சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் காலமானார். அவருக்கு வயது 82.

நுரையீரல் தொற்றுநோய் காரணமாக கடந்த சில நாள்களாக சிகிச்சை பெற்றுவந்த அவருக்கு சுவாச கோளாறு ஏற்பட்டது.

அதனையடுத்து, செயற்கை சுவாசம் அளிக்கப்பட்டு வந்த அவருக்கு மருத்துவர்கள் தொடர்ந்து சிகிச்சை அளித்து வந்தனர். இந்நிலையில் சிகிச்சை பயனின்றி அவர் நேற்று மாலை உயிரிழந்தார்.

மறைந்த வாலிக்கு திரை உலகினரும் அரசியல் தலைவர்களும் இரங்கல் தெரிவித்துள்ளனர். (ற)

# திராவக விற்பனைகளை கண்காணிக்க வேண்டும்

புதுடில்லி, ஜூலை 19

இந்தியாவில் பெண்கள் மீது திராவகம் (அசிட்) வீசப்படுவதை குறைக்கும் முயற்சியாக, மத்திய அரசும் மாநில அரசுகளும் திராவக விற்பனையை கட்டுப்படுத்தி, கண்காணிக்க வேண்டும் என்று இந்திய உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

செல்லுபடியான அடையாள அட்டை வைத்திருப்பவர்களுக்கு மட்டுமே திராவகம் விற்கப்பட வேண்டும் என்றும் அவ்வாறான விற்பனைகள் பற்றி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட வேண்டும் என்றும் உயர்நீதிமன்றம் மேலும் கூறியுள்ளது.

இந்தியாவில் ஆண்டுக்கு சுமார் ஆயிரம் பேர் அளவில் திராவகத் தாக்குதலுக்கு உள்ளாவதாக கணக்கிடப்பட்டுள்ளது. பாதிக்கப்படுபவர்கள் பெரும்பாலும் பெண்களே. காதலர்களையும் கணவன்மாரையும் அல்லது தொழில் வழங்குநர்களையும் நிராகரிப்பவர்கள் மீதே இப்படியான திராவகத் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

உயர்நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை மனித உரிமை ஆர்வலர்கள் வரவேற்றுள்ளனர். (ற)




11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

நயினை மடியில்: 03.09.1936

நாயன்மார்கட்டு அரசடிப் பிள்ளையார் அடியில்: 19.07.2002

இராமநாதன் கோபாலபிள்ளை

திதி: பூர்வபட்ச ஏகாதசி

மண்ணில் நீரில்லை ஐயா ஈரமெல்லாம் என் கண்களுக்குள் ஐயா
இடிமின்னல் மின்னாது மழை வந்தால் போல் மரங்கள் அசையாமல் தென்றல் வந்தது போல்
உங்கள் மரணம் எங்களை அசைத்து விட்டது ஐயா
எதனை இழக்கக் கூடாதோ அதனை இழந்து விட்டோம் ஐயா
தர்மத்தின் வாழ்வு தன்னை சூது கவ்வும் தர்மம் மறுபடியும் வெல்லும்.

2/1, மூத்தவிநாயகர் வீதி,
கடுக்காயடி லேன், நல்லூர், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.



முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் - 17.08.1967

மறைவு - 19.07.2012

திருமதி ஆன்கலிஸ்ரா முரளிதரன்

(முன்னைநாள் ஆசிரியை - யா/புனித பத்திரிசியார் கல்லூரி)

தாயன்பும் ஆதரவும் தனயன் எனக்கில்லை
தலையான உறவாம் தாயுறவை நான் இழந்தேன்
தூய தாய், தெய்வத் துணையின்றி தந்தையோடு
துணையாக என்னைவிட்டு தெய்வத் தாய்
சென்றது எங்கே?

செம்பிகலட்டி, இடைக்காடு,
அச்சுவேலி.

சஜித்—மகன்
முரளி—கணவர்

(30630)(5.6.11)


# எல்லையில் படைகளை குவிக்கிறது இந்தியா



புதுடில்லி, ஜூலை 19

சீன எல்லையில் நிலவும் அசாதாரண சூழ்நிலையை கருத்தில் கொண்டு எல்லை முழுவதும் வீரர்களை குவிக்க இந்திய மத்திய அரசு முடிவு எடுத்துள்ளது.

பிரதமர் தலைமையிலான பாதுகாப்புக்கான அமைச்சரவை குழுக் கூட்டத்தில் அதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

எல்லையில் புதிய படைப் பிரிவை ஏற்படுத்தவும், கூடுதலாக 50 ஆயிரம் வீரர்களை பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தவும் அமைச்சரவை குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ரூபா 195,000 கோடி செலவில் இந்த திட்டம் செயற்படுத்தப்பட உள்ளதாகவும் கூறப்படுகின்றது.

திட்டத்தின் ஒரு பகுதியாக மேற்கு வங்க மாநிலம் பணாகரில் படைப் பிரிவுக்கு புதிய தலைமையகம் ஏற்படுத்தப்பட உள்ளது. அங்கு விமானப் படை வீரர்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பர். பிகார் மற்றும் அசாமில் இரண்டு மண்டல அலுவலகங்களும் அமைக்கப்பட உள்ளன. சுமார் 1.3 லட்சம் வீரர்களை கொண்டு இந்த அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட இருப்பதாவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எல்லைப் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் குறித்து இந்தியா - சீனா இடையே பேச்சுக்கள் தொடங்கவுள்ள நிலையில், மத்திய அரசு இந்த முடிவை எடுத்துள்ளது. (ற)


நினைவழியா நாள்கள் 31

ஆயிரம் ஆண்டுளொய்
அகிலம் போற்றும் அன்னையர்கள்
ஆங்காங்கே உதித்திடினும்
உன் ஜனனம் போல் வருமோ!

ஈன்றவுடன் பெரிதுவக்க
சான்றோராய் கேட்டவள்
என்றிலக்கியங்கள் கூறும் அன்னை
நீ தானே புரியலையோ!

எனக்கென்ன நேரிடும்
என் இறைவன் இருக்கையிலே
என்ற உந்தன் விசுவாசம்
கண்டும் அவன் இரங்கலையோ!

வித்தரொய் உன் மக்கள்
சாதனைகள் பல புரிந்து
கற்றவராய் திளைக்க முன்னர்
கனவாகி மறைந்தாயோ!

ஆருயிராய் நீ நேசித்த
உன் அன்புக் கணவரவர்
அழுதழுது தேம்புவதை
அங்கிருந்து பாராயோ!



திருமதி ஜேற்றூட் ஜீவனா ஜெராட் ராஜன்

உதிர்வு: 19.06.2013

என்றும் மறவா நினைவுகளுடன்
கணவர், பிள்ளைகள், உறவினர்கள்.

விநாசித்தம்பி வீதி,
கோயிற்குடியிருப்பு, சாவகச்சேரி.
தொ.பே. 077 918 2938


## 13 வயதுக்குட்பட்டோருக்கு வருகின்றது தடை

புதுடில்லி, ஜூலை 19

13 வயதிற்கும் குறைவான சிறுவர்கள் பேஸ்புக், டுவிட்டர், ஆர்குட் போன்ற சமூக வலைத்தளங்களை பார்க்க அனுமதி இல்லை என்று புதுடில்லி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சமூக வலை தளங்களை சிறுவர்கள் பார்வையிடுவதை தடுக்கவும், இவைகளில் ஆபாச காட்சிகள் இடம்பெறுவதை தடுக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி, டெல்லி உயர் நீதிமன்றத்தில் செய்யப்பட்டிருந்த மனு தொடர்பிலேயே உயர்நீதிமன்றம் இவ்வாறு தீர்ப்பு வழங்கியுள்ளது. (ற)

## அமெரிக்காவின் தாக்குதலில் அல்-குவைதா தலைவர் சாவு

பேர்லின், ஜூலை 19
யேமனில் அமெரிக்கா நிகழ்த்திய ஆளில்லா விமானத் தாக்குதலில் அல்-குவைதா இயக்கத்தின் துணைத் தலைவர் சயீத் அல்-ஷெஹ்ரி உட்பட இருவர் உயிரிழந்துள்ளனர்.
அதனை உறுதிப்படுத்தியுள்ள அந்த அமைப்பு, "துணைத் தலைவர் சயீத் அல்-ஷெஹ்ரி மற்றும் மற்றொரு முக்கிய தலைவர் அகா அபு அல்-அஸ்டி ஆகியோர் அமெரிக்கா நடத்திய ஆளில்லா விமானத் தாக்குதலில் உயிரிழந்துள்ளனர்" என்று தெரிவித்துள்ளது.
சயீத் அல்-ஷெஹ்ரி உயிரிழந்து விட்டதாக முன்னரும் யேமன் பல தடவைகள் தகவல் வெளியிட்டிருந்த போதும், இம் முறையே அல்-குவைதா அமைப்பு அவரது உயிரிழப்பை உறுதிப்படுத்தியுள்ளது. (ற)



ஸ்பெயினில் பிரபல்யம் வாய்ந்த விளையாட்டுக்களில் ஒன்று காளை அடக்குதல். வருடாவருடம் நடத்தப்படும் காளை அடக்கும் போட்டிகள் வெகுகோலாகலமாக நடத்தப்படும். கடந்தவாரம் ஸ்பெயினின் பம்ப்லோனா நகரில் காளை அடக்கும் போட்டி ஒன்றின் காட்சி.

## தலிபான்களை எதிர்த்தமைக்காகவே மலாலா சுடப்பட்டார்

லண்டன், ஜூலை 19
பெண்களின் கல்விக்காக குரல் கொடுத்தமைக்காக மலாலா மீது துப்பாக்கிச் சூடு நடத்தவில்லை என்று தலிபான் அமைப்பைச் சேர்ந்த ஒருவர் மலாலாவுக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.
பெண்களின் கல்வி மற்றும் உரிமைகள் தொடர்பாக கருத்துக்களை வெளியிட்டுவந்த மலாலா கடந்த ஆண்டு தலிபான்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகினார்.
இந்தநிலையில் தலிபான் அமைப்பைச் சேர்ந்த ஆட்னன் ரஷீத் என்பவர் மலாலாவுக்கு கடிதம் எழுதியுள்ளார். அதில், மலாலா தலிபான் அமைப்பை விமர்சித்தமைக்காகவே சுடப்பட்டார்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## பிரிட்டனின் ஆயுத ஏற்றுமதி; நாடாளுமன்றில் சர்ச்சை

லண்டன், ஜூலை 19
ஆயுத ஏற்றுமதி தொடர்பான பிரிட்டனின் தற்போதைய நடைமுறைகளில் மாற்றம் அவசியமானது என்று வலியுறுத்தியுள்ள அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரிட்டனின் ஆயுத ஏற்றுமதிகள் தொடர்பாகவும் கேள்வி எழுப்பியுள்ளனர்.
ஆயுதங்களை ஏற்றுமதி செய்வதற்காக 3,000 அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில், மனித உரிமை மீறல்கள் இடம் பெற்று வரும் நாடுகளுக்கும் ஆயுதங்களை ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.
சீனா, ஈரான் மற்றும் சவூதி அரேபியா போன்ற நாடுகளுக்கும் ஆயுதங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளமை தொடர்பாகவும், இலங்கைக்கு ஆயுதங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டமை தொடர் பாகவும் அவர்கள் நாடாளு மன்றில் கேள்விகளை எழுப்பினர்.
இந்த விடயங்கள் பாரிய சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது என்று கொன்சர்வேட்டிவ் பாராளுமன்ற உறுப்பினர் சேர் ஜோன் ஸ்டான்லி தெரிவித்துள்ளார். (ற)

## ஸ்நோடனுக்கு நோபல்

### பரிந்துரைத்தார் சுவீடன் பேராசிரியர்

ஸ்டொக்ஹோம், ஜூலை 19
சுவீடன் நாட்டை சேர்ந்த பேராசிரியர் ஒருவர் அமெரிக்காவின் உளவு நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களைப் பகிரங்கப்படுத்திய ஸ்நோடனின் பெயரை நோபல் பரிசுக்கு பரிந்துரைத்துள்ளார்.
அமெரிக்காவின் இரகசிய உளவுநடவடிக்கைகள் தொடர்பான தகவல்களைப் பகிரங்கப்படுத்திய எட்வேர்ட் ஸ்நோடன் தற்போது ரஷ்யாவின் மொஸ்கோ விமான நிலையத்தில் தங்கியுள்ளார்.
இந்தநிலையிலேயே சுவீடன் நாட்டைச் சேர்ந்த ஸ்டெபென் ஸ்வால்போர்ஸ் என்ற பேராசிரியர் நோபல் பரிசுக்கு எட்வர்ட் ஸ்நோடெனின் பெயரைப் பரிந்துரை செய்துள்ளார்.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள ஸ்டெபென், "அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரம் பறிக்கப்படுவதை எதிர்த்து தனி நபர்கள் போராடலாம் என்பதைத்தனது வாழ்க்கையையும், உயிரையும் பணயம் வைத்து எட்வேர்ட் ஸ்நோடென் நிரூபித்துள்ளார். அவரது இந்த முன்முயற்சி, அமைதிக்கான நோபல் பரிசு பெறுவதற்கான அனைத்து தகுதிக்கும் உரியதாகும்.
ஸ்நோடனுக்கு வழங்குவதன் மூலம், 2009ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசை அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுக்கு வழங்கிய களங்கத்தையும் போக்கிக் கொள்ள முடியும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

## 1 கிலோ எடை குறைந்தால் 1 கிராம் தங்கம்



டோஹா, ஜூலை 19
ஒரு கிலோ உடல் எடையை குறைப்பவர்களுக்கு 1 கிராம் தங்கம் வழங்கப்படும் என்று டுபாயில் அறிவிக்கப்பட்டுள்ளது.
உடற்பருமன் பிரச்சினை உலகம் முழுவதும் பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. ஒவ்வொரு நாட்டிலும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண பல்வேறு திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன.
இந்தநிலையில் டுபாய் அரசு அங்குள்ள நகைக்கடை உரிமையாளர்களுடன் இணைந்து உடல் எடையை குறைப்பவர்களுக்கு தங்கம் வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
அதன்படி ஒரு மாதத்தில் குறைந்த பட்சம் 2 கிலோ எடையை குறைப்பவர்களுக்கு, குறைந்த பட்சம் 2 கிராம் தங்கம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.
அதுமட்டுமல்லாது உடல் எடையைகுறைப்பதற்கு நடை பழகுதல், குதியோட்டம், உடற்பயிற்சி ஆகியவற்றை மேற்கொள்ள 91 இடங்களை ஒதுக்கி உள்ளது டுபாய் அரசு. (ற)



### 95 ஆவது பிறந்ததினம் நேற்று

## மண்டேலாவின் உடல்நிலை முன்னரை விட முன்னேற்றம்

ஜொகன்ஸ்பேர்க், ஜூலை 19
தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் 95 ஆவது பிறந்த தினம் நேற்று விமரிசையாகக் கொண்டாடப்பட்ட நிலையில், அவரது உடல்நிலை படிப்படியாக முன்னேற்றம் கண்டு வருகின்றது என்று தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேகப் ஜூமா தெரிவித்துள்ளார்.
நுரையீரல் தொற்றுக் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா, தொடர்ந்தும் தீவிர சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார்.
இந்த நிலையில் நேற்று அவரது 95 ஆவது பிறந்ததினம் உலகளாவிய ரீதியில் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. தென்னாபிரிக்காவில் மீள் நல்லிணக்கத்தைக் கொண்டுவருவதற்காக உழைத்தமையைக் கௌரவப்படுத்தும் வகையில் மண்டேலாவின் பிறந்த தினத்தை 'மண்டேலா தினம்' என்று ஐக்கிய நாடுகள் சபை பிரகடனப்படுத்தியுள்ளது
அத்துடன் நோபல் பரிசு பெற்ற தென்னாபிரிக்க விடுதலை வீரரும் முன்னாள் ஜனாதிபதியுமான நெல்சன் மண்டேலா 67 ஆண்டுகள் பொதுவாழ்க்கையில் ஈடுபட்டார். அதைக் கௌரவிக்கும் முகமாக இன்றைய நாளில் மக்கள் 67 நிமிடங்களை சமூகத் தொண்டுகளில் செலவிடுவதற்கு ஊக்குவிக்கப்படுகின்றது என்றும் கூறப்படுகின்றது. (ற)

## புதியவகை டைனோசர் கண்டுபிடிக்கப்பட்டது



நியூயோர்க், ஜூலை 19
புதிய டைனோசர் இனம் ஒன்றை அமெரிக்க ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
ட்ரைசெர்ராடாப்ஸ் பிரிவைச் சேர்ந்த இந்த டைனோசர் ஐந்து மீற்றர் நீளம் வரை வளரக் கூடியதாகவும், இரண்டாயிரத்து ஐநூறு கிலோ பருமன் கொண்டதாகவும் இருந்துள்ளது என்றும் ஆய் வாளர்கள் கூறுகின்றனர்.
மிகப் பெரிய மூக்கும் அளவுக்கதிகமான நீளம் கொண்ட கொம்பும் கொண்டிருந்த இந்த ராட்சத விலங்கினம் ஏழரைக் கோடி ஆண்டுகளுக்கு முன்பு பூமியில் வாழ்ந்ததாகக் கருதப்படுகிறது.
இந்த டைனோசருக்கு நாசூட்டுசெர்ராடாப்ஸ் டைட்டுசை என்று பெயரிடப்படுள்ளது.
வித்தியாசமான உடல் வாகுடன் பார்ப்பதற்கு அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் இருந்தாலும், அது ஒரு தாவர உண்ணி விலங்கு என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## அரச எதிர்ப்புத் தலைவருக்குச் சிறை

மொஸ்கோ, ஜூலை 19
ரஷ்யாவில் அரச எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுத்து வந்த அலெக்ஸி நவால்னி மீதான பண மோசடிக் குற்றங்களை உறுதிப்படுத்தியுள்ள நீதிமன்றம் அவருக்கு 5 ஆண்டுகால சிறைத் தண்டனை விதித்துள்ளது.
எதிரணி போராட்டங்களை முன்னின்று நடத்திவரும் இளம் தலைவரான அவர், அரசுக்குச் சொந்தமான மரப் பலகை நிறுவனத்தின் அரை மில்லியன் டொலர் பணத்தை கையாடினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.
எனினும் தன்மீதான குற்றச் சாட்டை மறுத்த அலெக்ஸி நவால்னி, இதுவொரு அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை என்று குறிப்பிட்டிருந்தார். (ற)

# கேள்வி கோரல்கள்

## இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு
## துறைமுகங்கள், பெருந்தெருக்கள் அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகாரசபை
## யாழ்ப்பாணம்

### யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள வீதிகள், புனர் நிர்மாணம் செய்வதற்கான கேள்வி கோரல் அறிவித்தல்

### பெருந்தெருக்கள் அமைச்சின் நிதியின் மூலம் உள்ளூர் போட்டிக்குரிய கூறுவிலை கோரல்கள்

1) பின்வரும் புனர் நிர்மாண வேலைகளிற்கான மூடிய கேள்வி கோரல்களை பிரதம பொறியியலாளர், கேள்விச்சபையின் சார்பாக பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் பெற்றுக் கொள்வார்.

| வேலை விவரம் | கேள்வி பாதுகாப்புப் பணம் | ஒப்பந்த காரர் தரம் ICTAD |
|---|---|---|
| 1. மேற்படை அமைத்து கல்லிட்டு தாரிடல் தொண்டமானாறு-வல்லை- துன்னாலை வீதி, 9.3-10.6 கி.மீ | 45,000.00 | C 7 |
| 2. செப்பனிட்டு சிறு கற்படை அமைத்தல்- கந்தசாமி கோவில் நாச்சிமார் கோவில் வீதி, அனலைதீவு, 1.5- 1.85 கி.மீ | 38,000.00 | C 7 |
| 3. செப்பனிட்டு சிறு கற்படை அமைத்தல்- கந்தசாமி கோவில் நாச்சிமார் கோவில் வீதி, அனலைதீவு, 1.85- 2.14 கி.மீ | 30,170.00 | C 7 |
| 4. பாலம் மீள் அமைத்தல் - 6/4 ஆவரங்கால்- தொண்டமானாறு வீதி | 33,000.00 | C 7 |
| 5. பாலம் மீள் அமைத்தல் - 6/3 ஆவரங்கால்- தொண்டமானாறு வீதி | 33,000.00 | C 7 |
| 6. பாலம் மீள் அமைத்தல் - 6/2 கொக்குவில்- வட்டுக்கோட்டை வீதி | 14,900.00 | C 7 |
| 7. மதகு மீள் நிர்மாணம் - 12/7 – புத்தூர்- கந்தரோடை வீதி | 34,000.00 | C 7 |
| 8. மதகு மீள் நிர்மாணம் - 3/2 - தொண்டமானாறு-வல்லை- துன்னாலை வீதி. | 34,000.00 | C 7 |
| 9. வடிகால் அமைத்தல் - நாவாந்துறை – ஓட்டுமடம் வீதி 0.9- 1.0 கி.மீ | 8,750.00 | C 7 |
| 10. புனரமைத்து தாரிடல்- கரையூர் றெக்கிளமேசன் வீதி, 0.0- 0.09, 2.96-3.06 கி.மீ | 15,000.00 | C 7 |
| 11. புனரமைத்து தாரிடல்- கரையூர் றெக்கிளமேசன் வீதி, 0.5- 0.83 கி.மீ | 50,000.00 | C 7 |
| 12. புனரமைத்து தாரிடல்- கரையூர் றெக்கிளமேசன் வீதி, 0.9- 0.19 கி.மீ | 15,000.00 | C 7 |
| 13. புனரமைத்து தாரிடல்- கரையூர் றெக்கிளமேசன் வீதி, 0.83- 1.16 கி.மீ | 15,000.00 | C 7 |
| 14. புனரமைத்து தாரிடல் - மாதகல்- பண்டத்தரிப்பு- சாம்பிலித்துறை வீதி, 4.5- 4.84 கி.மீ | 50,000.00 | C 7 |
| 15. புனரமைத்து தாரிடல் - மாதகல்- பண்டத்தரிப்பு- சாம்பிலித்துறை வீதி, 4.84 – 5.04 கி.மீ | 30,000.00 | C 7 |
| 16. புனரமைத்து தாரிடல் - மாதகல்- பண்டத்தரிப்பு- சாம்பிலித்துறை வீதி, 5.04 – 5.38 கி.மீ | 50,000.00 | C 7 |
| 17. புனரமைத்து தாரிடல் - மாதகல்- பண்டத்தரிப்பு- சாம்பிலித்துறை வீதி, 5.38 – 5.58 கி.மீ | 30,000.00 | C 7 |

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் நடைமுறை 02.08.2013 அன்று முற்பகல் 10.00 மணியுடன் முடிவடையும். கேள்விப்பத்திரங்கள் 02.08.2013 அன்று முற்பகல் 10.30 மணிக்கு பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் திறக்கப்படும்.

கேள்விப்பத்திரங்களை தயாரிப்பதற்குரிய படிவங்களை பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை யாழ்ப்பாணம், காரியாலயத்தில் பெற்றுச் சமர்ப்பிக்க வேண்டும்.

கேள்விப்பத்திர ஆவணங்கள் 23.07.2013 தொடக்கம் 01.08.2013 பிற்பகல் 2 மணி வரை மீள் அளிக்க முடியாத வைப்புத்தொகையான 750/- + பெறுமதி சேர் வரி 12% செலுத்திப் பெற வேண்டும்.

2) தகுதி வாய்ந்த கேள்வி கோரல்கள் கோருபவர்கள் பின்வரும் தகைமைப் பிரமாணங்களுக்கு இணங்குதல் வேண்டும்.

அ) கேள்வி கோரல் கோருபவர் தன்னை இக்ரட் (ICTAD) நிறுவனத்தில் வீதி நிர்மாணித்தல் துறையில் மேற்குறிப்பிட்ட தரத்திற்கமைய பதிவு செய்திருத்தல் வேண்டும்.

03. கேள்வி கோரல் ஆவணங்கள் பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம் அலுவலகத்தில் இலவசமாகப் பார்வையிட முடியும்.

04. முன் கேள்வி கோரல் கூட்டம் 31.07.2013 அன்று முற்பகல் 10 மணிக்கு பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாண அலுவலகத்தில் நடைபெறும்.

05. கேள்விப்பத்திர ஆவணங்கள் கேள்வி கோரல் முடிவு திகதியில் இருந்து 60 கலண்டர் நாள்கள் வரை செல்லுபடியாக இருக்கும். (29.09.2013)

06. மேலே குறிப்பிடப்பட்ட கேள்விப்பாதுகாப்பு பணத்தொகை அவற்றிற்குரிய பாதுகாப்புப் பத்திரம் ஒவ்வொரு கேள்விப்பத்திர ஆவணத்துடன் இணைத்திருத்தல் வேண்டும். ஏற்றுக்கொள்ளக் கூடிய பாதுகாப்புப் பத்திரம் இல்லாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

07. மூடி ஒட்டப்பட்ட கேள்விப்பத்திர ஆவணங்கள் பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாண காரியாலயத்தில் மேற்குறிப்பிட்ட முடிவு காலத்திற்கு (02.08.2013) மு.ப 10.00 மணிக்கு முன் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

08. கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திரங்கள் குறிப்பிடப்பட்ட முடிவுறும் நேரத்தின் பின் உடனடியாக பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாண அலுவலகத்தில் திறந்து பார்க்கப்படும்.

கேள்வி கோரல் கோருபவர்கள் அல்லது அவரது பிரதிநிதிகள் கேள்விப்பத்திரம் திறக்கும் நேரம் பிரசன்னமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

09. மேலதிக விவரங்கள் பின்வரும் அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்களுடன் தயவு செய்து தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளவும்.

| அலுவலகம் | தொலைபேசி இலக்கம். |
|---|---|
| பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை யாழ்ப்பாணம். | 021- 222- 2968. |

மாகாணப்பணிப்பாளர் (வ)
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
கடற்கரை வீதி
யாழ்ப்பாணம்

பிரதம பொறியியலாளர்
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
கடற்கரை வீதி
யாழ்ப்பாணம்.

(அ/10663)
(2,6,3)

# வரிப் பரிசோதகருக்கு ரூ.1750 கொடுப்பனவு

வலி.தென்மேற்கு, ஜூலை 19
வலி.தென்மேற்கு பிரதேச சபையில் கடமையாற்றும் வருமானப் பரிசோதகர்களுக்கு வெளிக்கள வேலைக்காக அரசால் அங்கீகரிக்கப்பட்ட 1750 ரூபா தற்பொழுது பிரதேச சபையினால் வழங்கப்படுகிறது. வெளிக்கள வேலைக்காக அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதியை வழங்குவதில் ஏற்பட்ட தடங்கல் குறித்து தொழிற் சங்க பிரதிநிதிக்கும் தவிசாளருக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சைத் தொடர்ந்து நிதி தற்போது வழங்கப்படுகிறது. (வ-115)

## பெயர்மாற்றம்

திருமதி மொஹமட் ரிஷாட் எஸ்தர் ஜெபிக்கா ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை திருமதி மொஹமட் ரிஷாட் பாத்திமா ரிஸ்மா என பெயர் மாற்றம் செய்வதோடு, இனிவரும் அனைத்து ஆவணங்களிலும் அவ் வாறே கையொப்பமிடுவேன் என அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

பாத்திமா ரிஸ்மா.

(30006)(3.3.6)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

19.07.2013 இன்று
"கிளிநொச்சி செல்லா வித்தி மண்டபத்தில்"
இடம்பெறும் வருடாந்த சான்றிதழ்
வழங்கும் வைபவத்தில் சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளும்
அனைவரையும் வாழ்த்துகின்றோம்.

பிரதமவிருந்தினர்
Mr. K.Selvarajah
Deputy Director of Education
Education Management
Kilinochchi

சிறப்புவிருந்தினர்
Mr.S.P.Amalarajah
Asst.Director - Planning
AGA Office - Kilinochchi

ESOFT
Shaping Lives, Creating Futures.

Wishes from :
Management
ESOFT Computer Studies
No. 01, Kanagapuram Road,
Kilinochhci
(C-10535)

## நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - வ.து

# கேள்விப் பத்திரம்

### கல்வியங்காட்டு சந்தியில் அமைந்துள்ள எரிபொருள் நிலைய கனப்பி (CANOPY) அமைத்தல்

01. மேற்படி கட்டட வேலைக்கான உறையிலிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 12.08.2013 ஆம் திகதி மு.ப. 10.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப் பத்திர உறைகள் 13.08.2013 ஆம் திகதி பி.ப.3 மணிக்கு கேள்வி கேட்பவர்கள்/ அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.


| திட்டம் | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் ரூபா. | தேவையான கேள்விப் பத்திர பிணை ரூபா. | பிணை பெறுமதியான காலம் |
|---|---|---|---|
| கல்வியங்காடு சந்தி, பருத்தித் துறை வீதி எரி பொருள் நிலைய (CANOPY) கனப்பி அமைத்தல். | 2000/= | 25000/= | 90 நாள்கள் |

02. கேள்வி கோரல் (NATIONAL COMPETITIVE) கேள்வி கோரல் நடைமுறைக்கிணங்க முறைப்படி நடைபெறும்.
03. இத்துறை சார்ந்த முன் அனுபவம் கொண்ட ஒப்பந்தகாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
04. கேள்விக்கான ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடலாம்.
05. கேள்விப் பத்திரத்துக்கான ஆவணங்களை நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளரிடம் 11.08. 2013 ஆம் திகதி வரை அலுவலக நேரத்தில் ஒப்பந்தக்காரர்கள் பதிவேடு, பதிவு அத்தாட்சிப் பத்திரம் ஆகியவற்றுடன் அவர்களது கடிதத் தலைப்பில் தயாரிக்கப்பட்ட கடிதத்தினைச் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.
06. கேள்விக்கான பத்திரங்கள் பிரதியுடன் தபால் உறையிலிட்டு, உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கல்வியங்காடு சந்தி எரி பொருள் நிரப்பு நிலைய கனப்பி (CANOPY) அமைத்தல்" எனக்குறிப்பிட்டு 12.08. 2013 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு முன் நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளரை அடையத் தக்கதாக பதிவுத் தபா லிலோ அல்லது அலுவலக வேலை நேரத்தில் நேரிலோ இதற்கான கேள்விப் பத்திரத்தினை மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டவாறு தேவையான கேள்விப் பத்திர பிணைப் பணத்துடன் அனுப்பப் படல் வேண்டும்.
07. மேலதிக விவரங்களை நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளரிடமிருந்து 11.08.2013 ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.
08. கேள்விப்பத்திரம் சம்பந்தமாக இயக்குநர் சபையின் முடிவே இறுதியானது.

பொது முகாமையாளர்,
நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

(அ/10657)
(10,6,3)

## வரணியில் இடம்பெற்ற நடமாடும் சேவை



வரணி, ஜூலை 19
வரணி மற்றும் மந்துவில் பிரதேச மக்களுக்கான அடையாள அட்டை பெற்றுக்கொடுக்கும் நடமாடும் சேவை செவ்வாய்க்கிழமை வரணி ஆசிரிய பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது. மனித உரிமை அமைப்பு மற்றும் கபே ஆகியவற்றின் அனுசரணையுடன் தென்மராட்சி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் இணைந்து இந்த நடமாடும் சேவையை நடத்தினர்.

தேசிய அடையாள அட்டை திணைக்கள கொழும்பு மற்றும் யாழ்ப்பாண அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தலைமையிலான உத்தியோகத்தர்கள் குழு, கிராம அலுவலர்கள், சமதான நீதிவான்கள், பதிவாளர்கள் ஆகியோர் இதில் கலந்துகொண்டு மக்களுக்குரிய பணியை முன்னெடுத்தனர்.


மாசேரி, வரணி வடக்கு, இடைக்குறிச்சி, கரம்பைக் குறிச்சி, மந்துவில் கிழக்கு, மந்துவில் மேற்கு, மந்துவில் வடக்கு பிரதேச மக்களுக்கான சேவை காலையிலும் குடமியன் நாவற்காடு, வரணி, இயற்றாலை, தாவளை போன்ற பிரதேச மக்களுக்குரிய சேவை மாலை 4 மணிவரையும் இடம்பெற்றது. இந்தச் சேவையில் 500 இற்கு மேற்பட்டோர் கலந்துகொண்டு பயன்பெற்றனர். (வ-122)

## பிரதேச சபையின் அனுமதியுடன் பனைகளை தறிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 19
பொது மக்கள் தமது தேவைகளுக்காக பனைகளைத் தறிக்கும்போது, தாம் சார்ந்த பிரதேச சபையின் அனுமதியுடன் பனைகளைத் தறிக்குமாறு பனை அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

குறித்த பிரதேசங்களின் பனை வளத்தைப் பாதுகாப்பதற்காக பனை அபிவிருத்திச் சபை இந்த நடவடிக்கையை கட்டாயமாக்கியுள்ளது. வீட்டுக் காணிகள் மற்றும் கைவிடப்பட்ட காணிகளில் பனைகளைத் தறிப்பதற்கு பிரதேச செயலரின் அனு மதி பெறவேண்டியது அவசியம்.

பிரதேச செயலரின் அனுமதியின் பின்னர் பனை அபிவிருத்திச் சபையின் வெளிக்கள உத்தியோகத்தர்கள் குறிப்பிட இடங்களுக்கு பயணங்களை மேற்கொண்டு



பாவனைக்கு உதவாத மரங்களைத் தறிப்பதற்கான அனுமதியை வழங் குவர்.

பனை தறிப்பதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளாமல் பனை தறிப்பது சட்ட விரோதமாகக் கொள்ளப்படுவதால் பொது மக்கள் இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று பனை அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது. (வ-14)

### கரவெட்டி பிரதேச சபை எல்லைக்கு

# மேலும் இருநூறு வீதி விளக்குகள்

### பிரதேச அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் தீர்மானம்

வடமராட்சி, ஜூலை 19
கரவெட்டிப் பிரதேச சபை எல்லைக்குள் மேலும் 200 தெரு விளக்குகளைப் பொருத்த பிரதேச அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபைத் தலைவர் பொ.வியாகேசு தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் சபை எல்லைக்குள் இதுவரை 435 வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. இனிமேலும் வீதி விளக்குகள் பொருத்துவதானால் சபைக்கு அதிக செலவினங்கள் ஏற்படும் எனத் தெரிவித்தார்.

இருப்பினும் உறுப்பினர்களான பொ.குகதாஸ், ம.சத்தியநாதன் ஆகியோர் பொருத்தப்பட்டுள்ள வீதி விளக்குகள் போதாது என்றும், பரவலாக அவை பொருத்தப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர். இதனைத் தொடர்ந்து மேலும் 200 வீதி விளக்குகள் பொருத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சபைத் தலைவர் தெரிவித்தார்.



உடுப்பிட்டி மாவடி சனசமூக நிலையத்துக்கென கடந்த 2008 ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி மூலம் கட்டப்பட்ட பொது நோக்கு மண்டப கட்டட வேலைகள் நிதிப் பற்றாக்குறையால் நிறைவு பெறவில்லை. இதனைப் பூர்த்தி செய்வதற்காக மேலதிக நிதியைப் பெற்றுக்கொள்ள கரவெட்டி பிரதேச செயலருடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இதுதவிர ஸ்ரீமுருகன் கொலனி வீதி, வல்லை மண்டான் தபாற்கந்தோர் வீதி ஆகிய வீதிகளுக்கு இவ்வருடத்திற்கான வீதிகள் புனரமைக்கப்பட்ட பின்னர் மதிப்பீட்டில் ஏற்படும் சேமிப்பில் புனரமைப்பு நடவடிக்கையை மேற்கொள்ளலாம் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-8)

## இந்து மாமன்றத்தால் மாணவர்களுக்கு கணினிகள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 19
அகில இலங்கை இந்து மாமன்றத்தால் இந்த வருடம் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் இந்து அமைப்புக்களுக்கு 60 கணினிகள் வழங்கப்பட்டன.

லண்டன் வாழ் இந்து மாமன்றத்தின் பிரதிநிதி ஒருவரால் வழங்கப்படும் நிதி உதவியால் அகில இலங்கை இந்து மாமன்றம் சமூக நலத்திட்டத்தை மேற்கொண்டு வருகிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வறுமை நிலையில் உள்ள மாணவர்களது கல்வி மேம்பாட்டுக்காகவும், இந்து அமைப்புக்களின் வலையமைப்புச் செயற்பாடுகளுக்கும் என அகில இலங்கை இந்து மாமன்றம் இந்தச் சமூக செயற்பாட்டை முன்னெடுத்துள்ளது.

இதில் மடிக் கணினிகள் 49 யையும், மேசைக் கணினிகள் 11 யையும் வழங்கியுள்ளது. இதனூடாக மாணவர்கள் தரப்பு மற்றும் இந்து அமைப்புக்கள் நன்மை அடைந்துள்ளன.

நாடளாவிய ரீதியில் சமூகப் பணிகளை மேற்கொண்டு வரும் அகில இலங்கை இந்து மாமன்றம் யாழ்ப்பாணத்தில் உள்ள கிளைக் காரியாலயம் ஊடாக இந்தச் சேவையை முன்னெடுத்து வருகிறது.

இதனைத்தொடர்ந்து அடுத்த கட்டமாக கணினிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. வெகுவிரைவில் கணினிகள் பல்கலைக்கழக மாணவர்கள், இந்து அமைப்புக்கள் ஆகியவற்றுக்கு வழங்கப்படும் என இந்து மாமன்றம் தெரிவித்துள்ளது. (வ-14)



## உடுப்பிட்டிச் சந்தியில் ஒளிராத வீதி விளக்குகள்

வடமராட்சி, ஜூலை 19
உடுப்பிட்டிச் சந்தியில் பொருத்தப்பட்டுள்ள மூன்று வீதி விளக்குகளும் ஒளிராமையால் இரவு, அதிகாலை வேளைகளில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

குறித்த இடங்களில் யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை, மாலிசந்தி வீதிகளில் பொருத்தப்பட்டிருந்த வீதி விளக்குகளால் உடுப்பிட்டிச் சந்தியில் இரவு வேளைகளில் வெளிச்சம் இருந்து வந்தது. கடந்த மூன்று வாரங்களுக்கு மேலாக இந்த வீதி விளக்குகள் ஒளிராமையால் இரவு வேளைகளில் தூர இடங்களிலிருந்து வருவோரும், அதிகாலை வேளைகளில் நீண்ட தூரப் பயணங்களை மேற்கொள்ள பஸ்களில் செல்வதற்காக உடுப்பிட்டிச் சந்திக்கு வருவோரும் இருளில் அச்ச நிலையிலேயே இந்தச் சந்தியைப் பயன்படுத்த வேண்டியுள்ளது.

இது தொடர்பாக கரவெட்டி பிரதேசசபை ஆளும்கட்சி உறுப்பினர் ஆ.ஜெகநாதன் சபையின் கவனத்துக்குக் கொண்டு வந்து மூன்று வீதி விளக்குகளையும் தாமதமின்றி திருத்தியமைத்துத் தருமாறு கோரியுள்ளார். (வ-8)

## வாசிப்பு மாத செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்த ஏற்பாடு செய்க

### திணைக்களங்களுக்கு ஆலோசனை சுற்றறிக்கை

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையினர் இந்த வருடம் பொது நூலகங்களில் வாசகர்கள், பொது மக்கள் ஆகியோருக்கு வாசிப்பின் அவசியம் குறித்து விழிப்பூட்ட ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. அதன் பொருட்டு தேசிய வாசிப்பு மாத செயற்றிட்டத்தை நடை முறைப்படுத்துவதற்கான ஏற் பாடுகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட திணைக் களத் தலைவர்களுக்கு ஆலோசனை சுற்றறிக்கை அனுப்பி வைத்துள்ளனர்.

2004 ஆம் ஆண்டு தொடக்கம் ஒக்டோபர் மாதம் தேசிய வாசிப்பு மாதமாக அரசால் பிரகடனப்படுத்தப்பட்டது. மஹிந்த சிந்தனைக் கோட்பாடுகளுக்கு அமைய அறிவு நிரம்பிய சமுதாயம் ஒன்றை உருவாக்கும் நோக்குடன் வாசிப்பு அபிவிருத்தியின் பொருட்டு பல விசேட செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி மக்களின் வாசிப்புப் பழக்கத்தைத் தூண்டச் செய்தல், நூலக வளங்கள் மற்றும் சேவைகளை நவீனப்படுத்தல் போன்ற செயற்றிட்டங்களை குறிக் கோளாக கொண்டிருத்தல் வேண்டுமென குறிப்பிட்டுள்ளது.

தேசிய வாசிப்பு மாதத்தின் செயற்றிட்டங்களை ஒழுங்குபடுத்தும் நோக்கில் நிறுவனத் தலைவர் அல்லது பிரதித் தலைவரை- குழுவின் தலைவராகவும் உள்ளூராட்சி ஆணையாளர் அல்லது உள்ளூராட்சி நிறுவனத்தின் செயலாளர் உப தலைவராகவும், நூலகர் அல்லது நூலகப் பொறுப்பாளர் குழுவின் செயலாளராகவும், சமூக அபிவிருத்தி அலுவலர் உட்பட நிறுவனத் தலைவரால் பெயர் குறிப்பிடப்படும் மூன்று அங்கத்தவர்கள் ஆகியோரைக் கொண்ட குழுவை நியமித்தல் வேண்டும். ஏற்கனவே நூல் நிலையம் இருக்குமாயின் அந்தக் குழுவின் ஊடாகவும் வாசகர் வட்டமும் இந்த செயற்பாட்டை நிறைவேற்ற முடியும் என அந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-9)



சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு பண்டத்தரிப்பு பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் பண்டத்தரிப்பு பிரதேச வைத்தியசாலையில் நேற்றுப் புதன்கிழமை சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். பண்டதரிப்பு பிரதேச வைத்தியசாலை வளாகத்தில் காணப்பட்ட பற்றைகள் மற்றும் குப்பைகளை அகற்றியதுடன் எரித்தும் துப்புரவுப் பணியை மேற்கொண்டனர். இந்தச் சிரமதானப் பணியில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஐம்பதுக்கும் மேற்பட்ட ஊழியர்கள் கலந்துகொண்டனர். (வ-86)

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.50 லட்சம் இழப்பீடு

மட்டக்களப்பு,ஜூலை 19
மட்டக்களப்பு, வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவில் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 50 லட்சம் ரூபா இழப்பீட்டு நிதியாக மீள் குடியேற்ற அமைச்சினால் வழங்கப்பட்டது.
வவுணதீவு பிரதேச செயலகத்தில் மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயமூர்த்தி முரளிதரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தலா 1 லட்சம் ரூபா வீதம் 50 பேருக்கு இந்தப் புனர்வாழ்வு நிதி பகிர்ந்தளிக்கப்பட்டது என்று மீள்குடியேற்ற பிரதி அமைச்சரின் இணைப்பதிகாரி கே.ஜீவா தெரிவித்தார். (ச)

## மட்டக்களப்பில் இடர் குறைப்பு வேலைத்திட்டம்


மட்டக்களப்பு,ஜூலை 19
மட்டக்களப்பு மாவட்டத்தில் இடர் குறைப்பு 18 மாத வேலைத் திட்டம் வியாழக்கிழமை அறிமுகப்படுத்தப்பட்டது.
ஐந்து அரச சார்பற்ற நிறுவனங்கள் இணைந்து தயாரித்துள்ள இந்த இடர் குறைப்பு வேலைத் திட்டத்திதை அறிமுகம் செய்யும் வைபவம் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றது.
இடர் முகாமைத்துவ அமைச்சு, இடர் முகாமைத்துவ நிலையம் ஆகியவற்றின் அனுமதியுடன் தயாரிக்கப்பட்டுள்ள இடர் குறைப்புத் திட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்படும் இடர்களில் இருந்து மக்களை பாதுகாத்தல் மற்றும் அதைக் குறைத்தல் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. (ச)

## குற்றச்செயல்கள் அதிகரிப்புக்கு கல்வியறிவின்மை காரணம்

எமது பிரதேசங்களில் குற்றச்செயல்கள் அதிகரிப்பதற்கு மக்களிடையே போதிய கல்வியறிவு இல்லாமையும் ஒரு காரணமாகும் என்று கல்முனைக்குடி சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட கல்முனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.டபிள்யூ ஏ.கப்பார் தெரிவித்தார்.
கிராமங்களிலுள்ள மக்களின் பாதுகாப்பு, குற்றவியல் பிரச்சினைகளைகண்காணிக்கும் அளவுக்கு போதிய பொலிஸ் அதிகாரிகள் இல்லை. ஆதலால் சிவில் பாதுகாப்புக் குழுக்களின் உதவியுடன் சேவைகளைப் பிரதேச மக்களுக்கு வழங்க முடியும் என்று அவர் கூறினார்.
சிவில்பாதுகாப்பு குழுக்கள் சரியாக இயங்கினால் மிக விரைவாகவும், நேர்மையாகவும், செயலாற்ற முடியும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

மரக்கறி உற்பத்தி நடவடிக்கைகளில்

## இரசாயன பாவனையை குறைப்பதற்குத் திட்டம்



மட்டக்களப்பு,ஜூலை 19
மட்டக்களப்பு மாவட்டத்தில் மரக்கறிகளின் உற்பத்தி நடவடிக்கைகளின்போது மான இரசாயனப் பாவனையைக் குறைக்க வேண்டும். இவ்வாறு பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்துக்கு மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.
மட்டக்களப்பு மாவட்ட வைத்திய, சுகாதாரத் துறை தொடர்பில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மீளாய்வுக் கூட்டத்திலேயேஅவர் இந்த அறிவுறுத்தலை வழங்கினார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
நஞ்சுத்தன்மையான மரக்கறி வகைகளின் விற்பனையைக் கட்டுப்படுத்துவதற்கு பதிவு செய்யப்பட்டவர்கள் மாத்திரமே விநியோகத்தில் ஈடுபட முடியும் என்ற கட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்படல் வேண்டும்.
மரக்கறி வகைகளுக்கு அனுமதிக்கப்பட்ட அளவுகளை விடவும் அதிகமான அளவுகளில் கிருமி நாசினிகள் பயன்படுத்தப்படுவது கட்டுப்படுத்தப்பட வேண்டும்.
இந்தக்கட்டுப்படுத்தல்களை விவசாய, கமநல உத்தியோகத்தர்கள் மேற்கொள்ள வேண்டும்.-என்றார். (ச)

# அரசியல் கட்சிகளிடம் மக்கள் நலன் இல்லை

## சுபைர் குற்றச்சாட்டு



மட்டக்களப்பு,ஜூலை 19
இலங்கையில் உள்ள பல அரசியல் கட்சிகள் நாட்டினதும் மக்களினதும் நலன் கருதாமல் செயற்படுவது நாட்டின் ஜனநாயகத்துக்குப் பாதிப்பாக அமைகிறது. இவ்வாறு கிழக்கு மாகாண சபையின் பிரதித் தவிசாளர் எம்.எஸ்.சுபைர் குற்றம்சாட்டியுள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
அநேகமான அரசியல் கட்சிகள் நாட்டினதும் மக்களினதும் நலன் கருதாமலேயே செயற்படுகின்றன. அன்றாடம் நாட்டில் நடக்கும் நிகழ்வுகளை வைத்து தமது கட்சிகளை தக்க வைத்து கொள்வதிலேயே அவை குறியாக இருக்கின்றன.
இவ்வாறான சூழ்நிலையால் நாட்டில் சிறந்த கட்சிகளை உருவாக்குவதில் சிக்கல்கள் ஏற்படுகின்றன. நாட்டில் இன்றுள்ள பெரும்பாலான அரசியல் கட்சிகள் கொள்கை அரசியலை விட்டு கோரிக்கை அரசியலை முன்னெடுப்பதால் தான் நாட்டில் இனரீதியான முறுகல் நிலை தோன்றுகின்றது.

> அரசியல் கட்சிகள் நாட்டு மக்கள் பாதிப்படையாத வகையில் ஒரு வளமான நாட்டை கட்டியெழுப்புவதற்கு முயற்சிக்க வேண்டும்.

அது மாத்திரமல்லாது, பிராந்திய ரீதியாக சில நாடுகள் கூட தமது கட்சிக் கொள்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன.
உதாரணமாக, இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் கொண்டுவரப்பட்ட பிரேரணை விடயத்தில் இந்தியா தனது வெளிநாட்டுக் கொள்கையை மாற்றிய மைத்தைக் கூறலாம்.
ஆகவே இலங்கையில் உள்ள அரசியல் கட்சிகள் நாட்டு மக்கள் பாதிப்படையாத வகையில் ஒரு வளமான நாட்டை கட்டியெழுப்புவதற்கு முயற்சிக்க வேண்டும்.- என்றார். (ச)

## ஆசிரியர் பற்றாக்குறையை நீக்க கலந்துரையாடல்

மட்டக்களப்பு,ஜூலை 19
மட்டக்களப்பு மாவட்டத்தில் கிராமப்புறப் பாடசாலைகளில் நிலவும் கணித, விஞ்ஞான, ஆங்கில மற்றும் தகவல் தொழில்நுட்பப் பாடங்களுக்கான ஆசிரியர்கள் தட்டுப்பாட்டை நீக்கும் வகையிலான கலந்துரையாடல் வந்தாறுமூலையிலுள்ள கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மாவட்டச் செயலாளர் மற்றும் துணைவேந்தர் ஆகியோரின் கூட்டுத் தலைமையில் நடைபெற்றது.
கல்வித்தர மேம்பாடு தொடர்பிலான இக் கலந்துரையாடலை கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் கிட்னன் கோவிந்தராஜா, மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் ஆகியோர் தலைமையேற்று நடத்தினர். (ச)

## புத்தாக்குநர் போட்டிக்கு மட்டு.மாணவன் தெரிவு



மட்டக்களப்பு,ஜூலை 19
மட்டக்களப்பு, செங்கலடி கிராமத்தில் அமைந்துள்ள செங் கலடி விவேகானந்தா வித்தியாலய மாணவன் தேசியமட்ட புத்தாக்குநர் போட்டிக்குத் தெரிவாகியுள்ளார்.
திருகோணமலையில் அண்மையில் நடைபெற்ற மாகாண மட்ட புத்தாக்குநர் போட்டியில் கலந்துகொண்டு இரண்டாமிடம் பெற்ற செங்கலடி விவேகானந்தா வித்தியாலய மாணவன். ந.சந்தோஸினால் செய்யப்பட்ட செயற்கை மணி தேசிய மட்டத்துக்குத் தெரிவாகியுள்ளது. சுமார் 300 ஆக்கங்களுடன் போட்டியிட்டு இரண்டாமிடம் பிடித்த இந்த மாணவனின் செயற்கை மணி எதிர்வரும் நவம்பர் மாதம் கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள தேசிய புத்தாக்குநர் போட்டிக்கு தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)



தமிழ்மொழி டிப்ளோமாவை நிறைவுசெய்துகொண்டு சிங்கள பொலிஸ் உத்தியோகத்தர்கள் வெளியேறும் நிகழ்வு புதன்கிழமை திருகோணமலை சீனக்குடா பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் திருகோணமலை பிரிவுக்குப்பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் பந்துல விஜேவர்த்தன கலந்து கொண்டார்.

# அற்ப சொற்ப அபிவிருத்திக்காக நாட்டைக் காட்டிக் கொடுக்கலாமா?

## பிரதேச சபை உறுப்பினர் ஏ.எஸ்.எம். உவைஸ் சீற்றம்

மட்டக்களப்பு,ஜூலை 19
கிழக்கு மாகாண அமைச்சர் எம்.எஸ்.உதுமா லெப்பை அட்டாளைச்சேனை மண்ணுக்கு வரலாற்றுத் துரோகத்தைச் செய்திருப்பதாக அட்டாளைச்சேனை பிரதேச சபை உறுப்பினர் ஏ.எஸ்.எம்.உவைஸ் தெரிவித்தார்.
அட்டாளைச்சேனை பிரதேச சபையின் மாதாந்த அமர்வு புதனன்கிழமை நடைபெற்றது. இந்த அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
தனது சொந்த ஊரின் அபிவிருத்திக்காக கிடைக்கும் நிதிகளை திசைதிருப்புவதும், வீதியில் நின்று கொண்டு வேடிக்கை பார்ப்பதுமே அமைச்சர் உதுமாலெப்பையின் வேலையாகும். காட்டிக்கொடுக்கின்ற கூட்டம் இருக்கும் வரை குறிப்பிட்ட அந்த சமூகத்துக்கும் அந்த பிரதேசத்துக்கும் விடிவே இல்லை.




ஜெய்க்கா திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்தில் நான்கு உள்ளூராட்சி மன்றங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இதில் அட்டாளைச்சேனை பிரதேச சபையும் உள்வாங்கப்பட்டிருந்தும் கடைசியில் அட்டாளைச்சேனையின் பெயர் மாற்றப்பட்டு பொத்துவில் பிரதேச சபை சேர்க்கப்பட்டது. இதற்குக் காரணம் கிழக்கு மாகாண அமைச்சர் உதுமாலெப்பையே.
அட்டாளைச்சேனை பிரதேச சபையின் கீழ் இந்த வேலைகள் நடைபெற்று விடக் கூடாது என்பதற்காகவே அமைச்சர் உதுமாலெப்பை அட்டாளைச்சேனையை புறக்கணித்துள்ளார். கிழக்கு மாகாணசபையில் அங்கம் வகிக்கின்ற அமைச்சர்களின் விருப்பப்படியே பிரதேச சபைகள் முதலமைச்சரினால் தெரிவு செய்யப்பட்டுள்ளது.-என்றார். (ச)

# மாகாணசபை முறைமையை இல்லாதொழிக்க வேண்டும்

## அஸ்கிரிய மகாநாயக்கர்கள் வலியுறுத்து

கொழும்பு,ஜூலை 19
இலங்கையில் மாகாண சபை முறைமையை முற்றாக இல்லாதொழிக்க வேண்டும் என்று மல்வத்து மற்றும் அஸ்கிரிய மகாநாயக்கர்கள் தெரிவித்தனர்.
அகில இலங்கை பௌத்த சம்மேளனத்தின் பிரதிநிதிகள், மகாநாயக்கதேரர்களை புதன்கிழமை சந்தித்த போதே அவர்கள் இவ்வாறு கூறினர்.
மாகாண சபைகளுக்கு பொலிஸ், காணி அதிகாரங்கள் வழங்கப்படக் கூடாது.
அப்படி வழங்கினால் நாடு துண்டுகளாகப் பிளவுபடும்.
இந்தப் பிரச்சினையில் இந்தியாவுக்கோ, வேறு எந்த நாட்டுக்கோ பயப்பட வேண்டிய தேவையில்லை என்று அஸ்கிரிய பீட மாநாயக்கர் உடுகம ஸ்ரீ புத்தரக்கித்த தேரர் தெரிவித்தார்.




இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
மாகாண சபை பிரச்சினைக்கு காரணமானவர் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர்.ஜயவர்தனவே.
அன்று மாநாயக்கதேரர்கள் அதனை எதிர்த்தனர். அப்போது அரசியல் பலத்தை பலப்படுத்தி கொள்ள வேண்டிய தேவை காரணமாக இந்தியாவுடன் இணைந்து ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டு மாகாண சபைகளை ஏற்படுத்தினார்.

> மாகாண சபைகளுக்கு பொலிஸ், காணி அதிகாரங்கள் வழங்கப்படக் கூடாது.

அன்று பலர் அதை எதிர்க்க வில்லை. இன்று பிரச்சினை அதிகரித்துள்ளது. வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை கொடுத்துவிட்டால், அரசிடம் என்ன அதிகாரம் மீதியாக இருக்கும்?.
அவரவர் தமது அரசியல் பலத்தை பலப்படுத்திகொள்ளவே இவற்றைச் செய்கின்றனர். மாகாண சபைகளை ஒழித்து விட்டு, ஒற்றையாட்சி முறைமை நாட்டை உருவாக்க வேண்டும்.-என்றார். (ச)

## தெரணியகலவில் 20 பொலிஸார் உடன் இடமாற்றம்



கொழும்பு,ஜூலை 19
தெரணியகல பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்த 20 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இட மாற்றம் வழங்கப்பட்டுள்ளது.
உடன் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த இட மாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக சிறிவர்த்தன தெரிவித்தார்.
தெரணியகல பொலிஸார் குறித்து அண்மையில் பல குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டன.
நூரி தோட்டத்தில் முகாமையாளர் வெட்டிக் கொலை செய்யப்பட்ட பின்னரே இந்தக் குற்றச்சாட்டுக்கள் வலுப்பெற்றன.
அரசியலுடன் தொடர்புபட்டு பல குற்றச் செயல்களுக்கு தெரணியகல பொலிஸார் துணைபோவதாக குற்றம் சுமத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)



காலி கரந்தெனிய மத்திய கல்லூரியில் தொழிநுட்ப கற்கைகளுக்குரிய கட்டடத்தை நிர்மாணிக்க அடிக்கல் நடும் நிகழ்வு இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன, மீள்குடியேற்ற அமைச்சர் எம்.எச்.குணரத்ன வீரக்கோன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ச)

## ஐக்கிய தேசியக் கட்சி பலவீனப்படவில்லை

### ரணில் தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை 19
ஐக்கிய தேசியக் கட்சி பலவீனமாக உள்ளது என்பதை ஏற்க முடியாது என்று அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
நாடாளுமன்ற உறுப்பினர் ஹெரான் குணவர்தன வால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.



அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
கடந்த காலங்களில் முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி குணவர்தனவுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட குற்றவியல் பிரேரணைக்கு எதிராக செயற்படுவதில், ஐக்கிய தேசிய கட்சி முக்கிய பங்கை வகித்திருந்தது.
தற்போது கட்சி சிறந்த நிலையை அடைந்துள்ளது. அரசை எதிர்த்துப் போட்டியிடுவதற்கு தயாராகவுள்ளது. அரசியல் தீர்வின் யதார்த்தத்தை புரிந்து கொண்டால் மாத்திரமே, அதன் பால் மக்களை ஒன்று திரட்ட முடியும்.-என்றார். (ச)

## சுற்றுலா சென்ற பஸ் விபத்து

### ஒருவர் சாவு; 15 பேர் காயம்

கொழும்பு,ஜூலை 19
பண்டாரகமையில் இருந்து மன்னாருக்கு சுற்றுலா சென்றவர்களின் பஸ் விபத்துக்குள்ளாகியதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், 15 பேர் காயமடைந்துள்ளனர்.
இந்த விபத்து புதன்கிழமை அதிகாலை 3 மணிக்கு



அநுராதபுரம்,புத்தளம் பிரதான வீதியில் இடம்பெற்றுள்ளது.
இந்த விபத்து வீதியில் நிறுத்தி வைக்கப்பட்ட பஸ் சுடன் லொறியொன்று பின்புறம் மோதி ஏற்பட்டுள்ளது.
விபத்தில் லொறியில் பயணம் செய்த 15 பேர் காயமடைந்து அநுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## அருந்திகவின் கதைகளுக்கு பதிலளிக்கத் தேவையில்லை

### ஹந்துன்நெத்தி தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை 19
ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அருந்திக பெர்னாண்டோவின் கதைகளுக்கு நான்பதிலளிக்கத் தேவையில்லை என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.
எனினும் நீதிமன்றத்தால் அழைக்கப்பட்டால் நான் வாக்குமூலம் கொடுக்கத் தயாராகவுள்ளேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.



நாடாளுமன்ற உறுப்பினர் அருந்திக பெர்னாண்டோ நீதிமன்றத்தில் செவ்வாய்க்கிழமை தெரிவித்த விடயங்களை சுனில் ஹந்துநெத்தி மறுத்தார்.
தனது பெயரை இந்தச் சர்ச்சைக்குள் இழுப்பது ஒரு சதியின் பகுதியாக இருக்கலாம் என்று அவர் குறிப்பிட்டார்.
எனது பெயர் ஏன் இதற்குள் இழுக்கப்பட்டது என்று விளங்கவில்லை. இது ஒரு பெரிய சதியின் தொடக்கமாக தெரிவதையிட்டு ஆராய வேண்டியுள்ளது என்று அவர் கூறினார். (ச)

## தேர்தலில் இராணுவம்; இலங்கைக்கு ஆபத்து

### ஐ.தே.க.உறுப்பினர் குற்றச்சாட்டு

கொழும்பு,ஜூலை 19
வடக்கில் தேர்தல்களின் போது ஆயுதம் தாங்கிய இராணுவத்தினர் கடமைக்கு நிறுத்தப்பட்டால் நாட்டுக்கு ஆபத்து என்று ஐக்கிய தேசிய கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் கித்சிரி மன்னுநாயக்க குற்றம்சாட்டியுள்ளார்.
கொழும்பில் புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடமாகாணத்தில் இந்த முறை தேர்தல்கள் நியாயமாகவும், சுதந்திரமாகவும் நடைபெறும் என்பது சந்தேகமே.
சர்வதேச நாடுகள் வடக்குத் தேர்தலை அவதானித்துக் கொண்டிருக்கும் நிலையில், இதனை சுதந்திரமாகவும், நேர்மையாகவும் நடத்துவதே இலங்கைக்கு நன்மை பயக்கும்.
இராணுவத்தினர் தேர்தல் செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்படக்கூடாது.
ஆயுதம் தாங்கிய நிலையில் இராணுவத்தினர் நிறுத்தப்பட்டிருந்தால், அது சர்வதேச நாடுகளுக்குத் தவறான தோற்றத்தைக் காட்டிவிடும்.-என்றார். (ச)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## விறுக்கன் நடைபோடும் நிலையில் உரிமைகள் கிடைப்பது எப்படி.....?

போரின் பின்னர் வடபகுதியில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. எனினும் நாட்டில் நிரந்தர சமாதானத்தை உண்டாக்குவதற்கு, உருவாக்குவதற்கு இன்னும் மிகப் பன்மடங்கு பணியாற்ற வேண்டி உள்ளது.

வடபகுதி மக்களின் இன்றைய அரசியல் நிலைமையை நேரில் கண்டறியும் பொருட்டு, யாழ்ப்பாணம் வந்திருந்த, ஆஸ்திரிய நாட்டின் தூதுவர் ரைமுண் மயிஸ் இவ்வாறு கருத்து வெளியிட்டிருக்கிறார்.

போரினால் சகல துறைகளிலும், அனைத்து மட்டங்களிலும் மிகப் பெரிய அளவில் பாதிக்கப்பட்ட வடக்கு, நான்கு வருடங்கள் கழிந்த நிலையிலும் எத்தகைய மாற்றங்களைக் கண்டுள்ளது என்பதனை அனைத்துலக நாடுகள் அறிய முனைவது இயல்பே.

அத்தோடு, வடமாகாண சபைக்கான தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறும் என்று அரசு அறிவித்திருப்பதைத் தொடர்ந்து, இலங்கைக்கான வெளிநாட்டு தூதுவர்கள் பலரும், ஊடகவியலாளர்களும் இங்கு வருகை தருகின்றனர்.

அந்த வகை சார்ந்ததாகவே ஆஸ்திரிய தூதுவரின் வடக்கு வருகை அமைந்துள்ளது எனக் கொள்ளலாம்.

ஜேர்மனி, செக்கோசிலேவாக்கியா, இத்தாலி, ஹங்கேரி, சிலோவெனியா ஆகிய நாடுகளை அண்டியதாக ஆஸ்திரியா அமைந்துள்ளது.

ஒன்பது சுதந்திர சமஷ்டிப் பிராந்தியங்களை இந்த நாடு உள்ளடக்கி உள்ளது. 640 ஆண்டு கால முடியாட்சிக்கு 1918 ஆம் ஆண்டில் முடிவுகட்டப்பட்டு, சுதந்திரக் குடியரசாகியது.

அந்த நாட்டை, பெரும் வரலாற்றைக் கொண்ட சிறிய நாடு என்று கூறலாம். ஐரோப்பாவிலும், ஏன் உலக வரலாற்றிலும் பல தாக்கங்களை உண்டாக்கிய அந்த நாடு, அனைத்துலக மட்டத்தில் தனது செல்வாக்கைச் செலுத்தும் மகத்தான தேசமாகத் திகழ்கிறது.

இரண்டு சட்டவாக்க சபைகளைக் கொண்டது ஆஸ்திரியா. தேர்தல் மூலம் தெரிந்தெடுக்கப்படும் 186 பிரதிநிதிகளைக் கொண்டது தேசிய சபை. ஒவ்வொரு மாகாணங்களாலும் நியமிக்கப்படும் அங்கத்தவர்களைக் கொண்டது சமஷ்டிச் சபை.

ஆஸ்திரியாவில் நான்கு இன மக்கள் வாழ்கிறார்கள். ஆஸ்திரியர்கள் (91%), யுகோசிலாவியர்கள் (04%), துருக்கியர் (1.6%), ஏனையோர் (3%).

அதேபோன்று 74 சதவீதமான றோமன் கத்தோலிக்கர்களும், 05 சதவீதமான புரொட்டஸ்தாந்து மதத்தவர்களும், 04 சதவீதம் இஸ்லாமியர்களும், ஏனைய மதங்களைச் சேர்ந்தோர் 12 சதவீதத்தினராகவும் வாழ்கின்றனர்.

இத்தனைக்கும் அந்த நாடு, உலகின் பத்துப் பணக்கார நாடுகளில் ஒன்றாக உயர்ந்து நிற்கிறது.

அந்த நாட்டைப் பார்த்து, உதாரணமாகக் கொண்டு எமது பெரும்பான்மை இன அரசியல் தலைவர்கள் அதே நடைமுறையைக் கற்றுக்கொள்வார்கள் என்பது பூச்சிய வீதமே எனலாம்.

சரித்திர காலம் தொடக்கம், ஏகாதிபத்திய மற்றும் வல்லரசு நாடுகளின் பல அடக்குமுறைகளையும் எதேச்சாதிகாரங்களையும் அனுபவித்தும் எதிர்கொண்டும், தம்மைத் தாமே ஆளும் நிலையை எட்டிய பின்னர் சுதந்திர சமஷ்டி ஆட்சி நடைபெறும் நாட்டின் தூதுவர் என்ற வகையில், வடக்குக்கான ரைமுண் மாயிஸின் விஜயம், இங்கு வாழும் மக்களின் வாழ்க்கை நிலையும் உரிமைகளும் தேய்ந்து கிடக்கின்றன என்பதனை தெரிந்தும் புரிந்தும் கொள்ள அதிக வாய்ப்பை வழங்கும் எனக் கருதலாம்.

அவரிடம் வடக்கு மக்களின் சமகாலப் பிரச்சினைகளையும், தேவைகளையும், இயலாமைகளையும் தெட்டத் தெளிவாக விவரித்துள்ளார்–விளக்கி உள்ளார்–யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை.

தமிழ் மக்கள் போரை விரும்பவில்லை. ஆனால் சிங்கள மக்கள் அனுபவிக்கும் சகல உரிமைகளையும் தாமும் அனுபவிக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள்.

ஆனால்-

போர் முடிவுற்ற இன்றைய சூழலில், தமிழ் மக்களுக்கு எரிச்சலூட்டும் நடவடிக்கைகளை அரசும் சிங்கள மக்களும் தொடர்ந்து மேற்கொள்கின்றனர். அத்தோடு தமிழ் மக்களைச் சந்தேகக் கண் கொண்டு பார்க்கும் நிலையே தொடர்கிறது–

தமிழ் மக்கள் போரை விரும்புபவர்கள் அல்லர். சிங்கள மக்கள் அனுபவிக்கும் சகல உரிமைகளைத் தாமும் அனுபவிக்க இடமளிக்க வேண்டும் என்பதனையே அவர்கள் விரும்புகிறார்கள். அதனையே கோருகின்றார்கள்–

வடக்கு மாகாண சபைத் தேர்தல், தமிழ் மக்களுக்கு மிக அவசியமானது. எங்களுடைய உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கு அது சிறந்த மார்க்கம்–என்றும் யாழ்.ஆயர், ஆஸ்திரியத் தூதரிடம் விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துரைத்திருக்கிறார்.


இலங்கையில் தமிழ் மக்கள் தமது ஜனநாயக, உரிமைகளை மற்றும் தம்மைத் தாமே ஆளும் உரிமைகளையே ஜனநாயக வழிமுறை சார்ந்து கோருகிறார்கள், கேட்கிறார்கள். போர் முடிவுற்று நான்கு ஆண்டுகள் கரைந்தோடி விட்ட போதிலும் அந்தப் பக்கம் திரும்பிப் பார்க்கவும் விருப்பமன்றி, எமது மக்களுக்குப் பாதகமாக, உரிமைகளைக் காலால் மிதிக்கும் மார்க்கத்திலேயே, பாதையிலேயே விறுக்கன் நடைபோடக் கங்கணம் கட்டி நிற்கிறது இன்றைய அரசு.

இந்த நிலையை நேரில் கண்டு, கேட்க விரும்பி இன்னும் பலரும் இங்கு வருவது ஒரு வகையில் பிரதிபலன்களுக்கு வழி செய்யவும் கூடும்.

# வடக்குத் தேர்தலின் பின்னர் 13 இல் கைவைக்க முடியுமா?

## இந்தியாவின் பொறியில் சிக்கித் தவிக்கும் இலங்கை

உப்புல் யோசெப்பெர்னாண்டோ
தமிழில்: வீ.எஸ்.ரீ.





மாகாண சபைகளுக்கான காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை நீக்கிக் கொள்ளாது அரசு வடமாகாண சபைத் தேர்தலை நடத்துமேயானால் நான் அரசை விட்டு விலகி விடுவேன் ''

கடந்த மே தின நிகழ்வின்போது அமைச்சர் விமல் வீரவன்ச தமது ஆவேசப் பேச்சின் மூலம் சிங்கள மக்களை உசுப்பேத்தும் வகையில் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டிருந்தார்.

தமது அன்றைய வீரப் பிரதாபப் பேச்சை இன்று விமல் வீரவன்ச மறந்திருக்க இயலாது. காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களுடன் கூடிய விதத்தில் வடமாகாண சபைத் தேர்தலை நடத்த மஹிந்த தயாராகி வருகிறார். ஆனால் விமல் வீரவன்சவோ தாம் முன்னர் வாயடித்தது போன்று தமது அமைச்சர் பதவியை விட்டு விலகப் போவதாகத் தோன்றவில்லை. அதேவேளை வடமாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதி மஹிந்தவோ மாகாண சபைகளுக்கான காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை நீக்கிக் கொள்ளப் போவதாகவும் தோன்றவில்லை. அந்த வகையில் பார்க்கும் போது ஒன்றில் விமல் வீரவன்ச தமது வாயை மூடிக்கொண்டு தமது அமைச்சர் பதவியைக் காப்பாற்றிக் கொள்ள முயல்வதாகக் கருத வேண்டியுள்ளது. இல்லையேல் வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் முடிந்த பின்னர், மாகாண சபைக்கான காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை தாம் நீக்கிக் கொள்ளவுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த, விமல் வீரவன்சவுக்கு உறுதிமொழி வழங்கியிருக்கக்கூடும் எனக் கருத வேண்டியுள்ளது.

'' வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு முன்னர், மாகாண சபைகளுக்கான காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை நீக்கிக் கொள்ள வேண்டாம். அவ்விதம் நீக்குவதானாலும் கூட அதனை வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்திய பின்னர் மேற்கொள்ளவும் ''

இந்திய அரசு மேற்குறிப்பிட்டவாறான இரகசிய செய்தியொன்றை இலங்கை அரசுக்கு வழங்கியுள்ளதாகவும் செய்திகள் உலவுகின்றன.

உண்மையில் அது இலங்கை அரசுக்கான இந்திய அரசின் செய்தி எனக் கொள்ள இயலாததொன்று, அது உண்மையில் இலங்கை அரசைச் சிக்கலில் மாட்டி வைக்கும் இந்திய அரசின் ஒரு பொறியே.

இவ்விதம் அரசின் உயர் மட்டப் பிரமுகரொருவரே தெரிவித்துள்ளார்.

உண்மையில் இந்தியாவின் விருப்பு மாகாண சபைத் தேர்தலை நடத்துவித்து அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றியீட்ட வைப்பதேயாகும். அவ்விதம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தலை வெற்றி கொண்டதும், காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களுடன் கூடிய நிர்வாகத்தை முன்னெடுக்க தமிழ் மக்கள் எமக்கு ஆணை வழங்கியுள்ளனர். அதில் மாற்றம் மேற்கொள்வதென்பது மக்கள் வழங்கிய ஆணையை மீறும் ஒரு செயற்பாடாகும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் தெரிவிக்க இயலும்.

அது மட்டுமன்றி, வடக்கு மாகாண சபையின் முதலாவது உத்தியோக பூர்வ செயற்பாடாக, அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை நீக்கிவிடும் அரசின் முயற்சிக்கு எதிராக பிரேரணையொன்றை முன்வைத்து நிறைவேற்றிக் கொள்ளவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் இயலும். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூட 13 ஆவது திருத்தத்தில் மாற்றம் மேற்கொள்வதை ஏற்றுக்கொள்ளாதவரே. எதிரணியில் இருந்தாலும் அவர் கூட அத்தகையதொரு சந்தர்ப்பத்தில் அந்தப் பிரேரணைக்கு ஆதரவு வழங்க இடமுண்டு.

வடமாகாண சபையை நிறுவிய பின்னர் அது மக்கள் ஆணையுடன் நிறுவப்பட்டதொன்றென்பதால் அம் மாகாண சபை நிர்வாகம் கோருமானால், இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் படி மாகாண சபைகளுக்குரிய வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பாதுகாக்கும் நிலைப்பாட்டுக்கு இந்தியாவும் ஆதரவளிக்கக்கூடும்.

1988 ஆம் ஆண்டில் விடுதலைப்புலிகள் அமைப்பின் விருப்புக்கு ஏற்ற விதத்தில் வடமாகாண சபையை மாற்றியமைக்கச் செய்ய அவ்வேளைய ஜனாதிபதி பிரேமதாச அரசமைப்பில் திருத்தம் மேற்கொண்டு மாகாண சபைகளைக் கலைத்துவிடத் தயாரானபோது இதே விதத்திலேயே இந்தியா தலையீடு செய்தது. வடமாகாணத்தில் மாகாண சபைத் தேர்தலை மீண்டும் நடத்த வேண்டுமென விடுதலைப் புலிகள் அமைப்பு கோரிய போது ஜனாதிபதி பிரேமதாசவும் அதற்காக மாகாண சபைகளைக் கலைத்துவிடும் விதத்தில் அரசமைப்பில் மாற்றம் மேற்கொள்வது குறித்து ஆலோசித்தபோது இந்தியா 1988 ஆம் ஆண்டில் மாகாண சபைத் தேர்தல் மூலம் உருவாக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாண சபை நிர்வாகத்தையும் அதன் முதலமைச்சரின் பதவியையும் பாதுகாக்க முன்வந்தது. விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் பிரேமதாசவுக்கும் இடையில் பேச்சு வார்த்தைகள் இடம்பெற்று வந்த வேளையில் வடக்கு கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் இந்திய அமைதி காக்கும் படையினரின் விமானத்தில் இந்தியாவுக்குச் சென்று திரும்பினார். அவ்வேளைய பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன இதனால் கடும் கோபமுற்று இலங்கையின் குடிவரவு குடியகல்வு சட்ட நடைமுறையை மீறி வரதாராஜப் பெருமாள் இந்தியாவுக்குச் சென்றமை வடமாகாணத்தை இந்தியாவின் ஒரு பிராந்தியமெனக் கருதியே ஆகும் என்று விமர்சித்தார். பிரேமதாச அரசைச் சற்றும் கணக்கெடுக்காது இந்தியாவுக்குச் சென்ற வரதராஜப் பெருமாள் பிரேமதாச அரசை ஏளனம் செய்யும் வகையில் அதே இந்திய அமைதி காக்கும் படையினரின் விமானத்தில் இலங்கைக்குத் திரும்பினார். பின்னர் வடக்கு கிழக்கு மாகாண சபையில் தமிழீழப் பிரகடனத்தை மேற்கொண்டதுடன், முறையற்ற விதத்தில் இந்திய அமைதி காக்கும் படையினருடன் இந்தியாவுக்குத் தப்பி ஓடினார்.

இம்முறை வடக்கில் மாகாண சபைத் தேர்தல் மூலம் வடக்கு மாகாண சபை நிறுவப்பட்டதன் பின்னர் அரசு மாகாண சபைகளின் அதிகாரங்களில் மாற்றம் மேற்கொள்ள முயலுமானால், மாகாண சபையையும் அதன் முதலமைச்சரையும் பாதுகாக்க இந்தியா எதனையும் செய்யக்கூடும்.

அத்தகையதொரு நிலையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் மாகாண சபைகளுக்குரிய காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை நீக்கிவிட இயலுமென எண்ண இயலாது. அத்தகையதொரு சூழமைவில் விமல் வீரவன்ச மற்றும் சம்பிக்க ரணவக்கவுடன் மோதிக் கொள்வது இந்தியாவுடன் மோதிக் கொள்வதை விட மேலானது என ஜனாதிபதி மஹிந்த உணர நேர்ந்தால் அதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை.

★

# இன்னும் ஓர் ஆயுத மோதல் வெடித்தால் நாட்டின் நிலைமை படுமோசமாகிவிடும்

## எச்சரிக்கிறார் முதலமைச்சர் வேட்பாளர் விக்னேஸ்வரன்

ரம்யன்

வடக்கு மாகாணத்தில் மொழி மற்றும் வாழ்வியல் கலாசார விழுமியங்கள் முற்றுமுழுதாக வேறுபட்டவையாக உள்ளன. எனவே அங்கு இவை தொடர்பான மக்களின் கவலைகளைக் கவனித்து பரிகாரம் காண்பதற்கு அதிகாரம் பகிர்ந்து கொள்ளப்பட்ட ஆட்சி கட்டமைப்பு ஒன்று தேவைப்படுகின்றது. கடும் ஒடுக்குமுறையானது பிரச்சினையை மோசமடையவே செய்யும் என்பதை இந்த அரசு புரிந்து கொள்ள வேண்டும். ஏனென்றால் இப்போதைய அணுகுமுறை தொடருமானால் இன்னொரு ஆயுத மோதல் ஒன்று தலையெடுப்பது தவிர்க்க முடியாததாகிவிடும். எனவே தான் இரண்டு சமூகங்களுக்கு இடையில் நம்பிக்கையைக் கட்டி எழுப்புவது மிக முக்கியம் என்று நான் நம்புகிறேன்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் உயர் நீதிமன்ற முன்னாள் நீதியரசரும், வடமாகாண சபைக்கான தேர்தலில் முதலமைச்சர் பதவிக்கு போட்டியிடுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளவருமான சி.வி.விக்னேஸ்வரன். கொழும்பு டெய்லி மிறர் பத்திரிகைக்கு அவர் அளித்துள்ள பேட்டியின் சில முக்கிய விவரங்கள் இங்கே தரப்படுகின்றன.

வடமாகாண சபை முதலமைச்சர் பதவிக்கு போட்டியிடுவதற்கு தமது மனோநிலையை மாற்றிக் கொண்டதைப் பற்றிய கேள்விக்கு அவர் அளித்த பதில் வருமாறு:-

இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னர் வடமாகாண சபை முதலமைச்சர் பதவிக்கு என்னை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும்படி விடுக்கப்பட்ட அழைப்பை நான் நிராகரித்திருந்தேன். தொடர்ந்தும் அதே நிலையைப் பேணி வந்தேன். ஆனால் எனது மாணவர்கள், சட்டத்துறையிலுள்ள நண்பர்கள் மற்றும் பலர் தொடர்ந்து என்னை அந்த அழைப்பை ஏற்றுக் கொள்ளும்படி வற்புறுத்தி வந்தார்கள். அது என் மீது சுமத்தப்பட்டுள்ள ஒரு கடமை என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். இதில் என் மீது தொடர்ந்தும் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டு வந்த போதிலும் அதனை நான் மறுத்திருக்க முடியும். எனவே அதைப் பற்றி ஆழமாகச் சிந்தித்தேன். பிறகு த.தே. கூட்டமைப்பிலுள்ள சகல கட்சிகளும் என்னை ஒரு பொது வேட்பாளராக ஏற்றுக் கொள்வார்களானால் போட்டியிடுவதில் ஆட்சேபனை இல்லையென்று தெரிவித்தேன்.

அதைத்தான் அவர்கள் செய்துள்ளார்கள். அதன்படி த.தே. கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சம்பந்தன், மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் பலர் எனது இல்லத்துக்கு வருகை தந்து தர்க்கத்துக்கு இடமில்லாத ஒரு தீர்மானத்தை எடுத்திருப்பதாக அவர்கள் தெரிவித்து முதலமைச்சர் பதவிக்கு போட்டியிட அனுமதிக்குமாறும் கேட்டுக் கொண்டார்கள். அதன் பேரிலேயே வரும் வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிட நான் சம்மதித்தேன். அதுதான் எனது திட்டமான நிபந்தனையாக இருந்தது. அதன் மீது நான் போட்டியிட சம்மதம் தெரிவித்தேன்.



சமூகங்களுக்கிடையில் நம்பிக்கை கட்டியெழுப்பப்பட வேண்டும்

வடக்கு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் எதற்கு நீங்கள் முதல் முக்கியத்துவம் கொடுப்பீர்கள் என்ற கேள்விக்கு அவர் கூறியதாவது:-

வடமாகாணத்தில் நிலவும் பிரச்சினைகளைக் கவனத்தில் எடுக்கும் போது மக்களின் துன்பங்களுக்கு ஈடு செய்தல், மறு வாழ்வளித்தல், மீள் கட்டுமானங்கள், அபிவிருத்தி ஆகியவை முதலில் முக்கியத்துவம் பெறும். இப்பொழுது அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்திகள் யாவும் பல்வேறு தீர்க்கப்படாத பிரச்சினைகளின் பின்னணியிலேயே செய்யப்படுகின்றன. இதனால் தொடர்ந்தும் வடக்கு மக்கள் குடும்பங்களைத் துன்புறுத்துபவையாகவே உள்ளன. மக்கள் தம் வீடுகளை இழந்துள்ளார்கள். அவைகள் கட்டியெழுப்புவதற்கு வழியில்லாமல் வாழ்வாதாரத்தையே இழந்துள்ளார்கள்.

இன்னொரு முக்கிய , ஆனால் விவாதித்து தீர்க்க முடியாத கஷ்டமான விடயம் என்னவென்றால் பெரும் எண்ணிக்கையில் இராணுவம் குவிக்கப்பட்டிருப்பதாகும். 20 படைப்பிரிவுகளில் பெரும்பாலும் 10-15 பிரிவுகள் வடக்கில் நிலைகொண்டுள்ளன. அவர்கள் ஆயிரக் கணக்கான ஏக்கர் காணிகளை கைப்பற்றி வைத்துள்ளனர். சில காணிகளில் வடக்குக்கு அப்பால் வேறு இடங்களைச் சேர்ந்தவர்கள் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள். இவர்களின் உற்பத்திகள் அந்தக் காணிகளின் உரிய சொந்தக்காரர்களுக்கே திரும்பவும் விற்கப்படுகின்றன- என்றார்.

### இந்தியாவால் திணிக்கப்பட்டதா?

13 ஆவது அரசமைப்புத் திருத்தம் இந்தியாவால் திணிக்கப்பட்டதா் என்ற கேள்விக்கு அவர் தொடர்ந்து பதிலளிக்கையில் குறிப்பிட்டதாவது:-

இந்தச் சட்டப் பிரிவு இந்தியாவால் திணிக்கப்பட்டது என்று நான் நினைக்கவில்லை. இலங்கை- இந்திய ஒப்பந்தம், அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பது பற்றி இலங்கை அரசைக் கவனிக்கும்படிதான் கூறுகின்றது.

13 ஆவது திருத்தமானது உண்மையில் ஜே.ஆர். ஜயவர்த்தன ஜனாதிபதியாக பதவி வகித்த வேளையில் வடிவமைக்கப்பட்டது. வடக்கு, கிழக்கில் நிலவும் பிரச்சினைகளை இலகுபடுத்துவதற்கான தீர்வைக் காணும்படியே அது வலியுறுத்துகின்றது. ஆனால் இந்த அமைப்பு முறை நாட்டின் சகல மாகாணங்களிலும் செயல்படுத்தப்பட்டது. அதன் பிறகு மாகாண சபைத் தேர்தல்களைத் தவிர அதன் மீது வேறு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அத்தேர்தல்களும் குழப்பங்களுக்கு இடையிலேயே நடத்தப் பெற்றன.

இது கால வரை 13 ஆவது திருத்தத்தின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்கள் குறித்து தென்பகுதி மாகாண சபைகள் எதுவித கரிசனையும் கொண்டதாகத் தெரியவில்லை. ஆனால் தனிப்பட்டவர்களின் அதிகாரங்களை அதிகரித்துக் கொள்வதிலேயே கருத்து செலுத்தியிருக்கின்றன. ஏனென்றால் மத்திய அரசிடமோ மாகாண அரசிடமோ அதிகாரங்கள் குவிந்திருப்பது பற்றி அவர்கள் கவலைப் பட்டதில்லை.

### இன்னுமோர் போர் வெடித்தால்

அவர் மேலும் தெரிவிக்கையில், இன்னுமொரு போர் வெடிக்குமானால் அரசின் மீது இப்போது இருக்கும் அனுதாபங்கள் மறைந்து போய் விடும். போர் நடைபெற்றுக் கொண்டிருந்த போது இந்தியாவிடமும் சர்வதேசத்திடமும் அரசு உதவி கேட்டு நின்றது. தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதாகவும் வாக்குறுதிகளை அளித்திருந்தது. ஆனால் அதனை நிறைவேற்ற அரசு தவறிவிட்டது- என்றார்.

13 ஆவது திருத்தம் தொடர்பாக அவர் தொடர்ந்து கூறுகையில்; 13 ஆவது திருத்தம் முழுமையானதல்ல. அதில் நிறையவும் குறைபாடுகள் இருக்கின்றன. இதில் முக்கியவிடயமானது ஆளுநரின் சம்மதமின்றி எந்தவொரு சட்டமும் நிறைவேற்றப்பட முடியாது. இது நிறைவேற்று அதிகாரத்தினால் உருவாக்கப்பட்ட ஒன்று. அந்த வகையில் 13 ஏ என்பது பயனற்றது என்றாலும் அதுவும் கூட இல்லையென்றால் தமிழருக்கு ஒன்றுமே இல்லாமல் போய்விடும். அதனால் தான் அதன் கீழ் போட்டியிடுவதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தீர்மானித்தது. என் கருத்து என்னவென்றால் இதுவரை காலமும் வடமாகாணத்துக்கென ஜனநாயக நிறுவனம் எதுவும் இருக்கவில்லை. எனவே 13 ஏ இன் கீழ் ஆகுதல் நாம் அதனை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஒலிவர் டுவிஸ்ட் போன்று இன்னும் சிலவற்றைக் கேட்கலாம்

### ஆளுநரின் அதிகாரங்கள்

ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பற்றி அவர் மேலும் குறிப்பிடுகையில்:-

13 ஆவது அரசமைப்பு மட்டும் போதாது. மாகாணங்களுக்கு மேலும் அதிகாரங்களை வழங்குவதன் மூலம் ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களும் ஆதிக்கமும் வலுவிழக்கச் செய்யப்பட முடியும். அண்மையில் ஒரு செய்தியில் படித்தேன். மாகாண சபை விவகாரங்களில் தலையிட வேண்டாம் என்று ஆளுநர்களை ஜனாதிபதி கேட்டுக் கொண்டுள்ளார். இப்போதைய வடமாகாண ஆளுநர் புதிய மாகாண சபை நிறுவப்பட்டாலும் அதிகாரிகள் தாம் சொல்வதன் படி செயல்பட வேண்டும் என்று கூறியிருப்பதாக கேள்விப்பட்டேன். சிவில் நிர்வாகங்களுக்கு இராணுவ அதிகாரிகளை நியமிப்பதனால் ஏற்படும் நிலைமை இதுவாகும்.

ஏனையவர்களுடன் இணைந்து பணியாற்றுவது அல்லது மற்றவர்களின் கருத்துக்களுக்கு வளைந்து கொடுப்பது என்பதில் அவர்களுக்கு பழக்கமில்லாமைதான் காரணம்.

மேலும் அரசாங்கமானது துரதிஷ்டவசமாக மத்தியில் அதிகாரங்களை சேர்த்துக் கொள்வதிலேயே கவனம் கொண்டுள்ளது. மேலும் அதிகம் அதிகமாக அதிகாரங்களை சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற அவர்களின் ஆர்வத்துக்கு 18 ஆவது அரசமைப்புத் திருத்தம் பொருத்தமான உதாரணம். இந்த மாதிரியான சூழ் நிலையில் 13 ஆவது திருத்தத்தில் பிரதான திருத்தங்கள் வரும் என்று எதிர்பார்ப்பது கடினம். ஆனால் அதனை போதுமான அளவு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் ஆவணமாக திருத்தி அமைக்க முடியும். அதற்காக மாகாண சபைகள் இலங்கையின் மத்திய அரசு மற்றும் இந்திய அரசு ஆகியவை ஒன்றாக இணைந்து பணியாற்றுவது அவசியம் என்றார்.

# அதிவேக தரவு பரிமாற்றம் கொண்ட SanDisk





தரவுகளைச் சேமிப்பதற்குப் பயன்படும் பல்வேறு சேமிப்புச் சாதனங்களில் மிகவும் இலகுவாகப் பயன்படுத்தக்கூடியதாக SanDisk காணப்படுகின்றது.
தற்போது முன்பு காணப்பட்ட SanDisk இனை விடவும் இரு மடங்கு வேகமாக தரவுகளை பரிமாற்றம் செய்யக்கூடிய SanDisk உருவாக்கப்பட்டுள்ளது.
மிக அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள Extreme Micro&SDXC எனப்படும் இந்த நவீன SanDisk ஆனது 80MB/s எனும் வேகத்தில் தரவுகளை பரிமாற்றம் செய்யக்கூடியவையாக காணப்படுகின்றன.
மேலும் 16GB இருந்து 64GB வரையான கொள்ளளவுடையதாக உருவாக்கப்பட்டுள்ள இந்த சேமிப்பு சாதனத்தின் விலையானது 59.99 டொலர்களிலிருந்து 199 டொலர்கள் வரை அமைந்துள்ளது.

# வந்துவிட்டது கைபேசிக்கான பயர்பொக்ஸ் இயங்குதளம்




Mozilla நிறுவனம் தான் அறிவித்தபடி, கைபேசிகளுக்கான பயர்பொக்ஸ் இயங்குதளத்தை அறிமுகம் செய்துள்ளது.
முதன் முறையாக ஸ்பெயின் நாட்டில், பயர்பொக்ஸ் இயங்குதளங்கள் கொண்ட கைபேசிகள் அறிமுகப்படுத்தப்பட்டன.
இதனைத் தொடர்ந்து உலகின் பல்வேறு நாடுகளிலும், இந்த கைபேசிகளை வெளியிட Mozilla நிறுவனம் திட்டமிட்டுள்ளது.
மேலும் கூடிய விரைவில் இதனை அனைவரும் உபயோப்படுத்தும் சூழ்நிலை உருவாகும் என்றும் Mozilla நிறுனம் அறிவித்துள்ளது.

# Tizen இயங்குதளத்துடன் அறிமுகமாகும் ரேப்லட்




2 மெகாபிக்சல்களைக் கொண்ட பிரதான கமரா மற்றும் வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்காக 0.3 மெகாபிக்சலைக் கொண்ட துணைக் கமரா ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

ஜப்பான் நிறுவனம் ஒன்று அறிமுகப்படுத்தவிருக்கும் புதிய ரேப்லட் ஆனது லினக்ஸ் இயங்குதளத்தில் ஒரு பிரிவான Tizen 2.1 எனும் இயங்குதளத்தைக் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.
10 அங்குல அளவுடையதும், 1920 x 1200 பிக்சல்கள் ரெசொலுசன் உடையதுமான தொடுதிரையைக் கொண்ட இந்த ரேப்லட் ஆனது 1.4 GHz வேகத்தில் செயலாற்றக்கூடிய ARM Cortex&A9 Quad&Core Processor, பிரதான நினைவகமாக 2GB RAM ஆகியவற்றைக் கொண்டுள்ளது.
மேலும் 2 மெகாபிக்சல்களைக் கொண்ட பிரதான கமரா மற்றும் வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்காக 0.3 மெகாபிக்சலைக் கொண்ட துணைக்கமரா ஆகியவற்றினை உள்ளடக்கியுள்ளதுடன் 32GB சேமிப்பு வசதியையும் கொண்டுள்ளதாக வெளிவரவுள்ளது.





# அதிநவீன ஸ்மார்ட் கைக்கடிகாரம்

ஸ்மார்ட் கைபேசிகள் மக்கள் மத்தியில் பலமான வரவேற்பைப் பெற்றதைத் தொடர்ந்து அதே தொழில்நுட்பத்தை உள்ளடக்கிய கைக்கடிகாரங்களை உற்பத்தி செய்யும் முயற்சியில் பல்வேறு நிறுவனங்கள் களமிறங்கியுள்ளன.
இப்போட்டியில் Emopulse எனும் நிறுவனம் ஏனைய நிறுவனங்களினது ஸ்மார்ட் கைக்கடிகாரங்களை விடவும் முற்றிலும் வித்தியாசமான கைக்கடிகாரங்களை உற்பத்தி செய்து அறிமுகப்படுத்தியுள்ளது.
இது Linux AI இயங்குதளத்தைக் அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டிருப்பதுடன் அப்பிளின் iPhone 4S இன் திரைக்கு நிகரான தொடுதிரையினையும் கொண்டுள்ளது.
மேலும் இதில் 2 GB பிரதான நினைவகம் காணப்படுவதுடன் 128 அல்லது 256 GB கொள்ளளவுடைய சேமிப்பு வசதியும் தரப்பட்டுள்ளது. இவை தவிர 12 மெகாபிக்சல்களை உடைய கமராவையும் கொண்டுள்ளமை விசேட அம்சமாகும்.

# Samsung அறிமுகம் செய்யும் Mega 6.3 DUOS



Samsung Galaxy Mega 6.3 Samsung Galaxy Mega 5.8

தொடர்ச்சியாக பல தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய ஸ்மார்ட் கைபேசிகளை அறிமுகப்படுத்திவரும் சம்சங் நிறுவனமானது தற்போது Samsung Galaxy Mega 6.3 DUOS எனும் புத்தம் புதிய ஸ்மார்ட் கைபேசி உற்பத்தியில் மும்முரமாக இறங்கியுள்ளது.
இரண்டு சிம்களை பயன்படுத்தக்கூடியதாக வடிவமைக்கப்படும் இக்கைபேசியானது 6.3 அங்குல அளவுடைய LCD தொடுதிரையைக் கொண்டுள்ளதுடன், 1.7 GHz வேகத்தில் செயலாற்றவல்ல Dual&Core Exynos Processor, மற்றும் பிரதான நினைவகமாக 1 GB RAM ஆகியவற்றையும் கொண்டுள்ளது.

# மனித உடலைத் தாங்கும் செயற்கை வன்கூட்டை உருவாக்கி ஜப்பான் மாணவிகள் சாதனை

மனித உடலுக்கு வடிவத்தைக் கொடுப்பதுடன் உடற்பாகங்களை தாங்குவதில் என்புகளால் ஆக்கப்பட்டுள்ள வன்கூடுகளின் பங்களிப்பு அளப்பரியதாகும். எனினும் சில சமயங்களில் இவ்வாறான என்புகளில் ஏற்படும் பல்வேறு நோய்களால் உடலைத் தாங்கிக்கொண்டு அசைவதற்கு இயலாமல் போகலாம். இவ்வாறான சந்தர்ப்பங்களில் கைகொடுக்கக்கூடிய செயற்கையான புற வன்கூட்டை உருவாக்கி ஜப்பான் மாணவிகள் சாதனை படைத்துள்ளனர்.
MK3 Exoskeleton Suit என அழைக்கப்படும் இந்த செயற்கை வன்கூடானது 7 அடி உயரமானதாகவும், 55 பவுண்ட் எடை உடையதாகவும் காணப்படுகின்றது.
எனினும் இதன் விலைதான் சற்று அதிகமாகும். அதாவது 123,000 டொலர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.





துரிதமாக இடம்பெற்று வரும் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் கட்டடத் தொகுதிகளை அமைக்கும் பணிகள் (க-6)

கடன் வழங்கிய வங்கிகள்

## ஆவணங்களை எடுத்துச் செல்வதால் அல்லற்படும் கிளிநொச்சி மக்கள்

அக்கராயன், ஜூலை 19

வங்கிகளில் கடன்களைப் பெற்று அவற்றைச் செலுத்தத் தவறியவர்களின் முக்கிய ஆவணங்களை வங்கிகள் எடுத்துச் செல்வதால் அத்தகையோர் இடர்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடையாள அட்டைகள், குடும்ப அட்டைகள், திருமணப் பதிவுச் சான்றிதழ்கள், காப்புறுதிப்பத்திரங்கள் போன்ற முக்கிய ஆவணங்களை வங்கிகள் எடுத்துச் செல்வதால் பல குடும்பங்கள் பெரும் இடர்களை எதிர்கொண்டுள்ளன.

கிளிநொச்சியின் மலையாளபுரம், கிருஷ்ணபுரம், தொண்டமான்நகர், உதயநகர் ஆகிய பகுதிகளில் வசிக்கும் பல குடும்பங்களின் முக்கிய ஆவணங்களை வங்கிகள் எடுத்துச் சென்றதால் இந்தக் குடும்பங்கள் தமது நிரந்தர வீட்டுத்திட்ட வேலைகளை நிறைவு செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

வீட்டுத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் உதவி நிறுவனங்கள் ஆவணங்களைக் கேட்கும் போது அவற்றைக் காண்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் தாம் பாதிக் கப்பட்ட நிலையில் உள்ளதாக அந்தக் குடும்பங்கள் தெரிவித்துள்ளன. (க-18)

### குடிதண்ணீர் நெருக்கடியில் கோணாவில் காந்தி கிராமம்

கிளிநொச்சி கோணாவில் காந்தி கிராமத்தில் குடிதண்ணீர் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக்கிராமத்தின் நிலத்தடி நீர் உவரடைந்து வருவதன் காரணமாகவே குடிதண்ணீர் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகக் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் எஸ்.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

காந்திகிராமத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் இந்தத் தகவலை அவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

எமது கிராமத்தில் அமைந்துள்ள 7 கிணறுகளில் 5 கிணறுகள் உவரடைந்துள்ளன. மேலும் இங்குள்ள போக்குவரத்து வீதிகள் முழுமையாகச் சேதமடைந்துள்ளன. உருத்திரபுரம், சிவநகர், சோலைநகர் ஆகிய கிராமங்களுக்குச் செல்லும் வீதிகளில் மூன்று பாலங்களை அமைக்க வேண்டிய தேவையுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். தற்போது காந்தி கிராமத்தில் 190 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## கிளிநொச்சி–அக்கராயன் வீதியைப் புனரமையுங்கள்

மீண்டும் கோரிக்கை




அக்கராயன், ஜூலை 19

கிளிநொச்சியிலிருந்து அக்கராயன் வரையான வீதியைப் புனரமைக்குமாறு மக்கள் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரிடம் பொது மக்கள் இக்கோரிக்கையை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சியிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட வீதிப் புனரமைப்பு வேலைகள் புதுமுறிப்புக் கிராமத்துடன் இடைநிறுத்தப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. இந்த நிலையிலேயே மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

புதுமுறிப்பிலிருந்து அக்கராயன் வரை வீதி புனரமைக்கப்படுமாயின் ஊற்றுப் புலம், காந்திகிராமம், கோணாவில், யூனியன்குளம், ஸ்கந்தபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பெரும் பயனடைவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (க-18)

## போக்குவரத்து நெருக்கடிக்குள் கண்டாவளைப் பகுதி மக்கள்

கிளிநொச்சி கண்டாவளைப் பகுதி மக்கள் பெரும் போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டு வருவதாகத் தெரிய வருகின்றது.

கண்டாவளைக் கிராம அலுவலர் பிரிவில் உள்ள சுமார் 13 கிராமங்களில் தற்போது 400 க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வருகின்றனர். ஆனால் இங்கு போக்குவரத்து வசதிகள் இல்லாத நிலையே காணப்படுகின்றது. ஏ-35 வீதியின் வெலிக்கண்டல் சந்தியில் இருந்து சுமார் 4 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள இந்தக் கிராமங்களில் வசிக்கும் மக்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வேறு இடங்களை நாடவேண்டிய நிலையில் உள்ளனர்.

மேலும் இந்தப் பகுதியில் இருந்து வேறு இடங்களுக்குச் செல்லக்கூடிய வகையில் வாடகைக்கு அமர்த்தக் கூடிய வாகனங்களும் இல்லாததால் இந்தப் பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க-6)

**இந்தக் கிராமங்களில் வசிக்கும் மக்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வேறு இடங்களை நாடவேண்டிய நிலையில் உள்ளனர்.**



## இந்திய வீடுகளை வழங்குவதால் வீட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு

கூறுகிறார் கரைச்சி பிரதேச செயலர்



அக்கராயன், ஜூலை 19

இந்திய வீடுகளை வழங்குவதன் மூலமாக கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் வீட்டுப் பிரச்சினைகள் குறைவடையும் என கரைச்சிப் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இங்கு இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். கோணாவில் கிராமத்தில் வசிக்கும் 1000 குடும்பங்களில் 800 குடும்பங்களின் வீட்டுத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. ஏனைய குடும்பங்களின் வீட்டுத் தேவைகளும் நிறைவு செய்யப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-18)

வவுனியாவில் குறிப்பிட்ட நேரங்களில்

## கனரக வாகனங்களுக்கு பொலிஸாரால் தடை

வவுனியாவின் பிரதான வீதிகளில் பாடசாலை தொடங்கும் மற்றும் மூடும் வேளைகளில் கனரக வாகனங்கள் செல்வதற்குப் பொலிஸார் தடை விதித்துள்ளனர்.

வவுனியாவின் பிரதான வீதிகளில் கனரக வாகனங்களினால் வீதி விபத்துச் சம்பவங்கள் அதிகரித்தமை தொடர்பாக வவுனியா மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினர் மற்றும் வவுனியா அரச அதிபர் ஆகியோருக்குப் பெற்றோர் முறையிட்டதை அடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காலை 7.30 மணி தொடக்கம் 8 மணி வரையும், பிற்பகல் 1.30 மணி முதல் 2.30 மணி வரையும் கண்டி வீதியிலும் மன்னார் வீதியிலும் கனரக வாகனங்கள் தடுத்து நிறுத்தி வைக்கப்படுகின்றன. இதனை மீறுவோருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனப் பொலிஸார் அறிவுறுத்தல் விடுத்துள்ளனர். (க-402)



## பூட்டி வைத்திருந்த ‘கேற்’றை தூக்கிச் சென்ற திருடர்கள்

நெளுக்குளம், ஜூலை 19

வவுனியாவில் அமைந்துள்ள பாடசாலையொன்றின் வெளிவாயில் கேற்றை திருடர்கள் தூக்கிச் சென்றுள்ளனர்.

வவுனியா ஏ-9 வீதியில் அமைந்துள்ள பிரமண்டு மகாவித்தியாலயத்தின் வெளிவாயில் கேற்றே பூட்டுடன் தூக்கிச் செல்லப்பட்டுள்ளது.

வவுனியாவின் பல கிராமங்களிலும் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. இந்த வரிசையில் பாடசாலைகளில் வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருள்கள், கணினிகள் ஆகியனவும் திருடர்களின் கண்களில் இருந்து தப்பவில்லை. இந்த வகையில் வவுனியா பிரமண்டு மகாவித்தியாலயத்தில் வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருள்கள், கணினிகள் என்பன ஏற்கனவே திருடப்பட்டன. தற்போது அங்கு பூட்டப்பட்ட நிலையில் காணப்பட்ட வெளிவாயில் கேற்றும் தூக்கிச் செல்லப்பட்டுள்ளது. காவலாளி நியமிக்கப்படாததால் இந்தப் பாடசாலையில் அடிக்கடி திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுவதாக பாடசாலைச் சமூகத்தினர் தெரிவிக்கின்றனர். (க-402)

தருவது வித்தியா

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மன இறுக்கம் உருவாகும். அதிக வேலைச்சுமையால் கோபப்படுவீர்கள். விமர்சனங்களைக் கண்டு அஞ்சாதீர்கள். நயமாகப் பேசுபவர்களை நம்ப வேண்டாம். உத்தியோகத்தில் மேலதிகாரி குறை கூறுவார்.

**இடபம்:** நம்பிக்கைக்குரியவர்களின் சந்திப்பு நிகழும். உடன் பிறந்தவர்களின் ஆதரவு கிடைக்கும். கையில் காசு பணம் தேவையான அளவு இருக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி, சகஊழியர்களின் ஆதரவு கிடைக்கும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகள் வெற்றியடையும். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். பணவரவு உண்டு. அரச வேலைகளிலிருந்து வந்த தடைகள் நீங்கும்.

**கடகம்:** யதார்த்தமாகப் பேசி அனைவரையும் வியக்க வைப்பதுடன் தடைப்பட்ட காரியங்களையும் விரைந்து முடிப்பீர்கள். நண்பர்களின் வருகையுண்டு. வெளியூர் பயணங்கள் திருப்திகரமாக அமையும்.

**சிங்கம்:** மனக்குழப்பங்கள் விலகி தெளிவு பிறக்கும். உடன் பிறந்தவர்களால் உதவிகள் கிடைக்கும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். அயல் வீட்டாரின் அன்புத் தொல்லைகள் விலகும்.

**கன்னி:** வெளியூர் பயணங்கள் திருப்திகரமாக இருக்கும். ஆன்மி ஈடுபாடு அதிகரிக்கும். அலுவலகத்தில் மதிக்கப்படுவீர்கள். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள்.

**நாளை**

ஆடி-04 சனிக்கிழமை 20.07.2013
திதி: திரயோதசி பி.இ. 05.29 வரை
நட்சத்திரம்: கேட்டை பி.ப. 12.35 வரை
சுபநேரம்: 03.01 - 04.31 வரை
இராகுகாலம்: 09.01 - 10.31 வரை

**துலாம்:** எதிலும் அவசரப்பட வேண்டாம். புதியவர்கள் நண்பர்களாவார்கள். தள்ளிப் போன விடயங்கள் உடனே முடியும். உத்தியோகத்தில் இழந்த உரிமையைப் பெறுவீர்கள்.

**விருச்சிகம்:** சிலரின் விமர்சனங்களுக்கும், கேலிப் பேச்சுக்கும் ஆளாவீர்கள். யாரையும் யாருக்கும் நீங்கள் சிபாரிசு செய்ய வேண்டாம். நீங்கள் நகைச்சுவைக்காகச் சொல்ல கூடிய சில கருத்துக்கள் கூட தவறானதாக வாய்ப்பிருக்கிறது. உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைகழிக்கப்படுவீர்கள்.

**தனுசு:** சில காரியங்களை அலைந்து, திரிந்து முடிக்க வேண்டி வரும். வியாபாரத்தில் ஓரளவு லாபம் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களை அனுசரித்துப் போங்கள்.

**மகரம்:** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். தெளிவான முடிவுகளை எடுத்து அருகிலிருப்பவர்களை அசத்துவீர்கள். ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிப்பு, மரியாதை கூடும்.

**கும்பம்:** உங்களது இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். சபைகளில் மதிக்கப் படுவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்து கொள்வீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள்.

**மீனம்:** வீண் பதற்றம் வந்து செல்லும். நீண்ட நாள்களாக தள்ளிப்போன காரியங்கள் முடியும். நம்பிக்கைக்குரியவர்கள் சிலர் கைகொடுத்து உதவுவார்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஆதரவுக் கிடைக்கும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 8 | | | | | 9 | | |
| | 6 | 3 | 1 | 9 | | | 4 | 2 |
| | | | 7 | 8 | | 6 | 5 | |
| | 2 | | | | 3 | | | 4 |
| | 1 | 6 | | | | 2 | 9 | |
| 8 | | | 2 | | | | 6 | |
| | 4 | 8 | | 2 | 7 | | | |
| 1 | 3 | | | 5 | 8 | 7 | 2 | |
| | | 5 | | | | | 8 | 9 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 2 | 6 | 4 | 1 | 5 | 7 | 3 | 8 |
| 4 | 7 | 3 | 8 | 9 | 2 | 5 | 6 | 1 |
| 8 | 1 | 5 | 3 | 7 | 6 | 2 | 9 | 4 |
| 2 | 6 | 9 | 1 | 3 | 4 | 8 | 7 | 5 |
| 5 | 8 | 1 | 2 | 6 | 7 | 3 | 4 | 9 |
| 7 | 3 | 4 | 5 | 8 | 9 | 1 | 2 | 6 |
| 3 | 5 | 2 | 9 | 4 | 8 | 6 | 1 | 7 |
| 1 | 4 | 7 | 6 | 5 | 3 | 9 | 8 | 2 |
| 6 | 9 | 8 | 7 | 2 | 1 | 4 | 5 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண் டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவ லாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




அனலைதீவு - நயினாகுளம் கூழாவடியுறை அருள்மிகு
பூர்ணாதேவி புஸ்கலாதேவி சமேத ஹரிஹர புத்திரர் ஆலய
வருடாந்த மகோற்சவ பெருந்திருவிழா விஞ்ஞாபனம் - 2013

தேர்த்திருவிழா : 21.07.2013
தீர்த்தத் திருவிழா : 22.07.2013

- 21.07.2013 ஞாயிறு தேர்த்திருவிழா (9 ஆம் திருவிழா) முற்பகல் 10 மணிக்கு இரத ஆரோகணம், வீதியுலா, பச்சை சாத்துதல், மஹா அபிஷேகம் (108 சங்காபிஷேகம்), பஞ்சமுக அர்ச்சனை
- 22.07.2013 திங்கள் தீர்த்தத் திருவிழா (10 ஆம் திருவிழா) முற்பகல் 10.30 மணிக்கு
- தினமும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

நிதியுதவி வழங்க விரும்பும் அடியார்கள் பரிபாலன சபையுடன் தொடர்புகொள்ளவும்

அனலைதீவு - 05 ☞ விசேட படகு சேவை நடைபெறும்

பரிபாலன சபையினர்,
ஐயனார் ஆலயம்.

(30736)(45.6.3)

## தென்னந்தோட்ட உரிமையாளர் சங்க விசேட கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 19

வடபிராந்திய தென்னந்தோட்ட உரிமையாளர் சங்கத்தின் விசேட கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியில் உள்ள ஞானம்ஸ் ஹோட்டலில் நடைபெறும். இந்தக் கூட்டத்துக்கு இலங்கை தென்னந்தோட்ட உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவிருப்பதால் வடபிராந்திய தென்னந்தோட்ட உரிமையாளர் சங்க உறுப்பினர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சங்கத் தலைவர் பேராசிரியர் சு.மோகனதாஸ் அறிவித்துள்ளார். (ஒ-9)

## யாழ்ப்பாணம் அஞ்சல் வளாகத்திலும், மன்னார் அஞ்சல் வளாகத்திலும் உள்ள சிற்றுண்டிச்சாலைகளுக்கான கேள்விப்பத்திரம்

யாழ்ப்பாணம் அஞ்சல் வளாகத்திலும், மன்னார் அஞ்சல் வளாகத்திலும் உள்ள சிற்றுண்டிச்சாலைகளை நடத்துவதற்கு விண்ணப்பங்கள் தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து இத்தால் கோரப்படுகிறது. எனவே குறிப்பிட்ட சிற்றுண்டிச் சாலைகளை ஒப்பந்த அடிப்படையில் வாடகைக்குப் பெற்று நடத்த விரும்புவோர் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தில் தம்மால் வழங்கக்கூடிய ஆகக் கூடிய வாடகையைக் குறிப்பிட்டு 31.07.2013 ஆம் திகதிக்கு முன் னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் **பிரதி அஞ்சல் மாஅதிபதி, தபால் திணைக்களம், யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். அல்லது நேரடியாக சீலிடப்பட்ட கடித உறையில் வைத்து பிராந்தியக் கணக்கீட்டுக் கிளையில் உள்ள கேள்விப் பத்திரப் பெட்டியில் இடப்படுதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் யாழ் அஞ்சல் வளாக சிற்றுண்டிச்சாலையை நடத்துவதற்கான விண்ணப்பம் 2013 எனத் தவறாது குறிப்பிடுதல் வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விவரங்கள் தேவைப்படின் யாழ்ப்பாண பிராந்தியக் கணக்கீட்டுக் காரியாலய பதவிநிலை உத்தியோகத்தருடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

N. இரத்தினசிங்கம்,
தவிசாளர்,
பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் கேள்விச்சபை,
தபால் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

(சி/10532)
(10,6,3)

## வாழ்க்கையின் ஆதாரம்

''கடைசியில் எல்லோரும் சந்தோசமாக வாழ்ந் தார்கள்'' என கதையின் முடிவைச் சொல்கிறமாதிரி, ஆனந்தமாக இருப்பது என்பது முடிவு அல்ல; அது தான் உங்கள் வாழ்வின் முதற்படி ஆனந்தம் என்ற அடித்தளம் உறுதியாக இருந்தால்தான் அதன் மீது உங்கள் வாழ்வு என்ற மாளிகை உருவாகமுடியும். வாழ்வின் அடித்தளமான ஆனந்தம் உங்களிடம்தான் உருவாக வேண்டும். இந்த உண்மையை உணராமல் அதைத் தேடி எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறீர்கள்.

அடித்தளமே இல்லாத ஒரு வீட்டில் குடி இருப்பது எவ்வளவு ஆபத்தான விடயம் தெரியுமா? வீட்டின் கூரையைக் கையில் தாங்கிக் கொண்டே உங்களால் எவ்வளவு நேரம் இருக்கமுடியும்? சற்றுநேரம் நீங்கள் தளர்ந்தால், உங்கள் தலைக்கு மேலேதான் எல்லாம் வந்து விழும்.... இல்லையா? நிலையான அத்திபாரம் அமைந்தால், அதன்மீது எவ்வளவு பெரிய மாளிகையையும் நீங்கள் கட்டிக் கொள்ளலாம்.

ஞானக்கதிர்

வாழ்க்கையும் இப்படித்தான் நீங்கள் ஆனந்தமாக இருந்தால் உங்கள் விருப்பப் படி ஒரு வாழ்க்கையை உருவாக்கிக் கொள்ளலாம். ஆனால் இப்போது உங்களிடம் ஆனந்தம் என்னும் அத்திபாரமே இல்லாததால், வாழ்க்கையே பெரும் பாரமாகிவிட்டது. தினசரி செய்யும் வழக்கமான செயல்கள் கூட உங்களுக்குப் பெரும் சலிப்பையும் வேதனையையும் தரும் விடயங்களாக மாறிவிட்டன.




வலி. வடக்கு, ஜூலை 19

சுன்னாகம் ஹற்றன் நஷனல் வங்கியின் பத்தாவது ஆண்டு நிறைவையொட்டி வியாழக்கிழமை மருதனார் மடத்தில் இருந்து சுன்னாகம் ஹற்றன் நஷனல் வங்கி வரை நடைபவனி இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து வங்கிக் கிளையில் மங்கல விளக்கேற்றும் நிகழ்வு இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து கடந்த பத்தாண்டு காலத்தில் சுன்னாகம் கிளையில் முகாமையாளர்களாகக் கடமை யாற்றியவர்களின் பெயர்ப் பலகை திறந்து வைக்கப்பட்டது. வங்கியின் மேல் மாடியில் இடம்பெற்ற நிகழ்வில் முன்னாள் சுன்னாகம் ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளரும் தற்போதைய யாழ்ப்பாணம் மெற்றோ கிளை முகாமையாளருமான எஸ். சுந்தரேஸ்வரன், வட பிராந்திய சிரேஷ்ட முகாமையாளர் க.இந்திரவாசன், சங் கானை ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர் எம்.தயாகரன், வாழ்வகம் நிறுவனத்தின் தலைவர் கே.ரவீந்திரன் உட்பட மற்றும் பலர் உரையாற்றினார்கள். (ஒ-86)

## ஓய்வு பெறுகிறார் உதவிப் பணிப்பாளர்

தென்மராட்சி, ஜூலை 19

தென்மராட்சி கல்வி வலயத்தில் தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றும் கந்தையா சின்னத்துரை 35 வருட கால கல்விச் சேவையிலிருந்து நாளை சனிக்கிழமை இளைப்பாறவுள்ளார். கல்வி வலயத்தில் தமிழ்பாட உதவிக் கல்விப் பணிப்பாளராக இவர் கடமையாற்றிய காலத்தில் தமிழ்த்தினப் போட்டிகளில் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்கள்மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களிலான போட்டிகளில் பங்குபற்றி பதக்கங்கள் பெற்றிருக்கின்றனர். இந்த வருடம் இடம்பெற்ற தேசியமட்ட தமிழ்த்திறன் போட்டிகளில் வலயத்தைச் சேர்ந்த மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவி தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்று தங்கப் பதக்கம் பெறு வதற்கு வழி காட்டியவர் உதவிக் கல்விப் பணிப்பாளர் சின்னத்துரை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ-9)

வாக்களிப்பதற்கு பதிவு செய்யப்பட்டிருத்தல் கட்டாயத் தேவைப்பாடாகும்.

வாக்கு உங்கள் உரிமை



2013 வருடாந்த தேருநர் இடாப்பு மீளாய்வின் களக் கணக்கெடுப்புப் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.

தேருநர்களைக் கணக்கெடுக்கும் படிவத்தை இதுவரையில் பூர்த்தி செய்து கையளிக்கவில்லையெனின்

உடனடியாக செயற்படவும்.

தேருநர்களைக் கணக்கெடுக்கும் படிவங்களை சரியாகப் பூர்த்தி செய்து பிரதேசத்தின் கிராம அலுவலரிடம் அல்லது தான் வதியும் மாவட்டத்தின் தேர்தல்கள் அலுவலகத்தின் உதவிப் பதியும் அலுவலரிடம் உடனடியாகக் கையளிக்கவும். படிவங்கள் கிடைக்கப்பெறவில்லையாயின் அல்லது படிவங்களை மீள சேகரிப்பதற்கு அலுவலரொருவர் வரவில்லையாயின் உடனடியாக மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தை அல்லது கிராம அலுவலரை விசாரிக்கவும்

2013 ஆண்டிற்காக நீங்கள் வாக்காளரொருவராகப் பதிவு செய்யப்பட்டுள்ளதை நிச்சயப்படுத்திக்கொள்ளுங்கள்

தொலைபேசி இல. : 011- 2868441-42-43
மின்னஞ்சல் : info@slelections.gov.lk
இணையத்தளம் : www.slelections.gov.lk

தேர்தல்கள் ஆணையாளர்,
தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை, இராஜகிரிய.
2013.07.19

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்கள் -

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொழும்பு மாநகர | 011-2872247 | அம்பாந்தோட்டை | 047-2256248 | குருநாகல் | 037-2222369 |
| கொழும்பு மாவட்ட | 011-2867472 | யாழ்ப்பாணம் | 021-2222655 | புத்தளம் | 032-2265246 |
| கம்பஹா | 033-2222047 | கிளிநொச்சி | 021-2285664 | அநுராதபுரம் | 025-2222551 |
| களுத்துறை | 034-2222266 | மன்னார் | 023-2222289 | பொலன்னறுவை | 027-2222012 |
| கண்டி | 081-2233187 | வவுனியா | 024-2222311 | பதுளை | 055-2222424 |
| மாத்தளை | 066-2222422 | முல்லைத்தீவு | 024-3248356 | மொனராகலை | 055-2276315 |
| நுவரெலியா | 052-2222325 | மட்டக்களப்பு | 065-2224312 | இரத்தினபுரி | 045-2222023 |
| காலி | 091-2234028 | அம்பாறை | 063-2224342 | கேகாலை | 035-2222561 |
| மாத்தறை | 041-2222305 | திருகோணமலை | 026-2222304 | | |

(c/10389) (C/10389)



நெடியகாடு இளைஞர் விளையாட்டு கழகம்
வல்வெட்டித்துறை
1953-2013
வெளிக்கழகங்களுக்காக காத்திருக்கும் விளையாட்டுக்கள்
சைக்கிள் ஓட்டம் 21.07.2013 நீச்சல் 26.07.2013
படகு ஓட்டம் 26.07.2013 மரதன் 27.07.2013
கட்டு மரம் 26.07.2013 வினோதஉடைபோட்டி 27.07.2013

மணி விழா-2013
28.07.2013

28.07.2013 நாள் நிகழ்ச்சிகள்
கழக அஞ்சல், தலையணைச்சண்டை, கிறிஸ்கம்பம் ஏறுதல், கயிறு இழுத்தல்
60ம் ஆண்டை முன்னிட்டு 60 அடி உயர இராட்சத பலூன்கள் விண்ணில் ஏவப்படும்
இன்னிசை ராகங்கள் காத்திருக்கின்றது
மின் அமைப்பு;
பிரசித்தி பெற்ற வட இலங்கை புகழ் கணபதி மின்

அமைப்பாளர்கள்
தொடர்புக்கு; செயலாளர் :0774740667
பொருளாளர் :0785056071
(30992)

லண்டன் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு செல்வதற்கான விளக்கம்

- மேலே குறிப்பிட்டுள்ள நாடுகளுக்குச் செல்ல விரும்புவோர் நேரில் வரவும்
- போய்ச் சேர்ந்த பின்பு பணம் செலுத்தலாம்
- மேலதிக விவரங்களுக்கு நேரில் வரவும்
- நிபந்தனைகளுக்கு உட்பட்டது.


முன்பதிவுகளுக்கு மட்டும்: 077 256 8122

அனி இன்டர்நஷனல் எடியுகேஷன் கன்சல்டன்சி சர்விஸ்
இல. 72, இலுப்பயடிச் சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 492 1831, 021 492 1832

# மரண அறிவித்தல்கள்

## கணபதி வல்லிபுரம்

(நடராசா - பிரபல சோதிடர்)



கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி வல்லிபுரம் நேற்றுமுன்தினம் (17.07.2013) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும், தனபாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், சுதா (சுவிஸ்), உதய குமார் (சுவிஸ்), ரகு (கனடா), சகிலா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காஞ்சனா, நிரஞ்சலா, சுதர்சினி ஆகியோரின் பாசமிகு மாமனும், நவீனா, நிகாஷ், அஸ்வின், அனிஷ், கிறோசிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

183, திருமகள் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
சுதா (மகன்),
தொ.பே. 077 656 2672,
021 373 5177

(30990) (45.6.3)

## சுப்பிரமணியம் ஆறுமுகம்



நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் ஆறுமுகம் புதன் கிழமை (17.07.2013) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்- சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை- செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், செல்லப்பாக்கியம் அவர்களின் அன்புக் கணவரும், பார்த்தீபன், பகீரதன், பரதன், அருச்சுனராஜன் (வினோ), நிரஞ்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சோபனா, செந்திற்பிராட்டி, மகிழ்ந்தினி, அமுதா, பகிர்தா ஆகியோரின் அன்பு மாமனாரும், கிருஷன், பிரவீன், கீரன், நீதன், கரன், கிஷால், மிதுன், சஞ்சனா, அபினாஷ், அஸ்மிதா, அக்சனா, வர்ஷன், நினுஷன், பிரகதா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை (21.07.2013) மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மகாத்மா வீதி,
நெல்லியடி, கரவெட்டி.
T.P- 077 083 4085,
021 226 4104

தகவல்:
குடும்பத்தினர்.

(37653)(11.6.3)

## மத்தியஸ்த தின தேசிய வைபவம் இன்று கொழும்பில்

கொழும்பு, , ஜூலை 19

மத்தியஸ்த தினத்தைக் கொண்டாடும் தேசிய வைபவம் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீமின் தலைமையில் இன்று காலை 8.30 முதல் பிற்பகல் 2 மணிவரை இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெறும். இந்நிகழ்வில் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவின் செயலாளர் (பதில்) திருமதி வாசனா குணரத்ன, ஆணைக்குழுவின் தலைவர் ஹெக்டர் எஸ்.யாப்பா நீதியமைச்சின் செயலாளர் திருமதி கமலினி த சில்வா ஆகியோர் உரையாற்றுவர். (ஓ-35)

## ஜனன தின நினைவு நாள்

19.07.2013



செல்வன்
அல்ட்ரிக்
சௌஜன்யன்

மண் மகிழ
2006.07.19

கண் நெகிழ
2013.07.10

கிளிநொச்சி வட்டக்கச்சியைச் சேர்ந்த அகஸ்ரின் கிறிஸ்ரிரூபன் (இலங்கை வெளிநாட்டுச் சேவை). கணேசபுரத்தைச் சேர்ந்த நிமலினி (இலங்கை நிர்வாக சேவை) தம்பதிகளின் அன்பு மைந்தனும். வவுனியாவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் ஜோர்தானை தற்காலிக வசிப்பிடமாகவும். வவுனியா அட்வென்டிஸ் சர்வதேச பாடசாலை (AIS) யின் பழைய மாணவனுமான செல்வன் அல்ட்ரிக் சௌஜன்யன் 2013.07.10 அன்று ஜோர்தானில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் செல்வன் றொமோல்ட் சைதன்யன் ( AIS பழைய மாணவன்). செல்வன் பியோ சின்மயன் ஆகியோரின் அருமைச் சகோதரனும். க.தம்பியையா (இளைப்பாறிய தபாலதிபர்). த. மனோன்மணி (இளைப்பாறிய தாதிய உத்தியோகத்தர்). காலஞ்சென்றவர்களான பெ.அகஸ்ரின். அ. திரேசம்மா ஆகியோரின் அன்புப் பேரனும். சூசைநாதன் - மேரி எலிசபெத் (ஜெயராணி - வட்டக்கச்சி). குலேந்திரராஜா - குயின்மேரி (ராஜி). குமணன் - பத்மப்பிரியா. காலஞ்சென்ற ஜஸ்மின் சுதர்ஜினி (சுதா) ஆகியோரின் அன்பு மருமகனும். சஞ்ஜீவன் (பொறியியலாளர் - கட்டடத் திணைக்களம். வவுனியா) - எழிலினி (வைத்தியர் - தேசிய வைத்தியசாலை. கொழும்பு). ஞானரூபன் (ஜோர்ஜ்) - அஞ்சலா. காலஞ்சென்ற வசந்தரூபன் (லின்ரன்) ஆகியோரின் அன்புப் பெறாமகனும். றொசாந். லாவண்யா. துசான். திரேசிகன். தேஜஸ்வினி. ஐஸ்வரன். யாமளன் ஆகியோரின் அன்பு மச்சானும். அனந்தினி. மலரவன். ஓவியா ஆகியோரின் உடன்பிறவா அன்புச் சகோதரனும் ஆவார்.

இவரது நல்லடக்க நிகழ்வுகள் 2013.07.15 திங்கட்கிழமை அன்று இல.213. சிவசுந்தரம் வீதி. வட்டக்கச்சியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று. வட்டக்கச்சி புனித சூசையப்பர் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு. மாயவனூர் சேமக்காலையில் பிஞ்சுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அவரது பிறந்த தினமான இந்நாளில் நினைவுகூர்ந்து. அவரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
தொ. பேசி: +94 718455618

(C/10540)

# மரண அறிவித்தல்

## மாணிக்கவாசகர் ஜெயக்குமார்



முல்லைத்தீவு செம்மலையைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ், பரிஸை·வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கவாசகர் ஜெயக்குமார் 16-07-2013 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் மாணிக்கவாசகர்(செம்மலை- இலங்கை)- நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-நல்லம்மா(அரியாலை- யாழ்ப்பாணம்) தம்பதியரின் அன்பு மருமகனும்,ஜெயராணியின் அன்புக் கணவரும்,கஜன், ஜெயந்தன், விஜயன் ஆகியோரின் பாசமிகு தந்தையும்,வையந்திமாலா(இலங்கை), விஜயகுமார் (இலங்கை), இராசகுமார்(இலங்கை), அபிமன்னகுமார்(இலங்கை), உதயகுமார் (இலங்கை), ஜீவ்குமார்(லண்டன்), குசலகுமார்(லண்டன்), மோகனகுமார்(லண்டன்), இரதிக்குமார்(இலங்கை) ஆகியோரின் அருமைச் சகோதரனும், காலஞ்சென்ற பொன்னம்பலம் மற்றும் வசந்தராணி, அனந்தநாயகி, இந்திராணி, ராஜசௌந்தரி, ஜெயந்தி, நகுலா, மணிமாலா, நடோசினி, காலஞ்சென்ற கமலநாதன் மற்றும் பவளராணி, மோகனராணி, ஜெகநாதன்(பிரான்ஸ்), காலஞ்சென்ற லிங்கநாதன் (ஜெகநாதன்) மற்றும் வசந்தராணி ஆகியோரின் மைத்துனரும், மாலதி(பிரான்ஸ்), வசந்தி, சுமதி, அன்பழகன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமானாரும்,நவநீதன், நவரூபன், மதிவதனன், மதிவண்ணன், மதிமாறன் ஆகியோரின் அன்பு சித்தப்பாவும்,கஸ்தூரி, வித்தியா, துசியந்தன், தர்சன், சம்சியா, யதுர்சியா, விதுவந்தி, கஜானன், கீர்த்தனா, சேரலாதன், இஞ்கிதன், இனிதினி, அவனி, பிரான்ஞ்சிகா, பிரதிகா, தர்சிகா, சாத்வீகன், லுசிந்தன், அஜிந்தன், பவதாரணி, கிருத்திகன், துலக்சன் ஆகியோரின் அன்பு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 24.07.2013 புதன்கிழமை பரிஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொ.பே.: 077-321-1180
(விஜயகுமார் -செம்மலை)

தகவல்:
குடும்பத்தினர்.

(35298)(3.5.6)

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

**இதோ பாவியுங்கள்**

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணித் தைலம்**

போலிகள் நடமாடுவதால், பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியில் **'சித்தாரா டிஸ்பென்சரி' 'வைத்திய முத்திரைக் குறியீடு'** என்பன பொறிக்கப்பட்டுள்ளதா எனவும் பெட்டியில் **'ஒறிஜினல்'** என பொறிக்கப்பட்ட பளபளப்பான ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டுள்ளதா எனவும் பார்த்து வாங்குங்கள்.

*Manufactured By:*
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No.:-6382) AR/PR/No.228 (C/0526)(3.5.6)

*யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:*
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2567

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### உயர்திரு.வே.பாலசுப்பிரமணியம்



(B.A(Hons),Dip.in Edu,PGDEM, MEd.SLPS-I, SLEAS-III)

எமது பிரதேசப் பாடசாலைகளில் ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக, அதிபராக, பிரதேச கோட்டக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி, தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளராக (நிர்வாகம்) பதவி உயர்வு பெற்று கடமை ஏற்றுள்ள ஐயா அவர்களே. கல்விச் சேவைக்காக இவ்வுலகில் பிறந்த நீங்கள் மேலும் பல சேவைகள் செய்து நீண்ட காலம் வாழ வாழ்த்தும்.

*Best Wishes*

குகன் கல்வி நிறுவனம்
ஆவரங்கால். (30985)(5.6.3)

சபா குகதாசன் குடும்பம் (J.P.W.I)
இடைக்காடு, அச்சுவேலி.

## சேவை நலன் பாராட்டு

### உயர்திரு. கந்தையா சின்னத்துரை அவர்கள்

Sp.Trd.Tamil,B.A,Dip in Edu,M.A Tamil
உதவிக்கல்விப் பணிப்பாளர் (தமிழ்)–தென்மராட்சி



சிந்திக்க சிரிக்க நல்ல
சிந்தையில் தெளிவு கூர
புந்தியில் இனிக்க நல்ல
புதிர்களும் போட்டுத் தந்தே
அந்தரம் எதுவுமின்றி
அமைதியாய்ப் பணிபுரிந்தே
சந்ததம் உயர்வு காண
தமிழ்ப்பணி ஆற்றி நின்றோய்
வந்ததாம் அறுபதென்றே
மணிவிழாக் காணுகின்றாய்
வந்தனை கூறி வாழ்த்தி
வளம் பெறப் போற்றுவோமே

| | |
|---|---|
| யா/ வரணி வடக்கு சைவப்பிரகாச வித். | 08.06.1978 - 17.01.1982 |
| யா/கோப்பாய் ஆசிரியர் கலாசாலை | 18.01.1982 - 31.12.1983 |
| அ/மரக்கல ஹல் மில்லாவ முஸ்லிம்-வித். | 01.01.1984 - 30.06.1986 |
| அ/இக்கிரிக்கொல்லாவ முஸ்லிம் ம.வி. | 01.07.1986 - 14.05.1987 |
| கிளி/பரந்தன் இந்து ம.வி. | 15.05.1987 - 31.10.1988 |
| கிளி/வட்டக்கச்சி ம.வி. | 01.11.1988 - 30.02.1989 |
| கிளி/கிளிநொச்சி மத்தி ம.வி. | 01.03.1989 - 30.08.1989 |
| கிளி/பரந்தன் இந்து ம.வி. | 01.09.1989 - 14.08.1990 |
| யா/வரணி ம.வி. | 15.08.1990 - 17.01.1991 |
| யாழ்.பல்கலைக்கழகம் | 18.01.1991 - 20.11.1991 |
| யா/வரணி ம.வி. | 21.11.1991 - 31.10.1994 |
| யா/மீசாலை வீரசிங்கம் ம.வி. | 01.11.1995 - 08.08.1997 |
| யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி. | 09.08.1997 - 05.12.1999 |
| தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகம் I.S.A. | 06.12.1999 - 20.08.2008 |
| தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகம் A.D.E. | 21.08.2008 - 20.07.2013 |

வலயக்கல்வி அலுவலகம்,
சாவகச்சேரி. (ச/2719)(5.3.6)

நலன்புரி கழகம்.

## சங்கானை செங்கற்படை மகாதேவப் பிள்ளையார் தேவஸ்தானம் - 2013



## ஏழாம் திருவிழா
### வேட்டைத்திருவிழா

ஏழ் கடலும் அகட்டுள டக்கும் அகத்தியன் கரக மண்டலத்து
எழுந்திரை காவேரியை கட்டவிழ்த்த கணபதி கருணை
எழும் சுரம் ஏழால் இன்தே ஏத்தி இசைக்க நாற் றெழில்
எழுந்தான் வினை வேட்டையாடவே வேணவாவொடு

ஆக்கம்: சங்கை – சிவம்

சிறப்புற வாழ்த்துவோர்:
செம்பொற்சோதி குடும்பத்தினர்.
வல்லை வீதி, சங்கானை

## JAFFNA COLLEGE

JAFFNA COLLEGE
1872

*Prize Giving 2013*

will be held on
Friday the 19th July at 4.00 p.m
in the Quadrangle

Chief Guests:
AIYATHURAI GNANATHASAN LL.M.(UWI)
*President's Counsel*
*Retd. Additional Solicitor General,*
*Barrister & Solicitor (Tasmania)*
*Solicitor (N. S. W. Australia), Solicitor (England & Wales)*
&
Prof. CHRISTEINE ARIARANEE GNANATHASAN
*MBBS, M.Phil., M.D., F.R.C.P.,*
*Professor in Medicine, Dept. of Clinical Medicine,*
*Faculty of Medicine,*
*University of Colombo.*

*all are cordially invited.*

*Jaffna College*
*Vaddukoddai.*

*Principal*

(C/10531)(6.3)

## கூட்டம்

கோப்பாய், உடுவில், தெல்லிப்பழை பிரிவு உருளைக் கிழங்கு உற்பத்தி விற்பனையாளர் கூட்டுறவுச் சங்க விசேட பொதுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு திருநெல்வேலி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெறும். இந்தக் கூட்டத்தில் யாழ். மாவட்ட அரச அதிபர் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள, கமநல அபிவிருத்தி திணைக்கள, விவசாயத் திணைக்கள உயர் அதிகாரிகள் பங்குபற்றுவார்கள் எனவும் இந்த விசேட கூட்டத்துக்கு யாழ். மாவட்ட அனைத்து உருளைக் கிழங்குச் செய்கையாளர்களையும் தவறாது சமுகமளித்து பயனடையுமாறும் இந்தக் கூட்ட ஏற்பாட்டாளர் இ. தெய்வேந்திரம் தெரிவித்துள்ளார். (வ)

## நிறுத்திய வாகனத்தில் மோதியது மோ.சைக்கிள்; மந்துவில் வாசி காயம்

தென்மராட்சி, ஜூலை 19

ஏ-9 வீதியில் வேகமாகச் சென்ற மோட்டார் சைக்கிள், பயணிகளை ஏற்றிக் கொண்டு முன்னால் சென்ற வாகனம் வீதியோரத்தில் நிறுத்தப்பட்ட சமயம் அதனுடன் மோதியதில் மோட்டார் சயிக்கிளில் சென்றவர் தூக்கி வீசப்பட்டு காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று மீசாலையில் இடம் பெற்றது.

காயமடைந்த நபரை அப்பகுதியில் நின்ற வாகனச் சாரதியொருவர் ஏற்றிவந்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்த்தார். மந்துவில் கிழக்கைச் சேர்ந்த தங்கராசா விஜயேந்திரன் (வயது-34) என்பவரே காயமடைந்தவராவார்.

இதேவேளை. வாகனம் செலுத்துவதில் ஏற்பட்ட போட்டியினால் டிப்பர் சாரதியொருவர் மற்றொரு டிப்பர் சாரதியைத் தாக்கிக் காயப்படுத்தியுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு நாவற்குழியில் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த நல்லையா சுகந்தன் (வயது-32) என்பவர் தாக்குதலுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-9)

## COMPUTERS FOR SALE

Intel Processor-3.2GHz, Intel Mother Board, 80GB Sata HDD, 1GB DDR-II Ram, ATX Tower Casing, DVD Rom, 15" Dell LCD Monitor, 7.2 Multy Dongle, Keyboard, Mouse, Speaker... Rs : 18,650/= (1Year Warranty)

Keyboard-550, Mouse-250, H.Phone-250, 7.2M.Dongle-2950, Webcam-675, Table-2900, Casing-2650, UPS-4450, Pendrive : 4GB-850, 8GB-1100, 16GB-1750, 32GB-3600..

சகலவிதமான கணனி உதிரிப்பாகங்களையும் குறைந்த விலையில் கூடிய உத்தரவாதத்துடன் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

North Lead Computer & Accessories-Wholesaler, # 328, Stanly Road, Jaffna
Tel: 222 4459, 0772533390, Fax: 222 4460

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

DOCTOR USED, PULSAR
- WP-XV (SEP-2012)
RED COLOUR, ONLY 2000 KM DONE
LIKE BRAND NEW

உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 393 6410
(30994)(3.6.45)

## தவறிவிட்டது

தவேந்திரன் கேசவன் என்பவருடைய தே.அ. அட்டை (942881533V) 12.07.2013 வெள்ளிக்கிழமை கொக்குவில் சந்தியிலிருந்து மல்லாகம் சந்தியூடாக ஏழாலை மகாவித்தியாலயம் வரையுள்ள இடத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: (30991)(3.6.8)
077 249 0842, 021 205 9093

## வேலையாள்கள் தேவை

பேக்கறியில் பிஸ்கட் பொதி செய்வதற்கு பெண் வேலையாள்கள் தேவை.

தொடர்பு: 077 253 6162
(30986)(3.6.11)

## தவறிவிட்டது

தாவடி வடக்கு, கொக்குவிலைச் சேர்ந்த கிருஷ்ணன் சுரேஸ்குமார் என்பவரது தேசிய அடையாள அட்டை (833414593v) கடந்த (16.06.2013) அன்று யாழ்நகரிற்கும் தாவடிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

T.P: 077 413 6298
(30987)(3.6.11)

## காணி விற்பனைக்கு

யாழ். பிரதான வீதிக்கு அருகில் 4 ஆம் குறுக்குத் தெருவில் 1½ பரப்பு வீடு வளவு விற்பனைக்குண்டு.

T.P: 077 116 3556
(30927)(3.6.45)

## TV கள் மலிவு விலையில்

யாழ் நகரில் எங்குமில்லாத மலிவு விலையில் உத்தரவாதத்துடன் SONY Wega TV கள் 21"- 11000/= முதல், 29"- 16000/= Panasonic 29" -15000/= DTS amp, Box, DVD என்பன.

தொடர்பு: 077 044 0570
சோனி ரேடிட் சென்ரர் (கொமர்சல் வங்கி எதிரில்)
56, K.K.S வீதி, சுன்னாகம்.
(30983)(45.6.3)

## வீடும் காணியும் விற்பனைக்கு

உரும்பிராய் வடக்கு, உரும்பிராய் கற்பகப் பிள்ளையார் கோயில் வீதியில் 7 பரப்புக் காணியும், வீடு வளவும் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: (30953)(3.6.11)
021 492 2308, 077 217 8812

## சிங்கப்பூர் வேலை அனுமதியை பெற்றுக்கொள்வதற்குரிய விளக்கம்

(Employment Pass)

* இரண்டு வருட வேலை
* மாதாந்த சம்பளம் 1250 சிங்கப்பூர் டொலர்
* மாபிள் தொழிற்சாலை.
* மேலதிக விவரங்களுக்கு நேரில் வரவும்
* நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

107 x 1250 = 133,750/=

முன்பதிவுகளுக்கு மட்டும் 0772 568122

அனி இன்டர்நஷனல் எடியுகேஷன் கன்சல்டன்சி சர்விஸ்
இல.72, இலுப்பையடிச் சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 0214 921831, 0214 921832 (ச/10447)

# 1000 பஸ்கள் இறக்குமதிக்கு அனுமதி மறுப்பு



கொழும்பு, ஜூலை 19
இலங்கையில் இடம்பெறும் பொதுநலவாய அமைப்பு நாடுகள் மாநாட்டைக் குறி வைத்து சீனாவிடமிருந்து 1000 பஸ்களைத் தருவிப்பது தொடர்பாக முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கமவால் சம்பந்தப்பட்ட அமைச்சரவைப் பத்திரம் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டது. ஆரம்பத்திலேயே அதற்கு அமைச்சரவையில் எதிர்ப்புக் கிளம்பியிருந்ததன் காரணமாக அந்த எதிர்ப்புகளுக்கு உரிய காரணங்களை முன் வைக்குமாறு ஜனாதிபதி அமைச்சரவையை கேட்டிருந்தார்.

அதற்கமைய அது பற்றிய பரிசீலனைகளை முன்வைத்து அமைச்சர்கள் விளக்கங்களை வழங்கியுள்ளனர்.

> பஸ்களின் தராதரங்கள் குறித்து எவரும் அறிந்திருக்கவில்லை.

அந்த பஸ்களின் தராதரங்கள் மற்றும் பொறிமுறை நிலைப்பாடு சம்பந்தமாகவும், இந்த நாட்டிலுள்ள வீதிகளுக்குத் தாக்குப் பிடிக்கக் கூடியவையா என்பது பற்றியும் எவரும் அறிந்திருக்கவில்லை.

அதற்கமைய ஆலோசகர்கள் சபையொன்றில் அந்தக் காரணிகள் முன்வைக்கப்பட்டு அறிக்கையொன்று பெறப்பட்டதன் பின்னர் இது பற்றித் தீர்மானிக்கப்படும் என்று அமைச்சர்கள் விளக்கங்களை வழங்கியிருந்தனர். (ச-22)


## பாடசாலை சிறார்களுக்கு விற்றமின் வில்லைகள்



கொழும்பு,ஜூலை 19
பாடசாலைச் சிறார்களின் அறிவு விருத்திக்காக சத் துள்ள விற்றமின் வில்லைகளை இலவசமாக வழங்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இரும்புச் சத்து மற்றும் விற்றமின்கள் நிறைந்த வில்லைகளையே இவ்வாறு பாடசாலை சிறார்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த வில்லைகளை மாணவர்கள் தொடர்ச்சியாக 6 மாத காலத்துக்கு உட்கொண்டால் குறித்த மாணவர்களின் ஞாபகசக்தி, பாடங்களில் கரிசனை மற்றும் சுறுசுறுப்பு என்பன அதிகரிக்கும் என்று அமைச்சு நம்பிக்கை தெரிவித்துள்ளது. (ச)



பெரிய நீலாவணையில் அமைந்துள்ள சுனாமி வீட்டுத் திட்டத்தின் மலசல கூட கழிவுக் குழிகள் சீராக இல்லாததால் சுற்றுப்புறத்தில் மலசல கூட கழிவு நீர் தேங்கி நின்று நுளம்புப் பெருக்கம் ஏற்பட்டுகிறது என்று வீட்டுத் திட்டவாசிகள் கல்முனை மாநகர முதல்வர் சிராஸ் மீராசாஹிப்பின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர். அதனையடுத்து முதல்வர் வீட்டுத்திட்ட மக்களுடன் நேரடியாகச் சென்று உரையாடுகிறார்.

## அன்னாசி, தாழைச்செடிகளில் டெங்கு நுளம்புப் பெருக்கம்

### சுகாதார அமைச்சின் ஆய்வில் அதிர்ச்சித் தகவல்



கொழும்பு,ஜூலை 19
அன்னாசி, தாழை, கரணை கிழங்கு செடிகளில் டெங்கு நுளம்பு பெருக்கம் காணப்படுகிறது.

இந்த விடயம் இலங்கையின் மேல் மற்றும் மத்திய மாகாணங்களில் நுளம்புகள் பெருகக் கூடிய செடிகள் மற்றும் தாவரங்கள் தொடர்பாக நடத்தப்பட்ட ஆய்வின் அறிக்கை மூலம் தெரியவந்துள்ளது.

சுகாதார அமைச்சும், ஏனைய அமைச்சுக்களும் நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றன.

எனினும் நுளம்புப் பெருக்கம் தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றது.

இது தொடர்பாக ஆய்வு நடத்துமாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன மருத்துவ ஆராய்ச்சி நிலையத்துக்கு அறிவுறுத்தல் வழங்கினார். அந்த அறிவுறுத்தலின் அடிப்படையில் நடத்தப்பட்ட ஆய்வின் அறிக்கையே இப்போது வெளியாகியுள்ளது.

இந்த ஆய்வு குளங்கள், சிறு சிறு குழிகள், சேற்று நிலம், நீரோட்டமில்லாத வடிகால்கள் என்பவற்றிலும், மனித செயல்பாடுகளாலும், இயற்கையாகவும் உருவான சிறு அளவில் நீர் தேங்கும் இடங்களிலும் மேற்கொள்ளப்பட்டன.

நீர் தேங்கி நிற்கும் இடங்களில் வளரும் செடிகள் நுளம்புகள் பெருகப் பெரிதும் துணைபுரியும் இடங்களாக ஆய்வில் கண்டறியப் பட்டுள்ளது என்று மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தின் பணிப்பாளர் அனில் சமரநாயக்க கூறினார். (ச)

# வடக்கு மாகாணசபை தேர்தல்; அரச அதிபர்களுடன் ஆராய்வு

### முறையான பணிகளில் ஈடுபட அறிவுறுத்தல்



கொழும்பு,ஜூலை 19
வடமாகாணசபைத் தேர்தலை தேர்தல் சட்டங்களுக்கு உட்பட்ட வகையில் நடத்துவது தொடர்பில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்ட அரச அதிபர்களுக்குத் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய விளக்கமளித்துள்ளார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள வட, வடமேல் மற்றும் மத்திய மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் குறித்து, மேற்படி மூன்று மாகாண சபைகளிலுமுள்ள மாவட்ட அரச அதிபர்களுக்கு விளக்கமளிக்கும் விசேட கூட்டம் இராஜகிரியவிலுள்ள தேர்தல்கள் செயலகத்தில் நடைபெற்றது.

தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் வடக்கின் ஐந்து அரச அதிபர்கள் உட்பட 10 அரச அதிபர்கள் கலந்து கொண்டனர்.

நீதியான நியாயமான தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகள், வேட்புமனுத் தாக்கல் நேரக்கட்டுப்பாடுகள், தேர்தல் கண்காணிப்பு, தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்குள்ள பொறுப்புகள் உள்ளிட்ட விடயங்கள் பற்றியும் தேர்தல்கள் ஆணையாளர், மாவட்ட அரச அதிபர்களுக்கு விரிவாக விளக்கமளித்தார்.

முதல் தடவையாக வட மாகாண சபைக்குத் தேர்தல் நடத்தப்படவுள்ள நிலையில், ஐந்து நிர்வாக மாவட்டங்கள் என்ற அடிப்படையிலேயே இந்தத் தேர்தல் நடத்தப்படவுள்ளது.

இதற்கு அமைய வட மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஐந்து மாவட்டங்களின் அரச அதிபர்களும் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகளாகச் செயற்படவுள்ளனர். இது தொடர்பான சட்டங்கள் குறித்து தேர்தல்கள் ஆணையாளர் அவர்களுக்கு விளக்கமளித்துள்ளார்.

> ஐந்து நிர்வாக மாவட்டங்களும் தனித் தனியான தேர்தல் மாவட்டங்களாக கொண்டே நடத்தப் படவுள்ளன.

இதுவரைகாலமும் நடைபெற்ற பொதுத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் வடக்கில் யாழ்ப்பாணம் மற்றும் வன்னி ஆகிய இரண்டு தேர்தல் மாவட்டங்கள் என்ற அடிப்படையிலேயே நடத்தப்பட்டன.

யாழ். தேர்தல் மாவட்டத்தில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களும், வன்னித் தேர்தல் மாவட்டத்தில் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன. எனினும், வட மாகாணசபை தனியானதொரு மாகாண சபையாகப் பிரிக்கப்பட்ட பின்னர் இம்முறை முதல் தடவையாக நடைபெறவுள்ள தேர்தல் ஐந்து நிர்வாக மாவட்டங்களும் தனித்தனியான தேர்தல் மாவட்டங்களாகக் கொண்டே நடத்தப்படவுள்ளன. (ச)

## புத்தகயா மீது தாக்குதல்; முக்கிய துப்புக் கிடைப்பு



கொழும்பு,ஜூலை 19
புத்தகயா குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பில் முக்கிய துப்பு கிடைத்துள்ளதாக இந்திய உள்துறை அமைச்சர் சுஷில் குமார் ஷிண்டே புதன்கிழமை தெரிவித்தார்.

ராஜஸ்தான் மாநிலம், அல்வார் மாவட்டம், பகதுர்பூர் பட்டி-கட்லாவில் மத்திய ரிசர்வ் பொலிஸ் படையின் 'மகிளா' (பெண்கள்) பட்டாலின் பிரிவு தொடங்குவதற்கான அடிக்கல் நடும் விழா புதன்கிழமை நடைபெற்றது.

இதில் பங்கேற்ற ஷிண்டே செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

புத்தகயாவில் உள்ள மஹாபோதி வளாகத்தில் நிகழ்ந்த தொடர் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக தேசிய புலனாய்வு அமைப்பின் விசாரணை சரியான மற்றும் நேரான திசையில் நடைபெற்று வருகிறது.

இந்த விசாரணையில் சில முக்கியமான தடயங்கள் கிடைத்துள்ளன. விசாரணையைப் பாதிக்கும் என்பதால் இதுபற்றி தற்போது எதையும் வெளியிட முடியாது - என்றார். (ச)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

# போதைப் பாக்குடன் மாணவர்கள் மாட்டினர் பாடசாலை அதிபரிடம்

எச்சரிக்கப்பட்டுள்ளனர்.
யாழ். மாவட்டத்தில், உயர்தர வகுப்பு மாணவர்கள் கற்கும் தனியார் கல்வி நிலையங்களை இலக்கு வைத்து இந்தப் போதை யூட்டிய பாக்குகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. அத்துடன் பாடசாலை மாணவர்களுக்கும் இவை விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.
யாழ். புறநகர்ப் பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றின், தரம் - 9 இல் கல்வி கற்கும் மாணவர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை நேரத்தின் போது போதையூட்டிய பாக்கைப் பயன்படுத்தியுள்ளார். இதனை அவருடன் பயிலும் சக மாணவர்களும் பயன்படுத்தியுள்ளனர்.
இதன் பின்னர் பாடசாலை மாணவர்களின் நடத்தையில் ஏற்பட்ட மாற்றத்தை அவதானித்த பாடசாலை அதிபர், குறித்த 10 மாணவர்களையும் அழைத்து கடுமையாக எச்சரித்ததுடன், அவர்களின் பெற்றோர்களையும் அழைத்து விடயத்தை தெரியப்படுத்தி அனுப்பி வைத்துள்ளார்.
யாழ். நகரில் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.
(த-5)

# திருமலை மாணவர் கொலை: படையினரின் மறியல் நீடிப்பு

றில் நேற்று வியாழக்கிழமை முன்னிலைப் படுத்தப்பட்டபோதே நீதிவான் ஏ.எல். அஸ்ஹர் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார்.

குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் கடந்த 4 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது அவர்களை நேற்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

உதவி பொலிஸ் அதிகாரி உட்பட 11 பொலிஸ் விசேட அதிரடிப்படையினருமே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (த)

# வேட்பாளர் தெரிவில் நேற்றும் முடிவில்லை

டல் இடம்பெற்று வருகின்றது.
நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடல்களின் அடிப்படையில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி தவிர்ந்த ஏனைய மூன்று மாவட்டங்களினதும் ஆசனப் பங்கீடுகள் ஓரளவு முடிவு நிலையை எட்டியிருந்தன.
நேற்று மாலை இடம்பெற்ற கலந்துரையாடலில் ஆசனப் பங்கீடு தொடர்பில் முடிவு எட்ட்ப்படாமல் இழுபறி நிலையே நீடித்தது.
யாழ்.மாவட்டத்துக்கான ஆசனப் பங்கீடு தொடர்பிலேயே அதிகளவான சிக்கல் நிலைமை நீடிப்பதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.
இன்று பெரும்பாலும் ஆசனப் பங்கீடு தொடர்பில் இறுதி முடிவு நிலைமை எட்டப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

# சனல் - 4 கெலும் மக்ரே இலங்கை வர அனுமதி

சகல வெளிநாட்டுச் செய்தியாளர்களுக்கும் அனுமதியை வழங்க வேண்டும் என்று தெரிவித்திருந்தார்.
இதனையடுத்து இந்த விவகாரம் சர்வதேச அளவில் இலங்கைக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. இதனால் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக இங்கு வந்து செய்திகளைச் சேகரிக்கலாம் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.
" வெளிநாட்டுச் செய்தியாளர்கள் எந்த விதமான தடைகளோ, இடைஞ்சலோ இன்றி இங்கு வந்து செய்திகளை சேகரிக்கலாம். பி.பி.சி யின் பிரான்சிஸ் ஹரிசன் சனல்- 4 இன் கெலும் மக்ரே போன்றவர்கள் சுதந்திரமாக வந்து செய்திகளைச் சேகரிக்கலாம்.
நாம் மறைப்பதற்கு ஒன்றும் இல்லை. சனல்-4 குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை. அவர்கள் வெளிநாடுகளிலிருந்தே உண்மைகளை எழுதவில்லை. இங்கு வந்தாலும் கூட உண்மைகளை எழுத மாட்டார்கள். எது சரியானதோ அதை நாம் செய்கின்றோம். பொய்க் குற்றச்சாட்டுக்களுக்கோ நியாயமற்ற விமர்சனங்களுக்கோ நாம் பயப்படவில்லை" என்று கோத்தபாய தெரிவித்துள்ளார். (த-5)

# இலங்கை விவகாரத்தில் பிரிட்டன் இரட்டை வேடம்

கான 3 ஆயிரம் ஏற்றுமதி அனுமதிப் பத்திரங்களைப் பிரிட்டன் வழங்கியுள்ளது.
அதில் இலங்கைக்கு 8 மில்லியன் பவுண்ட்ஸ் பெறுமதியான ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ளன. இராணுவ மற்றும் புலனாய்வுக் கருவிகளுக்காக 49 ஏற்றுமதி பத்திரங்களை பிரிட்டன் இலங்கைக்கு வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
உள்நாட்டில் அடக்கு முறைக்குப் பயன்படுத்தக்கூடிய மற்றும் உள்நாட்டு மோதல்களை தூண்டக்கூடிய பொருள்களுக்கு ஏற்றுமதி அனுமதிப்பத்திரம் வழங்கப் போவதில்லை என்று கூறியிருந்த பிரிட்டன் அரசின் இந்தச் செயற்பாடு மனித உரிமைகள் அமைப்புக்களிடையே விசனத்தை தோற்றுவித்துள்ளது.
இது பிரிட்டன் அரசின் மனித உரிமைகள் தொடர்பான இரட்டை வேடத்தை அம்பலப்படுத்தியுள்ளதாக இந்த அமைப்புக்கள் குற்றஞ் சாட்டியுள்ளன. (த-5)

## மரண அறிவித்தல்

### முருகர் வைத்திலிங்கம்

(ஊழியர் - அருங்காட்சியகம்)



மாதகலைப் பிறப்பிடமாகவும், 466/2, கோயில் வீதி, முதலாம் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முருகர் வைத்திலிங்கம் (18.07.2013) வியாழக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகர் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராசம் மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற செல்வநாயகம் மற்றும் இராசையா (அமெரிக்கா), காலஞ்சென்ற கணேசலிங்கம் மற்றும் சுந்தரலிங்கம் (கனடா), அருள்லிங்கம் (பிரான்ஸ்), ஈஸ்வரலிங்கம் (ஜேர்மனி), நவமலர் (நியூசிலாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

466/2, கோயில் வீதி,
முதலாம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(2.6)(31000)

தகவல்:
ஈஸ்வரலிங்கம் (மகன்)

## விற்பனைக்கு

அச்சகம் ஒன்றிற்குத் தேவையான மெசின் உட் பட அனைத்து பொருட்களும் உடன் விற்பனை க்கு


T.P:- 0772727227

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்

### இராசையா உதயமனோகரன்

(மனோ)



கோட்டைக்காடு மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், சுவிஸ் Bern ஐ வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா உதயமனோகரன் நேற்று முன்தினம் 17-07-2013 புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா-பரமேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற இளையவி-பார்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், சாந்தகுமாரியின் (சாந்தி) அன்புக் கணவரும், நிஜாந்தி (நிஷா), அருள்குமரன் (அருள்), செந்தில்குமரன் (செந்தில்) ஆகியோரின் அன்புத் தந்தையும், லோகேஸ்வரி, சாரதா, திருஞானவதி (ரதி), புஸ்பலதா, விஜயகுமார், சுஜாதா, சசிகுமார், கவிதா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிறீதரன், சாலினி, தாரகா ஆகியோரின் அன்பு மாமனாரும், குணலிங்கம், செல்வராசா, பாஸ்கரன், சாந்தலிங்கம், கார்த்திகா, முருகமூர்த்தி, இராஜேஸ்வரி(நதி), சதீசன், புனிதவதி, ஞானரத்தினம், திரவியபுஸ்பம், திருமுருகன், சந்திரமூர்த்தி, சசிரேகா ஆகியோரின் அன்பு மைத்துனரும், டட்ஷாயினியின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (22.07.2013) திங்கட்கிழமை சுவிஸ்சில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Unterey Feldweg3,
3063 Ittigen.

(31005)
(10.14)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### அந்தோனிப்பிள்ளை மேரி யோசேப்



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் இமையாணன் உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற கரவெட்டி பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தரும் வல்வெட்டித்துறை நகரசபை செயலாளருமாகிய அந்தோனிப்பிள்ளை மேரி யோசேப் நேற்று (18.07.2013) வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை - லூயிஸ் மேரி தம்பதியரின் அருமை மகனும் காலஞ்சென்ற அருள் திரு.E.D இராசரத்தினம் - நேசமணி தம்பதியரின் அன்பு மருமகனும் லிடியா நேசரட்ணதேவியின் (தங்கா- ஓய்வுபெற்ற அதிபர், யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி) அன்புக் கணவரும் காலஞ்சென்ற பற்றிக் இமானுவேல், காலஞ்சென்ற லொறட் ஞானரட்ணம் மற்றும் அல்பிறட் வில்லியம், ஜெயசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஜீவநேசராசதேவி, காலஞ்சென்ற அமிர்தரட்ணதேவி (சின்னா), ரட்ணபாக்கிய தேவி (சுட்டி), முத்துரட்ணானந்தன் (ஓய்வுபெற்ற D.G.M.C.E.B.), இராஜேஸ், யூலியட் (மணி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் மில்கா, கொட்வின், றொசான், அனிற்றா ஆகியோரின் சிறிய தந்தையும் நிரேஷின் அன்பு மாமாவும் விதுஷன், அச்சுதன், ஆதி, ஷெகேன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (20.07.2013) சனிக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உடுப்பிட்டி, தென்னிந்திய திருச்சபை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இமையாணன், உடுப்பிட்டி.
021 226 3783

(சி/10552)

தகவல்:
குடும்பத்தினர்.

### அரியாலை ஐக்கிய வி.க. உதைபந்தாட்டத் தொடர்

# இறுதியாட்டம் இன்று

## பாடும்மீன், சென். மேரிஸ் களத்தில்


குருநகர்- பாடும்மீன்


நாவாந்துறை சென்.மேரிஸ்

யாழ்ப்பாணம், ஜூலை 19 யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம், அரியாலை சன சமூக நிலையத்தின் 64 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் பரபரப்பான இறுதியாட்டம் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெறவுள்ள இறுதியாட்டத்தில் நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி மோதுகின்றது.

இன்றைய நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக சிறிமுருகன் நகை மாளிகை உரிமையாளர் த.மணிவண்ணன் கலந்து கொள்ளவுள்ளார். (ற-23-34)

# போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 19 மட்டுவில் வளர்மதி சன சமூக நிலையத்தின் 48 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்ட சுற்றுத் தொடரில் நேற்று முன்தினம் புதன் கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் :

மட்டுவில்மோகனதாஸ்விளையாட்டுக் கழகத்துக்கும் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே இடம்பெற்ற ஆட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றது.

மட்டுவில் விநாயகர் விளையாட்டுக் கழகத்துக்கும் ஆவரங்கால் பாரதி விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே இடம்பெற்ற ஆட்டத்தில் விநாயகர் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றது.

கைதடி வளர்மதி விளையாட்டுக் கழகத்துக்கும் ஜொலி பைற்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே இடம்பெற்ற ஆட்டத்தில் ஜொலி பைற்ஸ் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற செற்கணக்கில் பெற்றி பெற்றது. (ற-23)



# வென்றது யூனியன்ஸ் வி.க.

யாழ்ப்பாணம், ஜூலை 19 மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம் நடத்தும் பாலகிருஷ்ணன் வெற்றிக் கிண்ண ''20/20'' கிரிக்கெட் சுற்றுத் தொடரில் கடந்த வாரம் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் யூனியன்ஸ் விளையாட்டுக்கழக அணி 10 இலக்குகளால் வெற்றி பெற்றது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் யூனியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஸ்ரான்லி விளையாட்டுக் கழக அணி மோதியது.

அதில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி விளையாட்டுக் கழக அணி 15 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 73 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

அதில் கனன்ராஜ் 13 ஓட்டங்களையும், செல்வராசா 17 ஓட்டங்களையும், றஜனிகாந் ஆட்டம் இழக்காமல் 17 ஓட்டங்களையும ஸ்ரான்லி விளையாட்டுக் கழகம் சார்பில் பெற்றனர்.

பந்துவீச்சில் யூனியன்ஸ் விளையாட்டுக்கழக அணி சார்பில் அருண் 3 இலக்குகளையும் தயாளன், சுஜந்தன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

74 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யூனியன்ஸ் விளையாட்டுக்கழக அணி 4.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் எந்தவித இலக்கு இழப்பும் இன்றி 78 ஓட்டங்களைப் பெற்றது.

யதீஸ்கண்ணா, ஜான்சன் ஆகியோர் முறையே 31, 24 ஓட்டங்களை ஆட்டம் இழக்காது தமது அணி சார்பாக பெற்றனர். (ற-23)

## கரப்பந்து சுற்றுப்போட்டி நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 19 யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்திவரும் மஞ்சி வெற்றிக் கிண்ண கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் கோப்பாய் பிரிவு அணிகளுக்கு இடையேயான கரப்பந்தாட்டப் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-23)

# விபுலானந்தாவை வீழ்த்தியது வவுனியா தமிழ் மத்திய ம.வி.

யாழ்ப்பாணம், ஜூலை 19 அகில இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் 15 வயதுப் பிரிவு பாடசாலை அணிகளுக்கிடையே நடத்தும் பிரிவு III கிரிக்கெட் சுற்றுத் தொடரில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய அணி வெற்றி பெற்றது.

கடந்த திங்கட்கிழமை வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அணியை எதிர்த்து வவுனியா விபுலாணந்தா கல்லூரிஅணிமோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய வவுனியா விபுலானந்தக் கல்லூரி அணி 23.2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 81 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

அதில் தனிஸ் 13 ஓட்டங்களையும், நிதர்சன் 11 ஓட்டங்களையும் விபுலானந்தா அணி சார்பாக பெற்றனர்.

பந்து வீச்சில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அணி சார்பாக அபூர்வன் 3 இலக்குகளையும் சிறியன், சுகிர்தன், பிரியந்தன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

82 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனபதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அணி 8.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் ஓர் இலக்கை மட்டும் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

அதில் பிரியந்தன் 33 ஓட்டங்களையும், றுக்ஷன் 22 ஓட்டங்களையும் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் விபுலானந்தா கல்லூரி அணி சார்பில் தனிஸ் ஓர் இலக்கை வீழ்த்தினார். (ற-23-422)

## உதைபந்தாட்ட சுற்றுத் தொடர் நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 19 மன்னார் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் பனங்கட்டுக்கொட்டு சென்.ஜோசப் விளையாட்டுக் கழகம் அமரர் மரியாம்பிள்ளை முத்தம்மா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான அகில இலங்கை ரீதியாக நடத்தும் 40 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

ஆரம்ப நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை கலந்து கொள்ளவுள்ளார். (ற-23)




வட மாகாணப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற 15 வயதுக்குக் கீழ்ப்பட்ட பெண்களுக்கான குழு சதுரங்கப் போட்டியில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணி முதலாம் இடத்தைப் பெற்று சம்பியனானது. யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற இப்போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற இந்த அணி எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள தேசியப் போட்டியில் பங்குபற்ற தகுதி பெற்றுள்ளது. உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணியினர் கல்லூரி அதிபர், உபஅதிபர், பொறுப்பாசிரியர்கள், பயிலுநர்களுடன் படத்தில் காணப்படுகின்றார்கள். (ற-8)

## மெய்வன்மை போட்டிகள் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 19 அரியாலை சனசமூக நிலையத்தின் 64 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெறும் இல்ல மெய்வன்மைப்போட்டிகள் நாளை சனிக்கிழமை பி.ப.1.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

எஸ்.ரி.பத்மநாதன் தலைமையில் அரியாலை சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி அலகின் போதனாசிரியர் செல்வி சுரேந்தினி சிதம்பரநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (ற-23)



# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 19 நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் பங்கு கொள்ளும் அணிகளின் விவரம்:

பி.ப. 4 மணி


மானிப்பாய் ரெட்றேஞ்சஸ் விளையாட்டுக் கழகம் எதிர் அராலி பி.எல் விளையாட்டுக் கழகம். (ற-23)

★★★

பருத்தித்துறை, ஜூலை 19 பருத்தித்துறை குரும்பைகட்டி உதயசூரிய விளையாட்டுக் கழகம் நடத்தும் 10 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட மென்பந்தாட்ட கிரிக்கெட் சுற்றுத் தொடரில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங் களில் மோதவுள்ள அணிகள்:

பி.ப. 3.30 மணி

கரணவாய் அண்ணா சிலையடி விளையாட்டுக் கழகம் எதிர் பருத்தித்துறை தமிழ் யூனியன் விளையாட்டுக் கழகம். (ற-34)



இங்கிலாந்து - ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆஷஸ் தொடரின் இரண்டாவது போட்டி லோர்ட்ஸ் மைதானத்தில் நேற்று ஆரம்பமானது. இந்தப் போட்டியைக் காண எவரும் எதிர்பாராத வகையில் பிரிட்டிஷ் மாகாராணி எலிசபெத் மைதானத்துக்கு வந்திருந்தார். போட்டி ஆரம்பிக்கும் முன்னர் இருதரப்பு வீரர்களுக்கும் அவர் வாழ்த்துத் தெரிவித்தார்.

# சச்சினை விடவும் லாராவே சிறந்தவர்

> சதத்தில் சதம் கண்டிருந்தாலும் அவரை விட , பிரைன் லாரா அதிக மான போட்டிகளை தனது அணிக்காக வென்று கொடுத்துள்ளார்.

இந்திய அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கரை விடவும் , மேற்கிந்தியத் தீவுகள் அணியின் துடுப்பாட்ட வீரர் பிரைன் லாராவே சிறந்தவர் என்று ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் றிக்கி பொன்டிங் தெரிவித்துள்ளார்.

பிரைன் லாரா, சச்சின் இவர்களில் யார் சிறந்த துடுப்பாட்ட வீரர் என்று கேட்கப்பட்ட போதே றிக்கி பொன்டிங் இவ்வாறு தெரிவித்தார். இதன் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சச்சின் டெண்டுல்கர் சாதனைகள் பல புரிந்தாலும், சதத்தில் சதம் கண்டிருந்தாலும் அவரை விட , பிரைன் லாரா அதிக மான போட்டிகளை தனது அணிக்காக வென்று கொடுத்துள்ளார். அத்தோடு, அணித்தலைவராக சச்சின் டெண்டுல்கரை விட பிரைன் லாராவே என்னை அதிகளவு யோசிக்க வைத்தவர்.

சச்சின் டெண்டுல்கரின் துடுப்பாட்ட வேகத்தைக் கட்டுப்படுத்துவதற்கு என்னால் வழிகளைக் கண்டுபிடிக்க முடிந்திருந்தது. ஆனால் பிரைன் லாராவைக் கட்டுப்படுத்த முடியாமலிருந்தது. எப்படித்தான் வியூகங்களை மாற்றியமைத்தாலும் அதையும் தாண்டி ஓட்டங்களைக் குவிப்பதில் லாரா வல்லவர்.

இதேவேளை தற்போது இங்கிலாந்தில் நடைபெற்று வரும் ஆஷஸ் தொடரில் ஆஸ்திரேலிய அணி 2-1 என்ற கணக்கில் கிண்ணத்தை வெல்லும் என்று நான் முன்னர் கூறியிருந்தேன். அதே கருத்தையே இப்போதும் கொண்டுள்ளேன் -என்றார். (ங)



# மத்தியூஸிற்கு நேற்று டும்......டும்.....டும்....!



இலங்கை கிரிக்கெட் அணித் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் நேற்றுத் திருமண பந்தத்தில் இணைந்தார்.

இவரது திருமண வைபவம் கொள்ளுப்பிட்டியில் உள்ள சென்.மேரிஸ் தேவாலயத்தில் கொழும்பு கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகையினால் நடத்தி வைக்கப்பட்டது.

இந்தத் திருமண வைபவத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் அரசியல் பிரமுகர்கள் உட்பட மணமகன் மற்றும் மணமகளின் உறவினர்களும், இலங்கை கிரிக்கெட் அணி வீரர்களும் கலந்து கொண்டனர்.

இவர்களது திருமணத்தின் சாட்சியாளர்களாக ஜனாதிபதி மற்றும் பாதுகாப்புச் செயலர் ஆகியோர் கையெழுத்திட்டனர்.

மத்தியூஸ் மணமுடித்த ஹேசானி சில்வா கிரிக்கெட் துறையுடன் சம்பந்தப்பட்டவர் என்றும் இருவருக்குமிடையே கடந்த இரு வருடங்களாக காதல் இருந்ததென்றும் தெரிவந்துள்ளது. (ங)

# விலகினார் பிளேக்

உலக தடகள சம்பியன்ஷிப் போட்டிகளில் இருந்து, காயம் காரணமாக ஜமைக்காவின் யோகன் பிளேக் விலகினார்.

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் 14ஆவது உலகத் தடகள சம்பியன்ஷிப் போட்டிகள் ஓகஸ்ட் 10ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளது.

இதில் உலகின் 'மின்னல் மனிதன்' ஜமைக்காவின் உசைன் போல்ட் உள்ளிட்ட முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்கவுள்ளனர்.

இதிலிருந்து மற்றொரு ஜமைக்கா வீரர் யோகன் பிளேக், (வயது-23), காயம் காரணமாக விலகியுள்ளார். கடந்த 2012, லண்டன் ஒலிம்பிக்கில் 100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் ஓட்டத்தில் இவர் வெள்ளிப்பதக்கம் வென்றிருந்தார்.

கடந்த ஏப்ரல் மாதம் கிங்ஸ்டனில் நடந்த உள்ளூர் போட்டியின் போது பிளேக்கிற்கு தொடையின் பின்பகுதியில் காயம் ஏற்பட்டது. இதனால், ஜமைக்காவில் நடந்த சீனியர் சம்பியன்ஷிப் போட்டியில் இவரால் பங்கேற்க முடியவில்லை.

இருப்பினும், கடந்த 2011 இல், உலக சம்பியன்ஷிப்பில் தங்கம் வென்றதன் அடிப்படையில், மொஸ்கோ போட்டிக்கு தேர்வானார். ஆனால், காயம் முழுமையாக குணமடையாத காரணத்தினால், உலக சம்பியன்ஷிப் தொடரில் இருந்து, பிளேக் விலகியுள்ளார்.'

இதுகுறித்து பிளேக்கின் முகாமையாளர் தெரிவித்ததாவது:-

ஜமைக்காவில் நடந்த சீனியர் சம்பியன்ஷிப் போட்டிகளில் இருந்து பிளேக்கின் செயல்திறனை கவனித்துக் கொண்டிருக்கிறோம். தீவிர ஆலோசனைக்கு பின் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. காயத்தில் இருந்து பிளேக் படிப்படியாக முன்னேற்றம் கண்டுள்ளார். இருப்பினும், முழுமையாக குணமடையாத காரணத்தினால் உலக சம்பியன்ஷிப் போட்டித் போட்டிகளில் இருந்து விலகியுள்ளார்-என்றார்.

# சிக்கினார் சங்வான்



ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில், வீரர்களுக்கு நடத்தப்பட்ட ஊக்கமருந்து சோதனையில், கொல்கத்தா வீரர் பிரதீப் சங்வான் சிக்கியுள்ளார்.

ஆறாவது ஐ.பி.எல் கிரிக்கெட் தொடர், கடந்த ஏப்ரல்-மே மாதங்களில் இந்தியாவில் நடைபெற்றது. இதில் பங்கேற்ற வீரர்களுக்கு ஊக்க மருந்துச் சோதனை நடத்தப்பட்டிருந்தது. இந்தப் பரிசோதனை முடிவுகள் இப்போது வெளியாகியுள்ளன. இதில், கொல்கத்தா அணிக்காக விளையாடிய, மிதவேகப் பந்து வீச்சாளர் பிரதீப் சங்வான் (வயது- 22), ஊக்கமருந்து பயன்படுத்தியுள்ளார் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. டில்லியைச் சேர்ந்த இவர், கடந்த 2008 இல் 19வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணம் வென்ற இந்திய அணிக்காக விளையாடியிருந்தார். ஐ.பி.எல். தொடரில் 2008-2010 பருவ காலத்தில் டில்லி அணிக்காக விளையாடினார்.

இந்த வருடம் கொல்கத்தா அணிக்காக இரு போட்டிகளில் (பெங்களூர்,ஹைதராபாத்) விளையாடினார். இதில் இலக்குகள் எதனையும் அவர் கைப்பற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ங)

# மீண்டும் மார்ட்டினா

ஓய்வுபெற்ற முன்னாள் முதல் நிலை ரென்னிஸ் வீராங்கனையான சுவிட்சர்லாந்தின் மார்ட்டினா ஹிங்கிஸ் மீண்டும் போட்டியில் பங்கேற்க உள்ளார்.

சுவிட்சர்லாந்து வீராங்கனையான மார்ட்டினா ஹிங்கிஸ்(வயது 32) ஒற்றையரில் 5, இரட்டையரில் 9 கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள் வென்றுள்ளார்.

முன்னாள் முதல்நிலை வீராங்கனையான இவர், 2007இல் ஊக்கமருந்து சோதனையில் சிக்கியதனால், ரென்னிஸ் அரங்கில் இருந்து விடைபெற்றார்.

இந்த நிலையில் மீண்டும் ரென்னிசிற்கு திரும்பியுள்ள இவர், இரட்டையர் போட்டிகளில் பங்கேற்க முடிவு செய்துள்ளார்.

ஜூலை 29ஆம் திகதி தொடங்கும் கலிபோர்னியா பகிரங்கத் தொடரில் சுலோவாகியாவின் டேனியலா ஹண்டுசோவாவுடன் இணைகிறார்.

இதுகுறித்து மார்ட்டினா ஹிங்கிஸ் கூறுகையில், போட்டியில் விளையாடும் எனது வேகம் இன்னும் அப்படியே தான் உள்ளது. கலிபோர்னியா பகிரங்கத் தொடரில் விளையாட ஆர்வமாக உள்ளேன்-என்றார். (ங)

# வழக்கு தொடர்பில் ஆர்தர் ஏமாற்றம்

ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையை எதிர்த்து நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கு, தற்போது வெளியாகியுள்ளதால் ஏமாற்றம் அடைந்துள்ளேன் என்று ஆஸி. அணியின் முன்னாள் பயிற்சியாளர் மிக்கி ஆர்தர் தெரிவித்துள்ளார்.


ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் பயிற்சியாளர் மிக்கி ஆர்தர் அணியின் தொடர் தோல்வி மற்றும் வோர்னர் குறித்த சர்ச்சை காரணமாக ஒப்பந்தம் முடியும் முன்பே பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

இதனால் கோபமடைந்த மிக்கி ஆர்தர் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையிடம் 4 கோடி டொலர் நஷ்டஈடு கோரி மெல்போர்ன் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

எனினும் அந்த வழக்குத் தொடர்பான விவரங்கள் தற்போது பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளன. அதையடுத்தே மிக்கி ஆர்தர் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஆர்தர் கூறுகையில்,

நீதிமன்றத்தில் நான் சமர்பித்த வழக்கு தொடர்பான இரகசிய ஆவணங்கள் ஒரு சிலரால் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது. இது துரதிருஷ்டவசமானது. இதனால் மிகவும் ஏமாற்றமாக உள்ளது.



வோட்சனுக்கும், அணித் தலைவர் கிளார்க் இருவருக்கும் இடையே நீண்ட நாள்களாக ஒத்துப்போகவில்லை. வொட்சன் ஆஸ்திரேலிய அணியின் புற்றுநோய் என்று மைக்கல் கிளார்க் என்னிடம் தெரிவித்தார். அந்தப் பிரச்சினைகளில் என்னைப் பலிக்கடா ஆக்கியுள்ளனர். நான் தென்னாபிரிக்காவை சேர்ந்தவன் என்பதால் இனவெறி பாரபட்சம் பார்த்தனர்" என்று தெரிவித்துள்ளார் ஆர்தர்.(ற)



# கிரிக்கெட் தான் எப்போதும் முதலிடம்

இந்தியாவில் எப்போதும் கிரிக்கெட்தான் முதலிடத்தில் இருக்கும் என்று கருத்துத் தெரிவித்துள்ளார் அமெரிக்காவின் தேசிய கூடைப்பந்து சங்க நட்சத்திர வீரர் கிறிஸ் போஷ்..

இந்தியாவில் கூடைப்பந்து விளையாட்டை ஊக்குவிக்கும் வகையில் நட்சத்திர வீரர் கிறிஸ் போஷ் முதல் முறையாக இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

அங்கு செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே கிறிஸ் போஷ் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

"கூடைப்பந்து விளையாட்டு இந்தியாவில் மிகவும் பிரபலமான விளையாட்டு என்று நான் நினைக்கவில்லை. அமெரிக்காவில் கூட அது மிகவும் பிரபலமான விளையாட்டு அல்ல. அமெரிக்காவில் கால்பந்து எப்போதும் ராஜாவாக இருக்கும்.

ஆனால் நிறைய மக்கள் கூடைப்பந்தாட்டத்தை விரும்பமாட்டார்கள் என்று அர்த்தம் அல்ல. மற்ற விளையாட்டுகளைப் போல் இந்தியாவில் கூடைப்பந்து விளையாட்டும் பிரபலம் ஆகும். ஆனால், கிரிக்கெட் தான் எப்பேரதும் முதலிடத்தில் இருக்கும்.

கிரிக்கெட் விளையாட்டு எப்போதும் தேசிய விளையாட்டாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

ஆனால், மற்றொரு விளையாட்டையும் விரும்புவது நல்லது. எதிர்காலத்தில் இந்திய வீரர் தேசிய கூடைப்பந்து சங்க தரவரிசையை பெறுவார் என்ற நம்பிக்கை உள்ளது" என்று தெரிவித்தார் கிறிஸ் போஷ்.

போஷ் இடம்பெற்றுள்ள மியாமி ஹீட் அணி கடந்த ஆண்டு தேசிய கூடைப்பந்து சங்க சம்பியன் கிண்ணம் வென்றதுடன், இந்த ஆண்டும் கிண்ணத்தை தக்க வைத்துள்ளது. (ற)

# ஸ்ரீலங்கா பிறீமியர் லீக் அணி உரிமை சூதாட்டக்காரருக்கு?

ஸ்ரீலங்கா பிறீமியர் லீக் தொடரின் அணிகளுள் இரண்டு அணிகளை சூதாட்டக்காரர்கள் உரிமையாகக் கொண்டிருந்தனர் என்று தற்போது தகவல்கள்வெளியாகியுள்ளன.

அத்தோடு அணியொன்றின் உரிமையாளர் தனது அணியின் சிரேஷ்ட வீரரொருவரை போட்டி நிர்ணயத்தில் ஈடுபடக் கோரினார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை உத்தியோகபூர்வமான தகவல்களெவையும் வெளியாகாத நிலையில், ஊடகமொன்று இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளது.


இவ்வாண்டு ஆரம்பத்தில் அணியொன்றின் உரிமையாளர் தனது அணியின் சிரேஷ்ட வீரரொருவரை அழைத்து, போட்டி நிர்ணயத்தில் ஈடுபடுமாறு கோரியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவ்வாறு கோரியவர் றுகுண றோயல் அணியின் உரிமையாளர் எனவும், அவ்வாறு கோரப்பட்டவர் இலங்கையின் சிரேஷ்ட வேகப்பந்து வீச்சாளர் ஒருவர் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

வெளியாகியுள்ள தகவல்களின் அடிப்படையில், அந்த வீரர் லசித் மலிங்கவாக இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அணியின் உரிமையாளரின் நடத்தைகள் குறித்து, அந்த வீரர் சர்வதேசக் கிரிக்கெட் சபையின் ஊழல் தடுப்புப் பிரிவிடம் முறையிட்டதாகவும், இச்சம்பவம் தொடர்பாக சர்வதேசக் கிரிக்கெட் சபை விசாரணைகளை நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ற)

## குழந்தையை வரவேற்கும் ஸ்மித்



தென்னாபிரிக்க அணியின் அணித்தலைவர் கிரீம் ஸ்மித் மனைவிக்கு ஆண் குழந்தை பிறந்ததுள்ளது.

தென்னாபிரிக்க டெஸ்ட் கிரிக்கெட் அணியின் அணித் தலைவர் கிரீம் ஸ்மித். 2011 ஆண்டு ஓகஸ்ட்டில் அயர்லாந்து பாடகி மார்கன் டீனேவை மணமுடித்தார். கடந்த ஆண்டு இவர்களுக்கு பெண் குழந்தை பிறந்தது.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் டீனேவுக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது. மனைவி மற்றும் புதிதாக பிறந்த குழந்தை அடங்கிய போட்டோவை, தனது டுவிட்டர் வலைத்தளத்தில் வெளியிட்டுள்ளார்.

அதில், "நானும், என் மனைவியும் புதிதாக வந்துள்ள மகனை, பூமிக்கு வரவேற்கிறோம். நான் மகிழ்ச்சியில் உள்ளேன். என் மனைவி மீது அன்பும், மரியாதையும் அதிகரித்துள்ளது" என்று தெரிவித்துள்ளார்.(ற)

பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
கருத்தரங்கு (இலவசம்)
காலம்:- 20.07.2013 - சனி பி.ப.01.00 மாலை
A/L 2015
அறி முகப்படுத்தப்பட்ட புதிய பாடத்துறை
தொழில்நுட்பவியல்
★Engineering Technology ★Bio Systems Technology
★Science for Technology
இப்பாடத்துறை தொடர்பான சகல விடயங்களும் உள்ளடக்கிய கருத்தரங்கு. இத்துறை சார்ந்த விரிவுரையாளர்களால் நடத்தப்பட உள்ளன.
(சி/10536)
Note:- இந்த இலவச கருத்தரங்கில் இத்துறை சார்ந்த சகல பாடசாலை மாணவர்களும் பங்கு பற்றி பலன் அடையுமாறு கேட்டுக் கொள்கின்றோம். அன்றைய தினம் வருகைதரும் மாணவர்களுக்கு கையேடுகள் இலவசமாக வழங்கப்படும்.

A/L வரலாறு - 2013
மாபெரும் கருத்தரங்கு
வளவாளர்கள்
R.M சத்தியன் M.Ed. (விரிவுரையாளர்)
M.பத்மன் M.A (History)
M.சுஜிகரன் B.A.
S.S.தாஸ் B.A.(Hons)
இடம்:- D.M.I. யாழ். நகர்.
காலம்:- 21.07.2013 (ஞாயிறு) 22.07.2013 (திங்கள்)
நேரம்:-காலை 8 மணிமுதல் 12 மணிவரை பி.ப. 1 மணிமுதல் 5 மணிவரை.
கட்டணம் 500/=
இடநெருக்கடியைத் தவிர்ப்பதற்காக வரையறுக்கப்பட்ட அளவிலேயே அனுமதிகள் வழங்கப்படும்.
(30841)

விற்பனைக்கு (இஞ்சின் கியர் பொக்ஸ்)
TOYOTA MITSUBISHI ISUZU
வாகனங்களுக்கான இஞ்சின் கியர் பொக்ஸ் விற்பனைக்கு உண்டு.
(4BD1, 4BE1, 4BC2, 4D32, 4D33, 4D34, 1KZ, 2C) என்பன விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0777238615

SLEAS விசேட கருத்தரங்கு
சாவகச்சேரி இந்துக் கல்லூரி அருகில்
புதிய பட்டப்படிப்புகள் கல்லூரியில்
சனி, ஞாயிறு மாலை 5.00-7.00மணி வரை
ஆரம்பம்:- 21.07.(ஞாயிறு).5.00மணி
த்வசேகர் ஆசிரியருடன் முன்னணி விரிவுரையாளர்கள் பங்கு பற்றுவர்
T.P:- 0754164564

NEC மணிக்கூட்டு வீதி, யாழ்நகர். (பெருமாள் கோயில் அருகில்)
A/L 2015
தொழில்நுட்ப பிரிவு
*Science for technology By- N.Easan B.sc, PGDE
* Engineering Technology By- P.Theesan B.sc
ஆரம்பம்- 20.07.2013 சனி 8.00 மணி
அனுமதிகளை உடன் பதிவு செய்யவும்.
0774696695

NEW SCIENCE HALL JAFFNA
2015 A/L
(TECHNOLOGY SUBJECT STREAM)
தொழில் நுட்பவியல் கற்கை நெறி
(சி/10550)
ஆரம்பம்:- 28.07.2013

Bachelor of Information Technology (BIT) External Degree of University of Moratuwa
Now In Jaffna Only @ ESOFT Computer Studies (Pvt) Ltd
யாழ் மண்ணில் மொறட்டுவ பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரே ஒரு நிறுவனம் ESOFT
புதிய பிரிவுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன
நுழைவுத்தகுதிகள்
உயர்தரத்தில் எந்தத்துறையிலாவது ஒரே தடவையில் 3 பாடச்சித்தி மற்றும் சாதரணதரப்பரீட்சையில் கணித பாடத்தில் "C" தரச்சித்தி.
விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் நாளன்று
✓ பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் (ஆங்கிலம்)
✓ கல்விச் சான்றிதழ்கள் (O/L,A/L)
✓ NIC பிரதி என்பவற்றை உறுதிப்படுத்தி ஒப்படைக்கவும்.
இறுதி சந்தர்ப்பம்!!
Application Closing Date 24.07.2013 புதன்கிழமை
அத்துடன்,
University of Moratuwa
Bank of Ceylon
A/C No 70993353 எனும் இலக்கத்திற்கு ருபா 750 செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டையும் இணைத்து எமது கிளையில் ஒப்படைக்கவும்.
மேலதிக தொடர்புகளுக்கு : 077 372 8439
ESOFT METRO CAMPUS -JAFFNA
No.137, K.K.S Road, Jaffna | Tel : 021 750 1120
HOTLINE : 077 309 9 308

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.07.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.